

பனிமலர் - இதழ் 2
புரட்டாசி-ஐப்பசி 1990
விலை பவுண்டு 1.50.




# பனிமலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தந்தையும் மகளும் - 1989

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## குறிதவறிய இலக்குகள்.

ஹெலிகொப்டர்கள் அதிவேக துப்பாக்கிச் சன்னங்களைப் பொழிவதுடன் சிறிய பெற்றோல் குண்டுகளையும் போடுகின்றன. பொம்மர்களைப் பொறுத்தவரை அவற்றிற்கு வழிகாட்டும் ஹெலிகொப்டர்களிலிருந்து அறிவுறுத்தல்களும் உத்தரவுகளும் வழங்கப்படுகின்றன. (இவற்றை எம்மால் FM அலைவரிசையில் ரேடியோவில் கேட்கக் கூடியதாக உள்ளது.) குண்டுகளைப் போடுமுன் பொம்மர் பிளேன்கள் தாழ்வாக நீந்தும். அப்போது நாம் பங்கருக்குள் ஒழிந்து கொள்வோம். சீனத் தயாரிப்பான Cargo plane கள் கம்பீரமாக வட்டமிட்டபடி 300Kg நிறையுள்ள குண்டுகளைச் சாதாரணமாகப் போடுகின்றன. அத்துடன் இவை ஒரு தடவை வரும்போது 7 முதல் 8 குண்டுகள் வரை தனக்கு விருப்பமானபடி போட்டுவிட்டுச் செல்கிறது. அவை போடப்படும்போது - 3000 முதல் 3500 மீற்றர் உயரத்திலிருந்து போடப்படுகின்றன. மிகச் சிறிதாக தோன்றிய போதும் அப் பிரதேசம் முழுவதும் செந்நிறப் புகையைக் கிளப்பியபடி காது செவிடுபடும் சத்தத்துடன் வெடிக்கின்றன. ஒவ்வொரு குண்டும் குறைந்த பட்சம் 10 வீடுகளை நிர்மூலமாக்குகிறது. 20 வீடுகளை பல்வேறு முறையில் சேதப்படுத்துகிறது. இது மிகவும் உயர்ந்து பறப்பதுடன் இலக்குகளிலிருந்து பல தூரத்திற்கு அப்பால் தனது குண்டுகளைப் போடுகின்றது. முற்றாக இருளில் மூழ்கியிருக்கும் குடாநாட்டின் மீது வெளிச்சமில்லாத விமானத்திலிருந்து நடாத்தப்படும் தாக்குதலே மிகப் பெருமளவு துயரத்தையும் அச்சத்தையும் தருவனவாகும்.

## இழிமையிலும் கீழாக

யூலை 19ம் திகதி பேராயர் இல்லம், சென். பற்றிக்ஸ் கல்லூரி, யாழ் ஆயர் ஆலயம், தொடர்பகம் (OMI வதிவிடம்) ஆகியவை அமைந்துள்ள இடத்தின் மீது ஒரு புது வடிவிலான 'குண்டு' வீசப்பட்டது. இக் குண்டுகள் ஒயில் ரின்கள் மற்றும் 'பைபர் கான்' (Fiber can) களில் அடைக்கப் பட்ட அழுக்குகள், மனித கழிவுகள், பழுதான துர்நாற்ற எண்ணைகள் முதலியவை. இவை பயங்கர நோய்களைப் பரவ வைக்கும் கிருமிகளைக் கொண்டவையா என்ற அச்சம் பரவலாக நிலவுகிறது.

*யாழ் குடாநாட்டின் பல்வேறு கன்னியர் மடங்களைச் சேர்ந்த கன்னியாஸ்திரிச் சகோதரிகள் கொழும்பிலிருந்து வெளியாகும் 'சரிநிகர்' பத்திரிகைக்கு அனுப்பியிருந்த கடிதத்திலிருந்து சில பகுதிகள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

PANIMALAR - 2
(SNOW FLOWER)
A Tamil Bi-Monthly
September - October 1990.

Published by:
Tamil People New Cultural Group
BCM POLARIS
LONDON WC1N 3XX

Type set by:
R.Gurunathan
New Malden, Surrey.
Tel: 081 949 8185.

Printed by:
**Set Line Data Ltd.**

பனிமலர் - 2
புரட்டாசி-ஐப்பசி 1990

வெளியீடு:
தமிழ் மக்கள் புதிய கலாச்சாரக் குழு
BCM POLARIS
LONDON WC1N 3XX

# ஜன்னல்களைத் திறந்து வைப்போம்!

எமது தாயகம் மீண்டும் குருதியில் மூழ்கித் தத்தளிக்கிறது. எமது மக்களின் விடுதலையுணர்வைக் குழிதோண்டிப் புதைக்க எந்தச் சாத்தானோடும் கூட்டுச் சேரத் தயாரென முழங்கிய சிங்களப் பேரினவாதிகள், தம் படுகொலைக் கரங்களை விரித்தபடி வானத்தின் மேலாகத் தாவுகின்றனர். தரையிலோ, கொலைவெறிக் குழுக்கள் தேசத்தைச் சூறையாடி, பிணக்குவியல்களின் மேல் நடனமிடுகின்றன. பனிமலரின் முதலாவது இதழ் அச்சில் இருந்தபோது ஸ்ரீலங்கா அரசின் இனவெறித் தனத்திற்கு இடையில் நூற்றுக் கணக்கான முஸ்லிம் மக்கள் பள்ளிவாசல்களிலும் வீடுகளிலும் தெருக்களிலும் வைத்து சுட்டும், வெட்டியும் படுகொலை செய்யப்பட்டார்கள். மழலை மாறாத சின்னஞ் சிறுவர்களும், பெண்களும், வயோதிபர்களும் இப் பயங்கரத்திற்குப் பலியானார்கள் என்பது இப் படுகொலைகளின் கோரத்தைத் தெரியப் படுத்துவதற்குப் போதுமானது.

இப் படுகொலைகளுக்குப் பதிலடியாக பல நூற்றுக் கணக்கான தமிழ் மக்கள் கொல்லப் பட்டார்கள். வீடுகளினின்று விரட்டப் பட்டார்கள்.

யார் எவரைக் கொன்றார்கள் என்ற கேள்வியை விட, ஏன் இக் கொலைகள் நடந்தன என்ற கேள்விக்கு விடை தேடுவது, எதிர் காலத்தில் இவ்வாறான இனப்படு கொலைகள் நிகழாதிருக்கவும், முஸ்லிம் மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் இடையில் புரிந்துணர்வு ஏற்படவும் உதவும்.

எந்த இனத்தின் தேசியத் தலைவனென்று தன்னை முரசறைந்து கொள்கிறாரோ, அதே சிங்கள இனத்தின் லட்சக் கணக்கான இளைஞர்களின் எதிர்காலத்தை பழைய ரயர்களில் போட்டெரித்துப் பாடையாக்கிய பிரேமதாசாவும் கும்பலும், தமிழ் மக்களின் காவலனாக வேடமிட்டு இன்று போர் புரிகின்றனர். ஜே.ஆர். ஜெயவர்த்தனா போல 'போர் என்றால் போர்' என்று இவர்கள் முழங்கவில்லை. மாறாகத் தமிழ் மக்களின் தேசிய எழுச்சியை மழுங்கடிக்க, முன்னர் கையாண்ட திட்டங்களோடு வெள்ளை ஏகாதிபத்தியம் வாரிசுகளுக்கு கையளித்துச் சென்ற பிரித்தாளும் தந்திரமென்னும் 'ராஜ தந்திரத்தை'ப் பிரயோகித்துத் தமிழரின் தேசியத் தன்மையைக் குலைக்க முயல்கின்றனர்.

இதன் ஒரு கட்டமாகவே இன்று முஸ்லிம் மக்கள் வாழ்ந்து வருகின்ற பிரதேசங்களில் நிணநாற்றம் நிறைகின்றது. தமிழ்-முஸ்லிம் மக்களினது கடந்த கால அரசியற் தலைமைகள், இம் மக்களின் நலன்களை தமது வர்க்கத்தினது லாபங்களுக்காக அடகு வைத்து செயற்பட்டதே இதற்கான அடிப்படைக் காரணமாகும்.

இந்தக் கோட்டாப் பேர்வழிகள் தொடங்கிவைத்த கோளாறைக் களைந்தெறிந்து பேரினவாத அரசுக் கெதிரான சிறுபான்மை இனக் குழுக்களினதும் தமிழ்த் தேசிய இனத்தினதும் போராட்ட ஐக்கியத்தை வளர்த்தெடுக்க தமிழ்த் தேசிய விடுதலை இயக்கங்கள் தவறிவிட்டன. 'தமிழ்த்தேசிய இனம்', 'தமிழ்பேசும் மக்கள்' என்ற இரு வேறுபட்ட கருத்துக்களையும் தவறாக ஒன்றென விளங்கிக் கொண்டமையே இவர்கள் மத்தியில் நிலவிய பிரச்சனையாகும்.

முஸ்லிம்கள் பற்றி தமிழர் மத்தியில் நிலவிவந்த கருத்து, அவர்கள் தமிழ்த் தேசிய இனத்தின் ஒரு பகுதியினர் என்பதாகும். இக் கருத்துதான் விடுதலை இயக்கங்களால் முஸ்லிம் மக்களுக்கு ஏற்பட்ட துயரங்களுக்கு அடிப்படைக் காரணம். முஸலிம்கள் தமிழர்களின் ஒரு பகுதியினர் என்ற கருத்தின் அடிப்படையில்தான், தமிழர்களிடையே செயற்படும் விதத்தில் - (தனிநபர் கொலை, கொள்ளை, ஆட்கடத்தல்) - எவ்வித வேறுபாடுமின்றி செயற் பட்டார்கள். இப் போக்கு இன்னமும் உக்கிரமடைந்து 1986இல் ஈரோசினரால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யப் பட்டதாகக் கூறப்படும் மன்னார் பள்ளிவாசல் கொலைகள் வரை வளர்ந்தது. இதே காலப் பகுதியில் மூதூர் பிரதேசத்தில் புலிகளின் போராளி ஒருவர் அதிரடிப் படையிடம் பிடித்துக் கொடுக்கப் பட்டதற்குப் பதிலடியாக முஸ்லிம் கிராமமொன்று தாக்கப்பட்டது.

1987 செப்டம்பர் 3ம் திகதி மூதூர் உதவி அரசாங்க அதிபர் ஹபீப் மொகமது தமிழ் விடுதலை இயக்க மொன்றால் கொலை செய்யப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து கல்முனையில் நடத்தப்பட்ட ஊர்வலம் அடித்துக் கலைக்கப்பட்டது. 1987 டிசம்பரில் காத்தான்குடியிலும் அயற் கிராமங்களிலும் 28 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர்.

1988 மார்ச்சில் கல்முனை தாக்கப்பட்டு 25 முஸ்லிம்கள் கொல்லப்பட்டனர். சாய்ந்தமருது, மாளிகைக்காடு ஆகிய பகுதிகளில் நூற்றுக்கணக்கில் வீடுகள் எரிக்கப்பட்டன.

1988 நவம்பர் 17ல் EPRLF, TELO, ENDLF போன்றவற்றின் தமிழ்த் தேசிய ராணுவம் (TNA) 40 முஸ்லிம் பொலிஸ்காரரை தனியே பிரித்தெடுத்து படு கொலை செய்தது. 1989 ஜூனில் யாழ்ப்பாணத்தில் எழுபதிற்கும் மேற்பட்ட அங்காடி வியாபாரிகளின் கடைகள் எரிக்கப்பட்டன.

முஸ்லிம் வெறுப்புணர்வு மிகுந்த இந்திய ராணுவத்தின் துணையுடன் 1989ல் சம்மாந்துறை முதலான முஸ்லிம் கிராமங்களில் மேற்படி கும்பல்கள் கடத்தல், கொலை, கொள்ளைகளில் ஈவிரக்கமின்றி ஈடுபட்டன.

இச் சிறு பட்டியல் முஸ்லிம் மக்கள் மத்தியில் எழுந்து வளர்ந்து வந்த அச்சத்தையும், தமிழின எதிர்ப்பையும் புரிந்து கொள்ள உதவும்.

1985ம் ஆண்டு மூதூரில் பள்ளிவாசல் உட்பட பல இடங்களில் சிறு களவுகளில் ஈடுபட்டு வந்த முஸ்லிம் ஒருவருக்கு தமிழ்க்குழு (TELO எனச் சொல்லப்பட்டது) வொன்று விதித்த மரண தண்டனையை, மின் கம்பத்திற் கட்டிச் செயற்படுத்தியது. இதனையடுத்து அங்கிருந்த தமிழ்க் குடும்பங்களின் வீடுகளின்மீது தாக்குதல்கள் இடம்பெற்றன. அவர்கள் அருகிலிருந்த தமிழ்க் கிராமங்களுக்கு இடம் பெயர்ந்தனர். அத் தமிழ்க்குழு, அதற்குப் பழி வாங்க முஸ்லிம் கிராமங்கள்மீது தாக்குதல் நடத்தியது. இந்தச் சம்பவத்தினால் தமிழ்-முஸ்லிம் மக்களுக்கிடையில் விரிசலை ஏற்படுத்த ஸ்ரீலங்கா அரசு காத்திருந்த காலம் கனிந்தது.

மூதூர் எம்.பி.யும் உதவியமைச்சருமான மகறூஃப், இவ்வாறான தாக்குதல்களிலிருந்து மூதூர்ப்பகுதி முஸ்லிம் மக்களைப் பாதுகாப்பதற்கு உதவி புரியுமாறு அப்போதைய தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலியிடம் வேண்டுகோள் விடுத்தார். வெறு வாய்க்கு அவல் கிடைத்த அத்துலத் முதலி, மகறூஃப் மூலமாக முஸ்லிம் இளைஞர்களைத் திரட்டி 'முஸ்லிம் ஊர்காவற்படை' எனும் பெயரில் ஆயுதப் பயிற்சியும் ஆயுதங்களும் வழங்கினார். இதன் பின்னர் தமிழ்க் குழுக்களுக்கும் இவ் ஊர்காவற்படைக்கு மிடையிலான மோதல்கள் வளரலாயின.

மறுபுறத்தில் இவ்வாறான வேலைகள் 'ஜிகாத்' போன்ற முஸ்லிம் தீவிரவாதக் குழுக்களின் உருவாக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் வழிகோலிற்று. ஸ்ரீலங்கா அரசு இந்த நிலைமையை மிகுந்த அவதானத்துடன் கையாண்டு 'ஜிகாத்'தை வளர்ப்பதற்கு மிகுந்த அக்கறை எடுத்துக் கொண்டது. இது தவிர மத்திய கிழக்கிலிருந்தும் 'ஜிகாத்'திற்கு உதவி கிட்டிற்று.

"தமிழ் பயங்கரவாதிகள் முஸ்லிம்களை துன்புறுத்துவதற்கு முழுக்காரணம் வட-கிழக்கில் ஒரு தமிழ் நாட்டை அமைப்பதற்கு முஸ்லிம்கள் எதிர்ப்புச் சக்தியாக இருக்கின்றார்கள் என்பதுதான். அரசாங்கத்தோடு சேர்ந்து இலங்கையின் இறைமையையும், ஒருமைப்பாட்டையும் காப்பதற்கு முஸ்லிம்கள் முன்வருவார்கள் என்ற பீதிதான் தமிழ் பயங்கரவாதிகள் முஸ்லிம்களை அடிமைப்படுத்த எடுக்கும் சகல முயற்சிகளுக்கும் காரணம்."

வீரகேசரி

"முஸ்லிம்கள், முஸ்லிம் மாகாணக் கோரிக்கையை முன்வைப்பதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பிருந்தே தமிழ் பயங்கரவாதிகள் முஸ்லிம்கள் மீது கட்டவிழ்த்து விட்ட வன்முறைகளும், படுகொலைகளும் நினைவுகூரப் படவேண்டும்."

வீரகேசரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD

"இன்று வடக்கு கிழக்கில் முஸ்லிம்கள் கொலை செய்யப் படுவதற்கும், அகதிகளாக்கப் படுவதற்கும், சொத்துக்களை இழந்துள்ளதற்கும் அரசாங்கமும் பங்களிப்புச் செய்துள்ளது என்பதை வெளிச்சத்துக்குக் கொண்டு வருவதற்கு முஸ்லிம் காங்கிரஸுக்கு நேரம் பிடிக்காது."

வீரகேசரி

பலாத்காரமான வழிமுறைகளிலோ, பயமுறுத்தல்கள் மூலமோ அரசியற் பிரச்சனைகளைத் தீர்த்து விடமுடியாது என்பதை நாம் அறியவும் உணரவும் எவ்வளவு பெரிய விலை கொடுக்க வேண்டியிருக்கிறது. இவ்வாறானதொரு பெரிய இடைவெளியை, தமிழ்-முஸ்லிம் மக்களிடையே ஏற்படுத்தியதற்கான பாரிய பொறுப்பை தமிழ்க் குழுக்கள் அனைத்தும் ஏற்றுக் கொண்டே ஆகவேண்டும்.

முஸ்லிம்கள் மதத்தால் இஸ்லாமியர்கள், பேசும் மொழியால் தமிழர்கள் எனும் கருத்து பொய்யானது.. அவர்கள் தங்களை 'இஸ்லாம்' என்னும் மதத்தினூடாகவே அடையாளங் காண்கின்றனர். முஸ்லிம்கள் தமிழ் பேசும் மக்கள் என்ற வரையறைக்குள் உள்ளடங்குவரேயன்றி, இய்க்கங்கள் அடையாளங் காட்ட முனையும் தமிழ்த் தேசிய இனத்துள் அடங்கமாட்டார்கள். தமிழ் பேசும் மக்கள் என்னும் பதம் இலங்கைத் தமிழர், முஸ்லிம்கள், மலையக மக்கள் (மலையகத் தமிழர்) என்போரை உள்ளடக்கும். தமிழ்த் தேசிய இனமென்பது இதிலிருந்து வேறுபட்டது. மலையக மக்கள் மத்தியிலும், முஸ்லிம்கள் மத்தியிலும் அண்மைக் காலத்தில் அவர்கள் தனித் தேசிய இனத்தவர்கள் என்ற கருத்து முன்வைக்கப் படுகின்றது. இது விவாதத்திற்குரியது. இப்போதைக்கு இவர்கள் தனித்துவமான சிறுபான்மை இனக்குழுக்கள் என்பதை ஏற்றுக் கொள்வது மிகவும் முக்கியமானதாகும்.

சிங்கள-பௌத்த பேரினவாதத்தின் ஒடுக்குமுறையின் கீழ் நெரிபடும் அவலம் தமிழ் பேசும் மக்கள் அனைவருக்கும் பொதுவானது. ஒவ்வொரு பிரிவினரதும் தனித்துவத்தையும், பண்பாட்டையும் கனம் செய்வதன் மூலமே எதிர்காலத்தில் தமிழ் பேசும் மக்களிடையில் ஐக்கியத்தையும், உரிமைகளுக்கான போராட்டத்தையும் உறுதிப் படுத்தலாம்.

முஸ்லிம் மக்களை, அவர்கள் வாழ்ந்துவரும் பிரதேசங்களிலிருந்து வெளியேற்றுவதோ, அவர்களைப் படுகொலை செய்வதோ தமிழீழ தேசிய விடுதலைப் போராட்டத்திற்கும், தமிழ்-முஸ்லிம் மக்களது நீண்டகால நலன்களுக்கும் பாதகமாகவே அமையும். தமிழ்-முஸ்லிம் மக்களின் ஒற்றுமையும், இலங்கையின் அமைதியும் கனவுகளாகப் போய்விடும் அபாயமே இன்று நிலவுகிறது.

நாங்கள் ஜன்னல்களைத் திறந்து வைப்போம்!

நிண நாற்றமும், அரசியல் அறியாமையும், அறிய மறுப்பதும் நம்மிடமிருந்து அகன்று போகட்டும்!

புதிய காற்றும் வெளிச்சமும் உள்ளே வரட்டும்!

11.11.1990.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிப்போக்கன் டயறி

தொடக்கத்திலிருந்தே இந்தப் பிரச்சனை இருந்து கொண்டுதான் வருகுது. இவங்களுக்கு அரசியல் பிரச்சினையளைப் பற்றி கொஞ்சம்கூட அக்கறை கிடையாது. முதலிலை – இந்திய ராணுவம் வாறதுக்கு முந்தி – எனக்கு இப்பபோலை ஞாபகம் இருக்குது... இந்தியா எல்லாருக்கும் ரெயினிங் குடுத்து 'ஆம்ஸ்'உம் குடுத்து தயார் செய்யேக்கை நான் சந்திக்கிற எல்லாப் பெடியளிட்டையும் சொல்லியிருக்கிறன், 'தம்பியவை உது இந்தியாக்காறன் தன்ர லாபத்துக்காக விளையாடிறான். மோட்டுத்தனமாய் மாட்டுப்பட்டிடாதேங்கோ' எண்டு. ஆர் கேட்டுதுகள். கெடுகுடி சொற்கேளாது எண்ட பழங்கதை போலை எல்லாம் அவன்ரை வாலைப் பிடிச்சுக்கொண்டு நிண்டுதுகள். பிறகு ஒண்டுமாறி ஒண்டாய் சுடுபட்டுதுகள். புலியள் எல்லாரையும் சுட்டுத்தள்ளிப் போட்டு இந்தியாவுக்கு வால்பிடிச்சு தங்களை அழிக்கத் திட்டம் போட்டதாலதான் சுட்டது எண்டு சொன்னாங்கள். எனக்கு இது பெரிய அதிர்ச்சியைத் தரேல்லை. துவக்கில்லாமல் அரசியல் நடத்தின காலத்திலேயே ஆளுக்காள் அடிபட்டும், வெட்டுப்பட்டும் அரசியல் நடத்தின நாடுதானே எங்கடை நாடு. துவக்கிருந்த படியால் சுடுபட்டாங்கள் எண்டு நான் யோசிச்சன். அப்பவாவது ஒருத்தனெண்டாலும் இந்தியாக்காரன் துவக்கையும் தந்து 'றெயினிங்கையும்' தந்து எங்களுக்கை சுடுபட விட்டிருக்கிறான் எண்டு யோசிப்பாங்கள் எண்டு பாத்தன். ஒருத்தரும் யோசிக்கேல்லை. எல்லாரையும் துரத்திப் போட்டு புலியள் மட்டும் நிண்டாங்கள். சரி பரவாயில்லை இவங்களாவது நிக்கிறாங்கள் எண்டு மனம் திருப்திப் பட்டுது. இந்தியாவைப் பற்றி கொஞ்சம் விமரிசிக்கிறாங்கள் போலையும் பட்டுது. ஆனால் என்ன ஆச்சரியம்? இந்தியா வந்து இறங்கினவுடனை ஜீப்புகள்ளை புலிக்கொடியைக் கட்டிக்கொண்டு அவங்கள்தான் முன்னுக்கு நிண்டாங்கள்.

இந்தியாக்காரன் சாப்பாடு போடேக்கை நான் திரும்பவும் இவங்களோடை கதைச்ச நேரத்திலை சொன்னனான் 'தம்பியவை கனக்க சந்தோசப் படாதேயுங்கோ, உவனள் சாப்பாடு போட்டது இலங்கை அரசாங்கத்தை வெருட்டவே ஒழிய உங்களைப் பாதுகாக்கிறதுக்கோ அல்லாட்டி தமிழன்ரை பிரச்சனையளைத் தீர்க்கிறதுக்கோ இல்லை' எண்டு. ஆனால் இவனவை எதையாவது கேட்டாத்தானே. தாங்கள் நினைச்சது சரி எண்டு நிப்பாங்கள்.

இந்தியா சாப்பாடு போடிறதுக்கு முதல் புலியள் கிட்டத்தட்ட தமிழீழம் முழுவதையும் பிடிச்சு வைச்சிருந்தாங்கள் எண்டுதான் சொல்லவேணும். மற்ற இயக்கங்களோடை சேர்ந்து ஆமிக்காறனை அடிச்சுக் கலைக்க இவங்கள் முயற்சி எடுத்திருக்க வேணும். அவன் வெளிக்கிடேலாமல் முகாமுக்கை இருக்கிறநேரம் எல்லா இயக்கங்களையும் மக்களையும் சேர்த்து இவங்கள் சண்டையைத் தொடங்கியிருக்க வேணும், எதிரியை விரட்டுறதுக்கு. அப்ப இலங்கை ஆமியும் சரியான பலவீனமாக இருந்தான். இவங்கள் சேர்ந்தாத்தானே...

ஒருநாள் நான் கேட்டன் நீங்கள் ஒண்டாய் சேர்ந்து அடிச்சால் ஆமியை கலைச்சிடலாம் தானே எண்டு. 'அவங்களை சேரவேண்டாம் எண்டு நாங்கள் மறிக்கேல்லை. வந்து சேரமாட்டினமாம்' எண்டு சொன்னாங்கள். 'வந்து சேர விருப்பமெண்டால் தங்கடை இயக்கத்தை கலைச்சுப்போட்டு வந்து சேரவேண்டியதுதானே...!' எனக்குச் சரியான கோவம் வந்திட்டுது. 'நீங்களும் உங்கட இயக்கமும்... அப்ப நான் சேருறதெண்டால் என்ரை பெண்டாட்டி பிள்ளைக்கு தலைமுழுக்குப் போட்டிட்டே வந்து சேருறது? என்ன பேய்க்கதை பேசிறியள் நீங்கள். பொதுவான பிரச்சினையிலை ஒண்டு சேருறதுக்கு இயக்கத்தை கலைக்கச் சொல்லி என்னண்டு கேக்கலாம்? நீங்கள் ஒரு காலமும் உருப்படமாட்டியள். இராணுவத்தை தனிய நிண்டு ஒருநாளும் முழுசாய் கலைக்கேலாது. மற்ற இயக்கங்கள் மட்டுமல்ல தேசம் முழுவதுமாய் சனங்களையும் போராடத் தயார்ப் படுத்தினால்தான் ஏலும். இல்லாட்டி உள்ளதையும் கெடுத்தான் கொள்ளிக் கண்ணன் எண்டு நாசமறுக்கப் போறியள்' எண்டு சொன்னன்.

சொன்ன மாதிரி நடந்துது. சரியா ஒரு மாசத்திலை அவன் வவுனியா, மன்னார், திருகோணமலை எல்லாத்தையும் பிடிச்சு கடைசியா வடமராட்சியையும் பிடிச்சிட்டான்.

அதுக்குப் பிறகு இந்தியா வந்துது. கூட நிண்டு ஆடிப்போட்டு பிறகு சண்டை பிடிக்கத் துவங்கினாங்கள். சனங்கள் என்ன செய்யிறதெண்டு தெரியாமல் திகைச்சுப் போச்சு. 'சமாதானப் படை எண்டு வந்தவனோடை தேவையில்லாமல் ஏன் சண்டைக்குப் போவான்' எண்டும் சனம் கதைச்சுது. இவங்களோடை ஒரு இழவும் கதைக்கேலாதே. கதைச்சால் சுட்டெல்லே தள்ளுறாங்கள். நானும் பேசாமல் விட்டிட்டன்.

இப்ப யோசிச்சுப் பாக்கேக்கை தெரியுது. எல்லாம் சனங்களை கொஞ்சம்கூட கணக்கெடுக்காமல் தான் நினைச்ச முப்புக்கு நிண்டு ஆடுறாங்கள். கொஞ்சம் எண்டாலும் சனத்தோடையும் பேசிப் பறைஞ்சு எதையும் செய்யவேணும். மூண்டு மாதமாய் பேச்சு வார்த்தை நடத்தேக்கை எண்டாலும் ஒரு கதை சொன்னாங்களே, எதை பேசிறம் எண்டு. போதாததற்கு பிரேமதாசவை நல்லமனிசன், நேர்மையானவன் எண்டும் சொன்னாங்கள். அதுதானே இவயின்ர முதல் பிழை. இப்ப சண்டைபிடிக்கத் தொடங்கினதுக்கு காரணம் சொல்ல முடியாமல் அந்தரப் படுகினம். அவனுக்கு – பிரேமதாசாவுக்கு இது பெரிய வெற்றி! உலகம் முழுக்க இப்ப அவனுக்கெல்லெ சப்போட் பண்ணுது... இவங்கள் இந்தச் சிங்கள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தைக் கேட்கிற கேள்வியிலை உலகத்துக்கு முன்னாலை மானங் கெடுத்தியிருக்கேலாதே? அந்தக் கெட்டித்தனம் இவங்களுக்கு இல்லை. அதுதானே இப்ப பிரச்சினையாய்க் கிடக்குது. போறபோக்கிலை அவன் முழுக்கப் பிடிச்சிடுவான் போலை கிடக்குது. பழையபடி எல்லாத்தையும் முதல்லை இருந்து தொடாங்கவேணும் போலை கிடக்கு.

**ஒகஸ்ட்.**

யாழ்ப்பாணத்து நிலமை ஒரு சதத்துக்கும் உதவாதாம். அங்க கறன்றும் இல்லை, வெளிச்சமும் இல்லை. மெழுகுதிரி நெருப்பட்டியும் கூட இல்லை. சனம் தின்ன வழியில்லாமல் சரியாய்க் கஸ்டப்படுகுது. இருட்டிலை ஒண்டுக்குப் பின்னாலை ஒண்டா ஒம்பது பிளேன் வருகுது. லைற் இல்லாமல் வந்து குண்டுகளை தாறுமாறாய்ப் போடுறான். யாழ்ப்பாணம் ரவுணைக் கண்கொண்டு பாக்கேலாது. முழுக்க தரைமட்டம். சனம் இரவு பகலாய் பங்கருக்கை சீவியம் நடத்துது. வடமராட்சி தாக்கேக்கை எப்பனெண்ட முன்னம் சாப்பாடுபோட்ட இந்தியா இப்ப ஒரு கதையும் இல்லை. என்ன நடக்குது எண்டு கவனமாய் அவதானிக்கினமாம். இப்பவாவது எங்கடை இவங்களுக்கு விசயம் விளங்கினால் சரிதான்.

இண்டைக்கு பேப்பரிலை வந்த நியூசைப் பாக்க எனக்கு தலை வெடிச்சுப் போடும்போலை கிடக்கு. காத்தான்குடி பள்ளிவாசலுக்கை தொழுதுகொண்டிருந்த சோனகச்சனங்களை இவங்கள் போய் சுட்டுப் போட்டாங்கள். குஞ்சுகுருமானையும் தப்பவிடேலை. மொத்தமா நூற்றி நாப்பத்திரண்டு பேர் சரியாம். நாய்ப் பயலுகள். இவங்கள் இப்பிடிச் செய்யுறது இன்னுமின்னும் தமிழன்ரை மானத்தை கப்பலேற்றிற வேலையெல்லே. முதல்ல அன்ராதபுரத்திலை போய் சிங்களச் சனத்தையும் சுடேக்கையும் இப்பிடித்தான் எனக்கு இருந்தது. ஒரு மனிசரோட தலைநிமிர்ந்து கதைக்கேலாமல் எல்லே பண்ணிப் போட்டாங்கள். தனிப்பட்ட சிங்களவனை எண்டாலும் சரி முஸிலிமை எண்டாலும் சரி இவங்கள் சுடேக்கை கதை வேறை. ஆனால் இப்பிடி மொத்தமாய் சுடேக்கை அது ஒரு இனப் படுகொலை எண்டுதானே சொல்லவேணும். இப்பிடி இனவெறி பிடிச்சுச் செய்தால் எங்களுக்கும் அரசாங்கத்துக்கும் என்ன வித்தியாசம்? இதாலை இவங்களுக்கு என்ன லாபமெண்டு எனக்குத் தெரியேல்லை. அரசாங்கத்துக்கு வலு புழுகமாயிருக்கும். புலியளை அசல் மனிசவேட்டை ஆடுறவங்கள் எண்டு சொல்லி எங்கடை தமிழாக்களின்ரை போராட்டத்தையும் பிரச்சினையையும் ஒரு ஞாயமில்லாத விசயமாக்கிப் போடுவாங்கள். முஸ்லிம் சனமும் தாங்கள் இனித் தமிழனை நம்பேலாது எண்டு சொல்லப் போகுது. இதை இந்த அஸ்ரப் ஆக்களும் நல்லாப் பாவிக்கப் போறாங்கள். தமிழ் முஸ்லிம் பிரச்சினையை உண்டாக்கப் போறாங்கள். இவங்களுக்கு ஒண்டு விளங்கேல்லை. சோனகரும் தமிழரும் ஒண்டெண்டு நினைக்கிறாங்கள் போலை. தமிழ்ப் பாசையைக் கதைச்சாலும் சோனகர் வேற இனம்தானே. அவங்களைக் கொல்ல, இனப் பிரச்சினையெல்லே பெரிசாகப் போகுது. இப்பிடிச் சோனகரை அடிக்கிறவங்கள் எப்பிடி தங்கடை விடுதலையைப் பற்றி கதைக்கிறது?

இப்ப புதுக் கதையள் வருகுது. முஸ்லிம் சனத்தைச் சுட்டது புலியள் இல்லை எண்டும், அரசாங்கம்தான் செய்ததெண்டும். இதிலை முஸ்பாத்தி என்னெண்டா சோனகச் சனங்கள் கூட இப்பிடிக் கதைக்குது. முதல் இதைச் செய்தது இவங்களா இல்லையா எண்டதைவிட இவங்கள் இப்பிடிச் செய்யக்கூடிய ஆக்களா இல்லையா எண்டதுதான் முக்கியம். இவங்கள் செய்யக்கூடிய ஆக்கள் எண்டதாலையும் முந்திச் செய்திருக்கிறாங்கள் எண்டதாலையும் இவங்களில்லை எண்டு இவங்களாலைகூட அடிச்சுச் சொல்லேலாமல் கிடக்குது. இந்தக் கொலையளைச் செய்தது, தாங்கள் இல்லையெண்டு இவங்கள் மறுத்திருக்கிறாங்கள். மறுத்தால் ஆர் நம்பப் போறான். முந்தியும் உப்பிடித்தானே அமிர்தலிங்கத்தை சுடேல்லை எண்டிட்டு பிறகு சுட்டதாக ஒப்புக் கொண்டவங்கள். பேசுறது முழுக்க உறுட்டுப் பிரட்டு. அப்ப என்னெண்டு இவங்கள் சொல்லுறதை ஆரேன் நம்புவினம்? சனங்களை ஒரு துரும்புக்கு கூட மதிக்கிறேல்லை. தாங்கள் சொல்லுறதைக் கேட்கவேணுமெண்டது தான் இவங்கடை அபிப்பிராயம்....

தமிழ் மக்களின் கடந்தகால போராட்ட வரலாறு ஏதோ ஒரு வகையில் முஸ்லிம் மக்களது இனத்துவச் சிந்தனைகளை லட்சியம் செய்யாமல், இன்னும் சரியாகச் சொல்லப் போனால் அவற்றை முற்றாகவே அமுக்கி விடுகிற விதமாகவே இருந்து வந்துள்ளது. தமிழரசுக் கட்சியிலிருந்து இன்றைய தமிழீழ விடுதலைப் புலிகள் வரை யாருமே தமிழ் முஸ்லிம் இன ஐக்கியத்திற்கான அடிப்படைகளை ஒருபோதும் கணக்கில் எடுத்து இன்றுவரை அதற்கென ஒரு அரசியல் முக்கியத்துவத்துடன் தீர்வை முன்மொழிந்ததாக இல்லை. இது நடைமுறையில் முஸ்லிம்கள் மத்தியில் பிளவுகளை விரும்பும் சக்திகளது நோக்கங்களை மேலும்மேலும் வளரச் செய்ய துணைபோயுள்ளது. முஸ்லிம்கள் மதத்தால் இஸ்லாமியராயும் பேசும் மொழியை தமிழாகக் கொண்டவராக இருந்தபோதும் அவர்கள் தமிழர்கள் அல்லர்; அவர்கள் தனித்துவமான இன்னொரு இனமென்பதை அனைவரும் அங்கீகரிக்க வேண்டும். இது முதலாவதும் முக்கியமானதுமான பிரச்சினை. எப்படி மலையக மக்களும் தமிழர்களாக இருந்தபோதும் அவர்கள் வடக்கு கிழக்குத் 'தமிழர்' என்ற இன அடையாளத்துள் வரமுடியாதோ அவ்வாறே. இனங்களுக் கிடையேயான ஐக்கியம் என்பது பரஸ்பர அங்கீகாரம், புரிந்துணர்வு என்பவற்றுடன் சம்பந்தப் பட்டது. அது இல்லாதவரை, இன்று முஸ்லிம் காங்கிரஸால் முன்மொழியப்படும் தனிமாகாணக் கோரிக்கை எதிர் காலத்தில் பாரிய பின் விளைவுகளை ஏற்படுத்தி, தமிழ் முஸ்லிம் மக்களது சொந்த நலன்களுக்கு நேர் விரோதமான பாதையில் அவர்களை வழிநடத்திச் செல்லும் ஆபத்து நிலவவே செய்கிறது.

இன்று இலங்கையில் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் நடந்து கொண்டிருக்கும் சூழலில், ஒடுக்கப்படும் சிறுபான்மை இனங்களுக்கிடையே ஐக்கியத்தை வலியுறுத்துகிற எவரும் வளர்ந்து வரும் உணர்நிலை எழுச்சிகளை (மலையக மக்கள், முஸ்லிம்கள்) கணக்கெடுக்காமல் விட்டால் அந்த ஐக்கியமானது இவ் இனங்களின் அடையாளத்தை நசுக்குவதாகவே கொள்ளப்படும் என்பதில் ஐயமில்லை. தவிரவும், பிற இனமொன்றின் தனித்துவத்தை, சனநாயக உரிமையை, அதன் விடுதலையை அங்கீகரிக்காத எந்த இனமும் தனது சொந்த விடுதலைபற்றிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசும் உரிமையற்றது என்பது குறிப்பிடவேண்டியது.

***

இது நடந்து ஒரு ஆறு மாதம் இருக்கலாம். சிலவேளை கூடவாகவும் இருக்கலாம்.

இந்தியப்படை வெளியேறுவதற்கு சற்றுமுன்பாக; ஆனால் இந்தியப்படை வெளியேறுவதாக முடிவு செய்துவிட்ட பின்னர்.

யாழ்ப்பாணத்துப் பத்திரிகைகளில் ஒன்றின் ஆசிரியர், அடுத்ததாக வரப்போகிற அரசியல் மாற்றம் பற்றி ஒரு முடிவுக்கு வந்திருக்க வேண்டும். அதாவது, 'இந்தியன் ஆமி' போனதும், அடுத்த தமிழ் மக்களின் எதிரியான 'சிறீ லங்கன் ஆமி'யும் 'அரசு'ம் தமிழ் மக்கள் மீது தமது கைவரிசையைக் காட்ட முனைவார்கள். எனவே அவர்களைக் குறித்து மக்களை எச்சரிப்பது அவசியம். அவர்களை அம்பலப் படுத்த வேண்டும்... என்று இலங்கை அரசினது தமிழின விரோதப் போக்குகளை அம்பலப் படுத்துவதில் அவர் அக்கறைகாட்டி இரண்டொரு விசயங்களை எழுத தனது பத்திரிகையில் இடம் ஒதுக்கியிருக்கிறார்.

ஆனால் அவர் கொஞ்சம்கூட எதிர்பாராத விதமாக அதற்கு ஒரு பதில் கிடைத்தது. பத்திரிகைக் காரியாலயத்தை நோக்கி வந்த ஒரு 'விடுதலைப் போராளி' அவரிடம் கேட்டார்: "உங்களை இலங்கை அரசை விமர்சிக்கும்படி யார் சொன்னது?' ஆசிரியருக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. 'யார் சொல்ல வேண்டும்... அவன் ஏற்கனவே எதிரிதானே? அவனை இப்ப அம்பலப் படுத்துவது முக்கியம் தானே?' என்று கேட்டு வைத்தார். 'யார் யாரை எப்ப விமர்சிப்பது என்று நாங்கள் சொல்லுவம். அதுவரை நீங்கள் பேசாமல் இருங்கோ. சரியா?' என்றார் அந்தப் போராளி.

ஆசிரியர் பேசாமல் இருந்து விட்டார். பாவம்!

(இந்த உரையாடல் வார்த்தைகள் 'அப்படியே' இருந்தன என்பதல்ல; உரையாடலின் சாரம் இதுதான்.)

(தொடரும்)

# வந்தே மாதரம்

சேரபண்டாரஜீ

ஓ! எனதருமைத் தாய்நாடே!
அன்னையும் நீயன்றோ, அப்பனும் நீயன்றோ
தேடிவரம் கொடுக்கும் தெய்வமும் நீயன்றோ
சமுதாய விரோதிகளின் சயன அறைதேடிச்
சல்லாபம் புரிகின்ற கற்பன்றோ உன் கற்பு
உறுப்புக்கள் அத்தனையும் உலகத்தின் சந்தையிலே
அடமானம் வைத்துவிட்ட அழகன்றோ உன் அழகு
சீமான்கள் அரவணைப்பில் சிந்தை பறிகொடுத்து
இன் துயிலில் ஆழ்ந்துவிட்ட இளமையன்றோ உன் இளமை
கண்டவர்கள் உன் முகத்தில் காறி உமிழ்ந்தாலும்
கலக்கமே கொள்ளாத போதையன்றோ உன் போதை
கோடான கோடியிங்கு கூழின்றிச் செத்தாலும்
பசுமையே மாறாத நாடன்றோ உன் நாடு
பொன் விளையும் புமிதனைப் புல்லர்களின் கூட்டமிங்கு
வயலெலியாய்த் தோண்டி வளத்தை உறிஞ்சுகையில்
அஞ்சிப் பதுங்கி நிற்கும் அன்பின் திரு உருவே
நீயன்றோ பாரதத்தாய்
பாரதத்தாய் வாழ்க! பாரதத்தாய் வாழ்க!!
உன் மானம் காத்திருந்த ஒற்றைத் துணிகூட
கொடிகளாய் மாறியதால் கோமகளே கிராமமெல்லாம்
அம்மணமாய் அலைகின்ற வீரமன்றோ உன்வீரம்
கடன் வாங்கிக் கட்டிவிட்ட மாளிகையில் காலெரிந்த
பூனைபோல் அஞ்சி, அஞ்சி நடைபோட்டு
பதுங்கிச் செல்கின்ற பரிதாபம் உனதன்றோ
பசியாலே துடிதுடித்துப் பதறும் குழந்தைகட்கு
பால் சுரக்க மாட்டாத பாலையன்றோ உன் மார்பு
இரவல் நகைபூண்டு இரவினிலே தெருவோரம்
பரத்தையாய் அலைகின்ற மினுக்கன்றோ உன் மினுக்கு
ஓ! பாரத மாதாவே!
உன் பயணத்தின் இலட்சியம்தான் என்ன?
பாரதத்தாய் வாழ்க! பாரதத்தாய் வாழ்க!!


-(யூன் 1968)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒறேற்றர் சுப்பிரமணியம் அவர்களுடன் ஒரு சந்திப்பு

புகைப்படம்: மல்லி



அண்மையில் இலங்கையில் இருந்து வந்திருக்கும் இருபது வயது இளைஞர் ஒருவருடன் சம்பாஷிக்க நேர்ந்தபோது கோவை மகேசனின் பெயரைச் சொல்ல வேண்டி வந்தது. அவ்விளைஞர் கோவை மகேசன் யாரென்று என்னிடம் கேட்டார். சுமார் ஏழு ஆண்டுகளுக்கு முன்னால் வரை தமிழ் இனவெறியை சுதந்திரன் மூலமாகப் பரப்பி பிரபல்யமான கோவை மகேசனுக்கே இந்தக் கதியென்றால், 40-45 ஆண்டுகளுக்கு முன்பாக யாழ்ப்பாணத்தில் அரசியல் போராட்டங்களைத் தலைமையேற்று நடத்தியவர்களில் ஒருவரான ஒறேற்றர் திரு.சுப்பிரமணியம் அவர்களின் பெயரை நாங்கள் எவ்வளவு தூரம் தெரிந்து வைத்திருப்போம்? இது கோவை மகேசனையும் ஒறேற்றரையும் சமப்படுத்தும் நோக்கல்ல. மாறாக எங்களுடைய கடந்தகால வரலாறு பற்றி நாங்கள் கொண்டிருக்கும் அக்கறையே இதுதான்.

இன்றைக்கு எண்பத்தியேழு வயதாகும் திரு சுப்பிரமணியம் அவர்கள் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் முன்னாள் அதிபர். 1920-30 களில் பிரித்தானிய ஆட்சியாளர் வழங்கிய சலுகைகளை 'இன்னும் சிறிது கூட்டித் தா!' என அரசியல் வாதிகள் கேட்டுக் கொண்டிருந்தபோது 'இலங்கைக்கு பூரண சுயராஜ்யம் தா!' எனப் போராடிய சிலரில் ஒருவர். ஏகாதிபத்தியத்தையும் சாதியையும் எதிர்த்துப் போராடிய 'யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ்' (Jaffna Youth Congress) இன் செயலாளராகவும் இருந்தவர்.

திரு. சுப்பிரமணியம் அவர்களின் அனுபவங்களை 'பனிமலர்' வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதற்காக, அண்மையில் அவரைச் சந்தித்தோம்.

நடையில் 87 வயதின் முதுமை தெரிகிறது. கதிரையொன்றில் வசதியாக உட்கார்ந்து கொண்டு, எந்த ஊர்? என்ன பெயர்? எங்கு படித்தனீர்கள்? என்று எங்களை நோக்கி கேள்விகளை வீசுகிறார். உங்கள் ஊரில் இன்ன இன்னாரைத் தெரியுமா? என மேலும் தொடர்கிறார். பின்னர், நாங்கள் படித்த கல்லூரிகளைப் பற்றியும் அதிபர்கள் பற்றியும் குறிப்பிடுகிறார்.

இன்றைய அரசியல் பற்றி அதிகம் பேச விரும்பவில்லை எனத் தெரிவித்து, என்ன விசயங்களைக் கேட்க விரும்புகிறீர்கள் எனக் கேட்கிறார். நாங்கள் உங்களுடைய இளமைக் காலம் பற்றியே அறிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்புகிறோம், அது பற்றி அதிகம் அறிய முடியாதிருக்கிறது என்கிறோம். யாழ்ப்பாணம் வாலிபர் காங்கிரஸ் ஆரம்பித்தது பற்றிச் சொல்லுங்கள் என்று எங்களுடைய கேள்வியை ஆரம்பித்தோம்.

மெல்லிய முறுவல் முகத்தில் மலர அவர் சொல்லத் தொடங்கினார்.

'1924ல் தான் நாங்கள் கொஞ்சப் பேர் சேர்ந்து முதற் கூட்டம் வைத்தோம். அதற்கு முன்னர், 21-22ல் நான் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தேன். சென்றற்ற நாகலிங்கம் என்றொருவர் இருந்தவர் தெரியுமா? அவர் பரமேஸ்வராக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தார். யாழ்ப்பாணக் கல்லூரியியுடன் எங்களுக்கு அந்த நேரத்தில் அவ்வளவு தொடர்பு இல்லை. நாகலிங்கமும் நானும் இஷ்டமான சிநேகிதம். தெல்லிப்பழை யூனியன் கல்லூரிக்குப் பின்புறமாக இருக்கும் அவரது வீட்டில் - பொன்னர் வளவில் அடிக்கடி சந்திப்போம். அவரது தாயார் நல்ல விருந்தோம்பி. அப்போது நானும் நாகலிங்கமும் இது பற்றி யோசித்திருக்கிறோம்.'

'பின்னர் 1924ல் நான் இன்ரர்ஆட்ஸ் (Inter-Arts) படிப்பதற்காக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் சேர்ந்தேன். அப்போதுதான் ஹன்டி மாஸ்ரர் (ஹன்டி பேரின்பநாயகம்) B.A. எடுத்துவிட்டு அங்கு வந்திருக்கிறார். அவ் வேளையில்தான் இது பற்றித் தீவிரமாக யோசித்தோம்.'

'அதற்கு முன்னர் Y.M.H.A. (Young Men's Hindu Association) என்று கீரிமலையில் ஒரு சங்கம் தீவிரமாக நடந்து வந்தது. M.S.இளையதம்பி, V.முத்துக்குமாரு, சேர்.பொன்.இராமநாதன் போன்றவர்கள் அதில் கூடி இந்துமதம் பற்றிக் கூட்டம் நடத்துவார்கள். நாங்கள் சகல மதத்தினரும் கூடி தங்களது அரசியல், கல்விப் பிரச்சனைகள், சமூக விசயங்கள் பற்றிக் கதைப்பதற்கும் அவற்றைத் தீர்ப்பதில் இணைந்து பங்காற்றவும் கூடிய ஒரு சங்கத்தை உருவாக்கினோம். அதான் யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸ். யாழ்ப்பாணத்தில் பின்னர் நகர மண்டபம் (Town Hall) என அழைக்கப்பட்ட றிட்ஜ்வே மண்டபத்தில்தான் கூட்டம் கூடுவோம். அரசியற் சுதந்திரம், கல்வி, தாய்மொழிக் கொள்கை, சாதிப் பாகுபாட்டிற்கு எதிர்ப்பு இவைதான் எமது கொள்கைகளாக இருந்தது. இவ் 'யாழ்ப்பாண மாணவர் காங்கிரஸே' பின்னர் 'யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ்' (Jaffna Youth Congress) ஆக மாறியது.

'இதன் பிறகு ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு இடங்களில் எங்களுடைய கூட்டங்களைக் கூட்டிக்கொண்டு வந்தோம். அந்தக் காலத்தில் சமபந்தி, சம ஆசனமே மிக முக்கிய சமூகப் பிரச்சனையாக இருந்தது. ஏனென்றால் தாழ்த்தப்பட்ட மக்களை அப்போது சமனாக வாங்குகளில் இருக்க விடுவதில்லை. சமபோசனமில்லை. அவர்களை 'தாழ்த்தப்பட்ட' மக்கள் என்றுதான் அழைப்பது. பின்னர்தான் மரியாதையாக்கி 'சிறுபான்மை'த் தமிழர் என்று அழைக்கப் பட்டார்கள். தமிழ்ப் பள்ளிக்கூடங்களில்தான் இந்த நிலையென்றால் ஆங்கிலப் பள்ளிக்கூடங்களில் துண்டாக அநுமதி கிடையாது.'

'1925க்கு முந்தி, முதன்முதல் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஒரு தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த மாணவனை, அன்றைய அதிபரான ஜோன் பிக்னெல் பாதிரியார் (Rev. John Bicknell) சேர்த்துக் கொண்டார். உடனடியாகவே அந்த வகுப்பிலிருந்த சகல மாணவர்களும் வகுப்பைவிட்டு வெளியேறி விட்டனர். ஆசிரியர்களும் பாடமெடுக்க மறுத்துவிட்டனர். ஆனால் பிக்னெல் பாதிரியார் ஒரு மாணவன் இருந்தாலும் வகுப்பை நடத்துவேன் எனக் கூறிவிட்டார். அவரின் அந்த நடவடிக்கையின்போது ஹன்டி மாஸ்ரரும் அவருக்கு ஆதரவாக இருந்தார். அப்போதைய எங்களின் நடவடிக்கைகளுக்கு, முன்னர் நடந்த இந்தச் சம்பவம் பெரும் உற்சாகத்தை அளித்தது.

நவம்பர் 1927ல் மஹாத்மா காந்தியை இலங்கைக்கு அழைத்திருந்தோம். அதன் பிறகுதான் ஜவஹர்லால் நேரு வந்திருந்தார். வி.கல்யாண சுந்தர முதலியார் (வி.க.), சத்தியமூர்த்தி முதலானவர்களையும் அழைத்திருந்தோம். இப்படிக் கீரிமலையில் உள்ள வைத்திலிங்கம் மடத்தில் மூன்று, நான்கு வருடங்கள் கூட்டங்களை நடத்தினோம். பின்னர் மடக்காரர் விடமாட்டம் எண்டுட்டினம்.'

'இவ் வேளையில், எமது சம பந்தி போசனத்தால் பெரும் பிரச்சனைகளை எதிர்கொள்ள வேண்டி வந்தது. காங்கேசன்துறையில் நாங்கள் போட்ட பெரிய பந்தல் எரிக்கப் பட்டது. பிறகு சுன்னாகத்தில் ஒரு பந்தல் போட்டு சமபந்தி போசனத்தை நடத்தினோம். நாகலிங்கத்தின் செல்வாக்கு சுன்னாகத்தில் ஓங்கியிருந்த காலம் அது. எனவே நாங்கள் அதனைப் பிரச்சனைகளின்றி நடத்த முடிந்தது. 1930ல் திருநெல்வேலியில் நாங்கள் நடத்திய மாநாட்டுக்குக் கல் எறியப்பட்டது. இதெல்லாம் எதற்கு நடந்தது என்றால் நாங்கள் சமபோசனம் நடத்தியதற்காகத்தான்.

'அந்தக் காலத்தில் இன்னொரு சங்கம் தொடங்கினார்கள். வேத ஆகம சைவ சித்தாந்தச் சங்கம் என்று பெயர். சேர் பொன். இராமநாதன் தான் அதற்குத் தலைவர். இதற்கு முன்னர் அவர் தமிழர்களுக்குச் சார்பான நடவடிக்கைகள் பலவற்றைச் செய்தவர். ஆனால் யாழ்ப்பாண வாலிபர் காங்கிரஸ் தொடங்கிய காலப்பகுதியில் அவர் இதற்கு எதிரானவராகவே இருந்தார். "இவர்கள் சைவத்திற்கு எதிராகச் செயற்படுகிறார்கள். வர்ணாச்சிரம தர்மத்திற்கு, சாதிப் பாகுபாட்டிற்கு விரோதமாக நடக்கிறார்கள். இவர்களின் சங்கம் வேதக்காரரின் சங்கம் (அந்தச் சமயத்தில் ஹன்டி மாஸ்ரர் கிறிஸ்தவ சமயத்தில் இருந்தார். யாழ்ப்பாணக் கல்லூரியின் உப அதிபராக இருந்தவரான செல்லையா என்ற கிறிஸ்தவரே வாலிபர் காங்கிரஸின் தலைவர்). இது சைவசமயத்திற்கு எதிரானது" என்று பிரச்சாரம் செய்தார்கள்.

'இப்படியான பிரச்சாரங்களுக்கு முட்டுக்கட்டை போடவேணுமென்று சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரியின் அதிபராக இருந்த சிவபாதசுந்தரம் என்பவரைத் தலைவராக்கினோம். அவர் சைவசமயத்தைக் கரைத்துக் குடித்தவர். பள்ளிக்கூடங்களில் படிப்பிப்பதற்கு சைவசமயப் புத்தகங்கள் எழுதியவர். நல்ல பேச்சாளர். சைவசமயத்திற்கு ஒரு தலைவராக இருந்தவர். அவர் தலைமை தாங்கிய அந்த மகாநாட்டில் சமபந்தி நடத்துவதாக அறிவித்திருந்தோம். இரவோடிரவாக வேத ஆகம சைவசித்தாந்தச் சங்கத்தினர் பாம்புகளை அடித்துக் கிணற்றில் போட்டு, பெரிய அநியாயங்களைச் செய்தார்கள். இராமநாதன் இதைச் செய்யவில்லைத்தான். ஆனால் அவர்தான் அச் சங்கத்தின் தலைவர். இப்படி பல எதிர்ப்புகளைச் சந்தித்து காங்கிரஸ் நன்றாக வேரூன்றியது.'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


'இதற்கு முன்னர்தான் காந்தியை யாழ்ப்பாணத்திற்கு வரவழைத்திருந்தோம். ஹன்டி மாஸ்ரர்தான் அதற்கு முன்னின்றவர். அவர் வந்தபோது பருத்தித்துறையோ அல்வாய்ப் பக்கத்தில் காந்தியின் கூட்டத்திற்கு தாழ்த்தப் பட்ட சாதியைச் சேர்ந்தவர்களை மண்டபத்திற்குள் விடமுடியாது என்று தடுத்து விட்டார்கள். இதனைக் காந்தி கேள்விப்பட்டு, அப்படியாயின் தான் அந்தக் கூட்டத்தில் பங்குபற்ற மாட்டேன் என்று சொன்னதால் எல்லோரையும் உள்ளுக்குள் விட்டார்கள் - ஆனால் விறாந்தையில்தான்.'

'1931ல் நான் வாலிபர் காங்கிரஸின் செயலாளராக இருந்தேன். டொனமூர் அரசியற் திட்டம் நடைமுறைக்கு வந்திருந்த நேரம். எங்களுடைய மாநாட்டிற்கு கமலாதேவி சட்டோபாத்தியாய என்பவர் சிறப்புப் பிரதிநிதியாக இந்தியாவில் இருந்து வந்திருந்தார். "டொனமூர்த் திட்டம் இலங்கை மக்களுக்கு முழுமையான அரசியல் உரிமைகளைத் தரவில்லை. இலங்கை மக்களுக்கு பூரண சுதந்திரத்தைத் தா!" என்பதுதான் எங்களுடைய கருத்தாக இருந்தது.'

'எமது செயற்குழுவில் பூரண சுயராஜ்யம் கோரி, தேர்தலைப் பகிஸ்கரிப்பது பற்றி ஆராய்ந்தோம். பகிஸ்கரிப்பை நடைமுறைப் படுத்துவதில்லை என்றுதான் முடிவெடுத்தோம். ஆனால் பொதுக்கூட்டத்தில் T.S.சுப்பையா என்ற பிரபல்யமான வழக்கறிஞர் எழுந்து "டொனமூர்த் திட்டம் எங்களுக்கு பூரண சுதந்திரத்தைத் தரவில்லை; அது எங்களுடைய உரிமைகளை மறுக்கிறது. எனவே அரசாங்க சபைக்கான (State Council) தேர்தலைப் பகிஸ்கரிப்போம்!" என்று பிரேரித்தார். உடனடியாகவே யாரோ இதை ஆமோதித்தார்கள். எல்லோராலும் அது ஏற்றுக் கொள்ளப்பட்டது. கமலாதேவி இதுபற்றி உணர்ச்சிமிக்க உரையொன்றை ஆற்றினார்.'

'தேர்தலுக்கான வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய ஆரம்பித்த நேரம். வடபகுதியில் போட்டியிட்ட அனைத்து வேட்பாளர்களையும் கூப்பிட்டு கூட்டமொன்றை நாங்கள் கூட்டினோம். சேர் துரைசுவாமிதான் அந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். நாங்கள் தேர்தல் பகிஸ்கரிப்பு பற்றி விளக்கி, அதுபற்றி ஒவ்வொரு வேட்பாளரது கருத்துக்களையும் அறிந்தோம். சரவணமுத்து என்பவர் மாத்திரம் தான் தேர்தலில் நிற்கப் போவதாகக் கூறினார். ஏனையவர்கள் பகிஸ்கரிப்புக்கு ஒத்துக் கொண்டார்கள். ஒருபடியாக சரவணமுத்துவையும் மறித்தோம்.'

'ஜீ.ஜீ.பொன்னம்பலம் வவுனியாவில் போட்டியிட்டார். அவர் அப்போதுதான் லண்டனில் இருந்து வந்திருந்தார். அவரது வழக்கறிஞர் தொழில் வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது.



புகைப்படம்: மல்லி

வவுனியா-மன்னார் ஒரு தொகுதியாகவும், முல்லைத்தீவு-பருத்தித்துறைப்பகுதி ஒரு தொகுதியாகவும் அப்போது இருந்தது. வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்வதற்கு முதல் நாள், நாங்கள் வவுனியாவுக்குச் சென்று ஜீ.ஜீ.பொன்னம்பலத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தினோம். தன்னை எதிர்த்துப் போட்டியிடும் மன்னாரைச் சேர்ந்த ஆனந்தம் என்பவர் விலகினால் தானும் விலகிவிடுவதாக ஜீ.ஜீ. எங்களிடம் சொன்னார்.'

'ஆனந்தம் தான் தேர்தலில் போட்டியிடப் போவதாகச் சொல்லிவிட்டார். எனவே ஜீ.ஜீ.பொன்னம்பலம் தானும் போட்டியிடப் போவதாகச் சொல்லிவிட்டார். எங்களுடைய இளைஞர்கள் பலர் வவுனியாவுக்குச் சென்று ஜீ.ஜீ.பொன்னம்பலத்திற்காக வேலை செய்தார்கள். ஆனால் அவர் தோற்று விட்டார்.'

'வவுனியாவைத் தவிர வடபகுதியில் தேர்தல் நடைபெறவே இல்லை. அது ஒரு அமோகமான வெற்றி எங்களுக்கு. தென்னிலங்கையில் பெரும் வரவேற்பு. இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக தேர்தல் பகிஸ்கரிப்பு மகத்தான வெற்றியைப் பெற்றது. இலங்கையின் அரசியல் வரலாற்றில் பெரும் அத்தியாயம் அது.'

'இரண்டு, மூன்று ஆண்டுகளின் பின்னர் தேர்தல் பகிஸ்கரிப்பு தமிழ் மக்களுக்கு மிகுந்த இழப்புகளைத் தந்து விட்டது என்ற பிரச்சாரத்தை ஒரு பகுதியினர் உக்கிரமாகத் தொடங்கினர். அதற்குத் தலைமை வகித்தவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம். எங்களுடைய தேர்தல் பகிஸ்கரிப்பு இயக்கத்தினால்தான் ஜீ.ஜீ.பொன்னம்பலம் ஒரு பிரபல்யமான அரசியல் வாதியானார் என்பது என்னுடைய கருத்து. பகிஸ்கரிக்கப்பட்ட பகுதிகளில் பதில் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதுதான் அவர்களுடைய கோரிக்கையாக இருந்து வந்தது. நாங்கள் அதனை எப்போதும் எதிர்த்து வந்துள்ளோம். இப்படி நெடுகலும் எங்களுக்கும் அவர்களுக்கும் சண்டைதான். சண்டையென்றால் இப்போதுள்ள மாதிரியல்ல. கூட்டங்கள் தான்.'

'1924ல் இருந்து 1942 வரை தொடர்ந்தும் நாங்கள் எங்களுடைய மாநாடுகளைக் கூட்டி வந்தோம். 1942ல் தொல்புரம் வடக்கம்பரை அம்மன் கோயில் வீதியில் மாநாட்டை நடத்தினோம். அப்போது இரண்டாம் உலக மகாயுத்தம் உக்கிரமாக நடந்து கொண்டிருந்தது. அந்த மாநாட்டிற்கு என்.எம்.பெரேராவின் மனைவியார் வந்திருந்தார். வெள்ளைக்காரரை இலங்கையை விட்டுக் கலைக்க வேண்டுமென்று அவர் பேசினார். அப் பேச்சிற்காக மல்லாகம் நீதி மன்றத்தில் ராஜ துரோக குற்றம் சாட்டப்பட்டு அவருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. பின்னர் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.'

'இத்துடன் வாலிபர் காங்கிரஸின் செயல்களும் நின்று போயிற்று. அதன் பிறகுதான் வந்து விட்டார்களே நம்முடைய நண்பர்கள் - தமிழரசுக் கட்சியார். ஆனால் வாலிபர் காங்கிரசின் தாக்கத்தை பல இடங்களிலும் காணக்கூடியதாக இருந்தது. குறிப்பாக சம ஆசன விடயத்தில். இதற்கு முன்னர் ஆங்கிலப் பாடசாலைகளில் தாழ்த்தப்பட்ட மக்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அநுமதிப்பதே இல்லை. நான்தான் முதன்முதல் இவர்களை அநுமதித்தவன்.'

ஸ்கந்தவரோதயாக் கல்லூரிக்கு நான் அதிபராகப் போனபோது, எந்தவொரு தாழ்த்தப்பட்ட மாணவனும் அங்கு கல்வி கற்கவில்லை. இரண்டு ஆண்டுகளின் பின்னர், ஸ்கந்தாவின் முகாமையாளரான Dr.சுப்பிரமணியம் அவர்களிடம் "நான் அவர்களைக் கல்லூரியில் அநுமதிக்கப் போகிறேன். இனியும் அநுமதிக்காமல் இருப்பது நல்லதல்ல" என்று சொன்னேன். அவருக்கு நல்ல சந்தோசம். ஏனென்றால் இரண்டு வருசத்தில பள்ளிக்கூடமும் நல்லா எழும்பியிட்டுது. "நாலாம் வகுப்பிற்கு அநுமதிப் பரீட்சை வைத்து அதில் தேறும் எவரையும் எடுப்போம்" என்று சொன்னேன். அவரும் "ஓம்" எண்டிட்டார். நிறுவனரான கந்தையா மாஸ்டரைப் போய்க் கேட்டபோது, "நீ இன்னமும் அநுமதிக்கவில்லையோ" என்று கேட்டார்.'

'தேர்வுகளை நடத்தினேன். ஒரு தாழ்த்தப்பட்ட மாணவனும் பாஸாகவில்லை. சோதிச்ச ஆசிரியர்கள் எல்லாரும் பழைய ஆசிரியர்கள். பெடியன்களின்ரை பெயர்களிலிருந்து - கந்தன், பூதன் என்று இருந்த எல்லாரையும் பெயிலாக்கிப் போட்டார்கள். எனக்கு விசயம் விளங்கியது. அடுத்த வருசம் புதிய இளம் ஆசிரியர்களை நியமித்து அவர்களைத்தான் சோதனையை நடத்தச் சொன்னேன். அவர்களில் ஒருவர்தான் N.S.கந்தையா. இப்படித்தான் சோதனை மூலம் தாழ்த்தப்பட்ட மாணவர்களை அநுமதித்தோம்.

'பின்னர் விடுதியிலும் இம் மாணவர்களை அநுமதித்தேன். அப்போது, ஒரு மாணவனின் பெட்டியைக் கொண்டுபோய் கிணற்றில் போட்டு விட்டார்கள். நான் விடுதி மாணவர்களைக் கூப்பிட்டு "யார் இதைச் செய்தது என்று எனக்கு நல்லாய்த் தெரியும். என்னிடம் நீங்கள் யார் செய்தது எண்டு ஒத்துக் கொள்ளத் தேவையில்லை. ஆனால் அவனுடைய பெட்டியை எடுத்து, உடுப்புகளைக் காயவைத்து, இருந்த மாதிரி வைக்க வேண்டும்" என்று சொன்னேன். அவர்கள் அப்படியே செய்தார்கள்.'

(அடுத்த இதழில்).

## உளவாளிகள்

வேலி முருங்கைக் கொப்பை முறிச்சவன்
கொடியிலை தொங்கின சீலை எடுத்தவன்
வீடியோக் கஸெற்றைக் கொண்டு போனவன்
வெளிச்சிவர் மூலையில் ஒண்டுக் கிருந்தவன்
எல்லா விவரமும் நல்லாக் கேட்டு
விளம்பரமாக அறிஞ்சு சொல்ல
எங்கட உளவுப் படையைப் போலை
எந்த இயக்கமுஞ் செய்ய மாட்டினை.
எங்களை நீங்கள் கவனிப்பியளெனில்
தண்டம் விதிக்கக் களவு போனதைப்
பறிச்சுத் தருவம்

அவசரமெண்டால்
விளக்குக் கம்பில தொங்கவும் விடுவம்.
சமூக விரோதிகள் தலையளை வெட்டிச்
சந்தி நடுவிலை வரியா வைப்பம்.

எதிரி இயக்க ஆக்கள் செய்யிற
தூள் யாவாரம் கள்ளக் கடத்தல்
ஆர் ஆரோட படுத்து எழும்பினை
எல்லாக் கதையும் நல்லா அறிவம்

கொழும்பிலை பஸ்ஸ்ராண்ட் குண்டு வைச்சது
சமூகத் தொண்டரைச் சாகக் கொண்டது
விரிவுரையாளரைத் தெருவிலை சுட்டது
எங்களைக் கேட்டால் என்ன தெரியும்?
அண்ணை,
கோழி கீழி களவு போனதேல்
சொல்லுங்கோவன் பிடிச்சுத் தாறம்.

ஈஸ்வரி

## கவிதை

பாட்டென்றால்
இரண்டனு பல்லவி
இருத்தல் அவசியமென்பார்.

கேட்டுப்பார்
மெட்டை
பிறகு
போட்டுப்பார்
தெரிந்த வார்த்தைகளை.

சொல்லடுக்கிச் சந்தத்தில்
சிரமமுற்று
மெட்டுக்குப் பாட்டெழுதி
மினைக்கட்ட நேரத்தில்

சொல்லாமல்
செத்ததொரு கவிதை.

இளவாலை விஜயேந்திரன்

18.09.90



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்புக் குதிரை சதுக்கம்

அம்பை



உணர்ச்சி வசப்படாத அறிவுஜீவிக்கு ஒரு அறிக்கை இது.

யதார்த்தத்தை என்னால் தரமுடியவில்லை. என் முதல் பாடம்: யதார்த்தத்துக்குக் கண்ணாடி இல்லை. இந்த அறிக்கையிலுள்ள யதார்த்தம் காயடிக்கப்பட்டது; பால் வற்றியது; கருப்பை பிய்க்கப்பட்டது. வேற்று வெளி-கால அனுபவங்களை, சுயவெளியின் கனத்த சொற்களால் தொய்ய வைக்கும் அறிக்கை இது. இதில் அகப்படாததை உணர நீ இங்கு வரவேண்டும். கண்ணீர் வற்றிய அவள் கண்களைக் காணவேண்டும். அவளிடமிருந்து பிறக்கும் மௌனத்தை ஸ்வீகரிக்க வேண்டும். அதில் எரிய வேண்டும்.

சிறு அறைதான் (நீ இதில்தானே வளர்ந்தாய்?) ஆலையின் புழுதியைத் தலையில் பறக்கவிட்டவாறு வந்த ஒருத்தியிடம்தான் விசாரித்தேன். வழி காட்டினாள். அந்த அறையில் எதுவும் இல்லை. நனைந்ததுணி கனத்துத் தொங்கும் ஒரு உணர்வு. ஒருத்தி மூலையில் அமர்ந்திருந்தாள். விரிசடை திரௌபதி. தரையைத் தொட்டது கூந்தல். அதுதான் வாகனம் போல் அதன்மேலேயே அமர்ந்திருந்தாள். மயங்கிய கறுப்புப் புடவை. நிமிர்ந்து பார்த்தாள். ரோஸா கந்தசாமி. அக்னி குண்டம். (கட்சியின் முக்கிய தோழர் ஒருவர் ரோஸா லக்ஸம்பர்க் நினைவாக வைத்த பெயராமே?).

* * * * * * * * * *

1926. நீண்ட பயணம். கந்தசாமி பிளாட்பாரத்தில் பூனை மயிர் மீசையுடன் இறங்கியபோது கையில் ஒரு துணி மூட்டையும் மதறாஸிச் சின்னமான கூஜாவும். பரேல் சந்தில், மேலே தகரத் தகடு இருந்ததால் அறை என்று அழைக்கப்பட்ட ஒன்று. ஒரு நகரம் கை, கால் நீட்டி விஸ்தாரமாகிக் கொண்டிருக்கும் வேளை. ஆலைகளால் ஈர்க்கப்பட்ட பல வெளியாட்களில் ஒருவன் கந்தசாமி. தொழில் யுகத்தின் ஆரம்ப நாடித்துடிப்பில் அவன் கலந்திருப்பான். 1928 வேலை நிறுத்தத்தில் கந்தசாமி இருந்தான். 1929இலும் வேலை நிறுத்த காலத்தில் நடந்த மாலை வகுப்புகளில் அவன் இருந்திருப்பான். தோழர் டாங்கேயின் பேச்சுக்களைக் கேட்டிருப்பான். கார்ல் மார்க்ஸ் வெறும் தாடி மனிதரல்ல அவனுக்கு. பல வருடங்களுக்குப் பிறகு பையன் பிறந்தபோது அவன் நிறம் மாறியிருக்கவில்லை. சிவப்புத்தான். லெனின் என்று பெயர் வைத்தான். லெனினின் தலையை வருடியவாறு சொன்ன கதைகள்:
"ரொட்டியோட வெலை ஏறிக்கிட்டே போச்சுது. ஜனங்களுக்கெல்லாம் பசி. அவங்க அரமனை வாசல்ல நின்னுகிட்டு பசி, பசிங்கறாங்க. அப்ப ராணிமேரி ஆன்டோனட் என்ன சொன்னா..."ரொட்டி இல்லன்னா கேக்கு திங்கட்டுமே" அப்படீன்னா..."

"பகத்சிங்கைக் கடைசில ஜெயில்ல போட்டாங்க. ரொம்பக் கொடுமைப் படுத்தினாங்க. அவர ஒருநாளு விடிகாலேல தூக்குப் போட்டபோது அந்த ஒடம்பைக்கூட அவங்கம்மாவுக்குக் காட்டல்லே..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லெனின் கேட்ட கதைகளில் திடீர் திருப்பங்கள் நிறைய உண்டு. தேவதைகள், கடவுள்கள், ராட்சஸர்கள் இல்லாத கதைகள்தான். அவன் தலைப்புகள் இட்டிருந்தான். பிரெஞ்சுப் புரட்சிக் கதை; 1917 கதை; வ.உ.சி. கதை; பாரதியார் கதை; ஸாவர்க்கர் கதை (ஸாவர்க்கர் கப்பலிலிருந்து தப்பித்த நிகழ்ச்சியை மீண்டும் மீண்டும் சொல்லச் சொல்வான்); காந்தி கதை; 15 ஆகஸ்டு கதை; மெஷின் கதை; தொழிலாளி கதை. 'இங்கிலீசி'ல் தான் படிக்கமுடியாத குறைக்காக லெனினுக்கு இங்கிலீஷ் படிப்பு. லெனின் ஆலையில் வேலை செய்ய அல்ல. அவன் படிக்க, யோசிக்க. சமுதாயத்தை மாற்றத் திட்டங்கள் போட.

* * * * * * * * * *

அவள் தலைக்கு மேல்தான் கந்தசாமியின் மாலையிட்ட புகைப்படம் இருந்தது.
இவள் தயங்கியவாறு நுழைந்தாள்.
நிமிர்ந்து பார்த்து "யா" என்று மராட்டியில் வரவேற்றாள்.
ஒரு சாட்டை வீச்சு வீசித் தலையை முடிந்து கொண்டாள்.
இவள் தமிழில் "நான் லெனினோட..." என்றாள்.
கண்களைக் குறுக்கிப் பார்த்தாள்.
"அண்ணியா?"
"அம்மா, யார் வந்திருக்காங்கன்னு பாரு."
தடுப்பின் பின்னாலிருந்து அம்மா வந்தாள்.
கண், முகம், பஞ்சுத் தலையை எல்லாம் துடைத்துவிட்டுக் கருநாகப் படமாய் எழுந்தது அந்த உலக்கைக் கைகள்தாம்.

சற்றுக் கூச்சமாய் இருந்தது இவளுக்கு, அந்தக் கைகளைத் தான் உற்றுப் பார்ப்பது. அவற்றை இயல்பாய் ஏற்றுக்கொள்ள முடியாமல் அவற்றில் ஓடிய கரும்பச்சை நரம்புப் படைப்புகளில் கண்கள் ஓடிஓடி மீள்வது இவள் பேதப்பட்டு இருப்பதை மண்டையில் அடிப்பதுபோல் இருந்தது.

"லெனின் வூட்டுக்காரி."
"வாம்மா. வளி தெரிஞ்சிச்சா"
கேட்டுவிட்டு அருகில் வந்து தலையை வருடினாள்.
"லெனின் சௌக்யமா?"
"ம்."
"நல்ல புள்ளம்மா அவன்." கையைப் பற்றிக்கொண்டாள். "இன்னும் நிஜார் போட்ட சின்னப் பையனாகவே தெரியறான் எனக்கு. ஒரு வாட்டி அவர செயில்ல போட்டுட்டாங்க. பன்னெண்டு வயசுப் பையனை இளுத்துக்கிட்டு ஓடறேன் அங்க. அங்க அலைஞ்சு, இங்க போயி அவரப் பாக்குற வரிக்கும் 'பசிக்குதம்மா'ன்னு சொல்லலியே பையன்! எப்படிப்பட்ட புள்ள அவன்!"

அவளைக் கீழே பாயில் அமர்த்தினாள்.
"அவன் போறபோது முந்தானைலேந்து எட்டணா எடுத்துக் குடுத்து 'இவ்வளவுதாண்டா முடியும் தம்பி'ன்ன போது கையைப் புடிச்சுக்கிட்டு அழுதாம்மா அவன். பிளாட்பாரத்துல அத்தினிபேர் முன்னாலியும் கொரகொரன்னு இளுத்துக்கிட்டு அழுவுறான். கையைத் தடவித் தடவித் தந்தான்..."

"அம்மா, அவங்களையும் பேச விடுவியா, இல்ல நீயே பேசி முடிக்கப் போறியா?"
"போடீ" என்றுவிட்டு "டீ கொண்டாறேன்" என்று எழுந்து போனாள்.
ரோஸா இவளைப் பார்த்துப் புன்னகைத்தாள்.
"உங்க பேர்கூடத் தெரியாது."
"அபிலாஷா."

* * * * * * * * * * * *

(நீ அவளைப் பார்த்து இரண்டு மூன்று வருடங்களாகி இருக்கும் இல்லையா? அவள் ஆலைத் தொழிலாளிகள் சங்கத்துக்காக வேலை செய்கிறேன், மேலே படிக்கவில்லை என்றதும் கோபமாகச் சென்றாயாமே? அங்கு சுவரில் ஒரு புகைப்படம் இருந்தது. உன் அப்பா, அம்மா, நீ, அவள். சுருட்டை சுருட்டையாய் எவ்வளவு முடி உனக்கு! நீ போட்ட முதல் கால்சராயா புகைப்படத்தில் இருப்பது? அவளுக்கு மூன்று வயது இருக்கும். பின்னால் கார்ல் மார்க்ஸ். ஆம் அந்தப் புகைப்படக் கதை நீ சொல்லியிருக்கிறாய். ஸ்டுடியோவுக்கு உன் அப்பா கார்ல் மார்க்ஸ் புகைப்படத்தைச் சுமந்து வந்ததும், அதைப் பின்னால் வைக்கவேண்டும் என்று வற்புறுத்தியதும், ஸ்டுடியோக்காரர், "உங்கள் உறவா? ஜம்மென்று இருக்கிறார் வெளிநாட்டவர் மாதிரி" என்றதும்).

எந்த விஷயத்தையும் தராசில் வைத்து நிறுத்தி இரு பக்க எடையையும் பார்க்கும் உனக்கு, பதட்டமடையாத மார்க்ஸீயவாதியான உனக்கு எழுதும் அறிக்கையில் உணர்ச்சிகள் தெறித்துவிடாமல் கவனமாக இருக்க முயல்கிறேன். இதில் வெற்றி பெறுவேனா என்று தெரியவில்லை.

கனன்று கொண்டிருக்கும் நெருப்பு மாதிரி இருந்தாள் அவள். எந்த நிமிஷமும் சடாலென்று குதிரை ஏறி ராணி லக்ஷ்மிபாய் மாதிரி விரைந்துவிடுவாள் என்று நினைக்க வைக்கும் லகானிட்ட வேகம் அவளிடமிருந்தது. ஜூலியா படம் நினைவிருக்கிறதா? தோழியைப் பார்க்க வெட்டப்பட்ட காலுடன் வருவாளே, வதைக்கப்பட்ட முகத்துடன். வனெஸ்ஸா ரெட்க்ரேவின் அந்த முகத்தை நினைவில் கொண்டு வா. அவளை நான் மறுபடி சந்தித்தேன். தெரிகிறது. நான் ஒரு அதீதக் கனவு கலந்த உருவத்தை ரோஸாவுக்குத் தந்து கொண்டிருக்கிறேன். அது இந்தக் கணத்தில் என் உணர்ச்சிகள் வடிக்கும் உருவம். இருக்கட்டும் அது. மிகை. வியப்பு. பூரிப்பு. இவை இப்போதைக்கு எனக்கு உரியவை ஆகட்டும். பிறகு நிதானமாகச் செதுக்கிக் கொள்ளலாம். அப்போதும் குறைந்துவிடாது எதுவும்.

இந்த முன்னுரையை நான் உனக்குத் தரவேண்டியிருக்கிறது. உன் தங்கையை உனக்கு அறிமுகப்படுத்த வேண்டியிருக்கிறது. கொள்கையில் உன்னுடன் உடன்படாமல் வன்முறைவாதிகளை ஆதரித்த தங்கையை. புத்தக அறிவு, மேற்கோள்கள், பலமணி நேரங்கள் தர்க்கம்புரியச் சொற்கள் - இவை மட்டுமில்லை (இவை நம்மில் யாரிடம் இல்லை? சொற்களைப் பற்றிக்கொண்டு தொங்குபவர்கள் தாமே நாம்!). இவற்றுடன் அவளிடம் இருப்பது ஒரு எழுச்சி பெற்ற மனச்சாட்சி. பல சரித்திர ஆதாரங்கள். ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குலைக்கப்பட்ட உடம்பு. ஒரு பறிக்கப்பட்ட உறவு. இந்தப் பின்னணியில்தான் நீ இந்த அறிக்கையைப் படிக்கவேண்டும்.

ரோஸாவுக்கு ஐந்து வயதிருக்கும்போது அவர்கள் ஜோபட் பட்டியில் (குடிசைப் பகுதி) ஒவ்வொரு வாரமும் வந்து அவர்களுடன் பேசிவிட்டுப் போகும் ஆண்களும் பெண்களும் ஒரு சித்திரப் பட்டறை நடத்தத் தீர்மானித்தார்கள் குழந்தைகளுக்கு. கலர் பென்சிலும் பேப்பரும் தந்தார்கள். நீலப்பென்சிலை எடுத்து முக்கால் பக்கத்தில் தேய்த்தாள் ரோஸா. கடலாம். நட்டநடுவில் காகிதக் கப்பல் மாதிரி ஒரு கப்பல். அதன் மேல் அரை நிஜாருடன் ஒருவன். அவன் கையில்ஒரு கொடி. அதில் நுணுக்கினால்: எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்று. தன்னந்தனியாய் நடுக்கடலில் அவன் யாரிடம் முறையிட்டுக் கொண்டிருந்தான் என்று தெரியவில்லை. ஆனால் அப்படி முறையிடுவது ஒரு தினப்படிச் செயலாக அவளுக்குப்பட்டது. மீதிக் காலபக்கத்தில் பழுப்புப் பென்சிலால் ஒரு இழுப்பு. கரை. குச்சி குச்சியாய் சோளக்கொல்லை பொம்மைபோல் கைகால்களை நீட்டிக்கொண்டு பலர் கரையில். எல்லோர் கைகளிலும் கொடிகள்: எங்கள் கோரிக்கைகளை நிறைவேற்று. கப்பலில் நின்றவனின் கையில் ஆரம்பித்து ஒரு அம்புக்குறி கீறினாள். கந்தசாமி என்று எழுதினாள். கோணல்மாணலாய். பிறகு ஆள்காட்டி விரலைச் சப்பிக் கடித்துவிட்டு அதை அடித்துவிட்டு எழுதினாள். லெனின்.

இன்னொரு விஷயம் அவளுக்கு ஞாபகம் இருக்காது. ஒரு மாலை, ஜோஷி மாமா லெனினின் விருப்பத்துக்கு இணங்கி மீண்டும் 1917 கதை சொன்னார். வெளியே வாகன சத்தம் கொஞ்சம் குறைந்திருந்தது. பிச்சைக்காரர்கள் ரொட்டிமாவு பிசைந்து சமையலை ஆரம்பித்தாகிவிட்டது. எங்கோ சௌபாட்டியில் கிளம்பிய உப்புக்காற்று பல கரிவாயுக்களுடன் கலந்து கொஞ்சம் சிலுசிலுக்க வைத்தது. லெனின், மாமா தோளோடு நெருங்கி. சப்பிய விரலுடன் அவள் ஒரு மூலையில். முடித்துவிட்டு வழக்கம் போல் கேள்விகளுக்கு நேரம் தந்தார் ஜோஷி மாமா. அவரை என்ன கேள்விகள் வேண்டுமானாலும் கேட்கலாம். கையை உயர்த்தி, அனுமதி வாங்கி, அமைதியாக, மரியாதையாகக் கேட்கவேண்டும். லெனின் வழக்கம்போல், 1917 வேறு இடங்களில் நடந்தால் என்ன ஆகும்? எல்லோரும் படிக்கமுடியுமா? எல்லோருக்கும் வீடு கிடைக்குமா? எல்லோரும் எல்லாம் சாப்பிட முடியுமா – கேக்கு கூட? கடைசிக் கேள்வியை அவன் எதிலும் நுழைத்து விடுவான். பிரஞ்சுப் புரட்சியின் அந்தக் கேக்கு பிம்பம் அவன் மனதில் ஒட்டிக்கொண்டு விட்டது. சப்பிய விரலை எடுத்துவிட்டு ரோஸா கையை உயர்த்தி வெடுக்கென்று மராட்டியில் கேட்டாள்: 'ஆம்சா ஸண்டாஸ் கராப் கா?' (எங்கள் கக்கூஸ் ஏன் அழுக்காக இருக்கிறது?).

பிரெஞ்சுப் புரட்சி விளையாட்டில் கிலோடினை இயக்குபவனாக மட்டுமே விளையாடுவேன் என்று பிடிவாதம் பிடித்து, ரத்தத்தை உறையவைக்கும் ஓலங்களோடு லெனின் குப்புறவும் மல்லாக்கவும் "செத்து" விழவேண்டும் என்று அவள்வீம்பு செய்திருந்தாலும் அவளுடைய ஆதர்சம் லெனின்தான்.

அவன் மேல்படிப்புக்கு டெல்லி போனபோது பிளாட்பாரத்தில் அவளும் இருந்தாள். எச்சிலையும் கண்ணீரையும் சேர்த்து விழுங்கியவாறு.

* * * * * * * * * * * *

அபிலாஷா திரும்பி எந்தநிலை வாகாக இருந்ததோ அப்படிப் படுத்துக் கொண்டாள். ரோஸா அவளது தலையணையைச் சரி செய்தாள்.

"சேதி பேப்பரில் வந்து ஒரு மாசம் ஆயிடுச்சே? அதெப்படி இப்பத்தான் அண்ணன் அனுப்பினாரு?"

"லெனின் என்னை அனுப்பினான்னு எப்படி நினைக்கிறே?"

"பின்னே?"

## அம்பை

குறைந்தளவு கதைகளை எழுதி, நவீன தமிழிலக்கிய உலகில் பெருமளவு கணிப்புக்கு ஆளான மிகச் சிலரில் அம்பை என்கிற ஸி.எஸ்.லக்ஷ்மி முக்கியமானவர். சிறு சஞ்சிகைகளிலேயே எழுதிவரும் அம்பையின் பரிசோதனை முயற்சிகளும், நடையும் தமிழுக்கு வளம் சேர்ப்பவை. பெரும்பாலானவை பெண்களை – அவர்களின் தளங்களில் நோக்கும் கதைகள்.

பெண்களின் சமூகநிலை பற்றிய ஆராய்ச்சி, எழுத்து, திரைப்படம் ஆகியவற்றில் தீவிர அக்கறையுடன் பம்பாயில் தற்போது வசித்துவரும் அம்பையின் சிறுகதையொன்று (மிலேச்சன்) திரைப்படமாகவும் வந்திருக்கிறது. தற்போது நடைபெற்றுவரும் லண்டன் திரைப்பட விழாவில் (London Film Festival) அம்பையால் தயாரிக்கப்பட்ட **'The Flying Bird'** என்ற திரைப்படமொன்று திரையிடப்படவுள்ளது. திரைக் கதையை அம்பையும் கணவர் விஷ்ணுவும் எழுதியுள்ளனர். விஷ்ணுதான் இப்படத்தின் நெறியாளர். 'பிரஞ்ஞை' என்கிற இலக்கிய சஞ்சிகையிலும் அம்பை அங்கம் வகித்தவர்.

'சிறகுகள் முறியும்' (1978) என்ற முதலாவது கதைத் தொகுதி வெளிவந்து பத்தாண்டுகளுக்குப் பிறகு 'வீட்டின் மூலையில் ஒரு சமையலறை' (1988) கதைத் தொகுப்பை சென்னை க்ரியா பதிப்பகம் வெளியிட்டுள்ளது. அத் தொகுப்பிலிருந்தே 'கறுப்புக்குதிரை சதுக்கம்' நன்றியுடன் இங்கு தரப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"'நாரி'ன்னு ஒரு பத்திரிகை வருது தெரியுமா? அதோட சார்பா நான் வந்திருக்கேன். உன்னைப் பேட்டி கண்டுட்டுப் போடலாம்னு."

மல்லாந்து படுத்து விட்டதைப் பார்த்து வெடித்துச் சிரித்தாள் ரோஸா. "நிஜமாவா?" என்றுவிட்டுக் குப்புறப்படுத்துச் சிரித்தாள்.

"நீ சிரிக்கிறாய்..."

"எனக்கு இது நடந்திருக்காட்டா வந்திருக்க மாட்டீங்க இல்லையா?"

"அப்படி இல்ல ரோஸா. நான் லெனின் கிட்ட நிறைய தடவை கேட்டுக்கிட்டேதான் இருந்தேன். இது நடந்தது..."

"ஒரு சாக்காயிடுச்சு! நல்ல சாக்கு! அண்ணனைக்கூட மசிய வெக்கற சாக்கு!"

"இங்க இருக்குற நாப்பத்திரண்டு சங்கமும் வந்தாச்சு என் கிட்ட. கூட்டத்துல நிறையப் பேசியாயிடுச்சி. எழுதியாயிடுச்சி. மராட்டி பேசத் தெரிஞ்சவங்க, சிகரெட் பிடிக்குற பொம்பளைக, வெள்ளைப் புடவைக்காரிக, எங்க கட்சி இதை எடுத்துக்கிட்டு வாதாடும்னு சொன்னவங்க எல்லாரும் வந்துட்டும் போயாச்சு. தமிழ்ப் பத்திரிகைக்காரர்கூட வந்தாரு ஒருத்தரு. இது சூடான நியூஸாம். பத்திரிக பேரு "மங்களம்". நல்ல மங்களமான, சூடான நியூஸ்!"

"ரோஸா, நீ..."

"இல்ல, இல்ல. தயவுசெய்து அண்ணி, நீங்களும், 'நீ கசப்படையக் கூடாது' அப்படீன்னுட்டு உபதேசம் பண்ணாதீங்க. இப்படிப் பண்ணினாங்க நிறையப் பேரு. அவங்களுக்குள்ளே எத்தனை சண்டை தெரியுமா? மார்ச் எட்டு அன்னிக்கு ஊர்கோலம் போகத் தீர்மானிச்சப்போ, ஒரு சங்கம் சொல்லிச்சு, வெலைவாசி உயர்வு, கெரோஸின், அரிசிப் பஞ்சத்தையும் இத்தோட சேர்க்கணும்னு. இன்னொண்ணு சொல்லிச்சு, ஒலகத்துல இருக்கிற முதலாளித்துவ முயற்சிகளை எல்லாம் இத்தோட இணைக்கணும்னு. இன்னொன்று சொல்லிச்சு ரஷ்யாவோட ஏகாதிபத்தியம் பத்தியும் சொல்லணம்னு. இடது ஒற்றுமை பற்றிச் சொல்லணம்னுட்டு ஒரு பொளவு. இப்படியே பேசிக்கிட்டே போனாங்க. கடைசிலே எல்லாரும் தனித்தனியா ஊர்கோலம் போனாங்க. காலாகோடா சதுக்கத்துலே சந்திச்சுக்கிட்டாங்க. அப்புறம் பேசினாங்க பேசினாங்க அப்பிடிப் பேசினாங்க..."

அபிலாஷாவால் அவள் வெடிப்பை ஏற்க முடிந்தது. அவர்கள் தப்புச் செய்யாமலில்லை. இடது, வலது, தலைக்குமேல், காலின்கீழ் என்று எங்கு பார்த்தாலும் குற்றம் பார்ப்பவர்கள் இருந்தால் எப்படி? கீதா சிகரெட் பிடிக்கிறாள். அது ஒரு பழக்கம்தான். எத்தனை குடிசைப் பெண்கள் பீடி பிடிக்கவில்லை? அவள் அதை ஒரு சின்னமாக்கவில்லை. சிகரெட்டை ஒரு உறிஞ்சு உறிஞ்சின பின் என்னமாக வார்த்தைகள் விழுகின்றன அவளுக்கு! அவள் மில் தொழிலாளிகளைப் பற்றி எழுதிய புத்தகத்தை மீறக்கூடிய ஒரு புத்தகம் யாரும் இன்னும் எழுதவில்லை. எவ்வளவு துல்லியமாக, கோட்பாடு ரீதியில் துளிக்கூடப் பிசகாமல் எழுதியிருக்கிறாள்! உலகத்து எந்தத் தொழில்சங்கம் எப்படி வேலை செய்கிறது என்பதைத் தூக்கத்தில் எழுப்பிக் கேட்டாலும் சொல்வாள். கட்சியில் அவள் பதவி மிக உயர்வானது. வெறும் புத்தகங்கள் எழுதுபவர்களை உலுக்கி எடுத்து விடுவாள் களத்துக்கு வா என்று. லெனினின் வழுக்கை மண்டையில் ஏறி உட்கார்ந்து விட்டாளே! லெனின்தான் பதிலுக்கு, "கீதா, நான் இடது என்கிறது மட்டுமில்லை, என் ஜாதியும் சேர்ந்துவிட்டால் உனக்கு ஒரு நல்ல உயிருள்ள சின்னம் கிடைத்துவிடும். மடக்குக் கதவைத் திறந்ததும் கண்ணைக் கவரக்கூடிய சின்னம். மன்னித்துக் கொள். இந்தக் கடை மூடியாகிவிட்டது. மற்ற கடைகளில் பார்" என்று சொல்லிவிட்டான்.

அவர்கள் செய்த பல போராட்டங்களுக்கு வலு இருந்தது. இல்லாமலா பலாத்காரம், வரதட்சிணை, இரண்டும் இவ்வளவு பெரிய விஷயமாயிற்று? நடைமுறையில் தப்பு விழுந்து போகிறது சில சமயம். இரவு கூடினோம். பதினொரு மணிக்கு. ஒரு மணி நேரத்தில் அத்தனை ஆபாசச் சுவரொட்டிகளையும் கறுப்படிக்க. மாலினி வேலைதான் பெயின்ட் வாங்கிவருவது. கொண்டு வந்திருந்தாள். அப்புறம்தான் அதில் எழுதியிருந்ததைப் படித்தோம், 'கலக்கி இரண்டு மணிநேரம் வைத்துப்பின் உபயோகிக்கவும்.' மாலினியை வாட்டிவிட்டோம். புரட்சிக்கு எதிரி என்றுகூட ஜெஸிகா சொல்லிவிட்டாள்.

அப்புறம் அந்தத் தீவட்டி வெளிச்ச இரவு ஊர்வலம். தீப்பந்தம் எல்லாம் ரெடி. கெரோஸின் கொட்டி எரியவைக்கும் போது போலிஸ் வந்துவிட்டது. கெரோஸின் அல்லது பெட்ரோல் தெருவில் எரியவைக்கக்கூடாது என்று. பின்னே இதை எப்படித்தான் எரியவைப்பது என்று சீறியபோது அந்த இன்ஸ்பெக்டர் சாந்தமாக "நெய்யை உபயோகித்துப் பாருங்களேன்," என்றார். அப்புறம் ஆளுக்கு ஒரு மெழுகுவர்த்தியோடு ஊர்வலம் போனோம். சுட்டிக் காட்டப்படக் கூடியவைதான். ஆனால் மேலே மிதக்கிற தப்புகள்தான். கனம் இல்லாதவை.

எல்லாம் சேர்ந்துதானே எழுச்சி? சிரிப்பு, கேலி, கோபம், விமர்சனம், ஆரவாரம், படபடப்பு, ஆக்ரோஷம் எல்லாம்தான் இருக்கும். ஆணின் கொட்டையில் இரண்டு உதை விட்டாலே போதும் எங்கள் குமறல் அடங்க என்று நினைப்பவர்களின் கோபத்தையும்தான் ஈர்க்க வேண்டியிருக்கிறது. தெருவில் ஒன்றுக்குப் போய்க் கொண்டிருப்பவனைப் பார்த்து "இழுத்து அறுத்து விடவேண்டும். அப்போதுதான் போகமாட்டான்" என்று குமுறும் சுலபாவிடம் வெறும் கோபம் மட்டுமில்லை. தயார் உடைகள் தயாரிக்கும் தொழிற்சாலையில் பெண்களைச் சங்கப்படுத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைநிறுத்தம் செய்ய அவள்தான் உழைத்தாள்.

எங்களிடம் பிளவுகள் உண்டென்றால் அது அமைப்பில் உள்ள பிளவுகளின் எதிரொலிதான். ரோஸா விஷயத்தில் அவளை வேறு மாதிரி அணுகியிருக்க வேண்டும். கிளிமூக்கு மாங்காய், மிளகுபொடி தூவிய வெள்ளரிக்காய்த் துண்டுகளின் சேர்க்கையோடு ராமபக்த ஹனுமான் படம் பார்த்தபோது, சடேலென்று மார்பைப் பிளந்து உள்ளே ராமர், மனைவி தம்பியுடன் இருப்பதைக் காட்டுவானே, அந்தமாதிரி ஒரு பரஸ்பர சம்பாஷனைத் தொடர்பு இருக்கவேண்டும். உள்ளே இருப்பதைப் பிளந்து காட்டுவது மாதிரி. எவ்வளவு சுலபமாக இருந்தது அந்த மாதிரி பேச்சுத் தொடர்பு! ஒரு நெற்றிக்கண்ணைத் திறந்தால் போதும், மீறிக் கோபம் வந்தால் ஒரு ஒற்றைக்கால் தாண்டவம். ஒரு குச்சியை எதிரில் போட்டுப் பேசினால்கூடப் போதும். வாயைப் பிளந்து காட்டினால் போதும் ஈரேழு உலகங்கள் தெரிய. எவ்வளவு எளிது. சொற்கள் சேரச் சேரத் தொடர்பு இற்றுப் போய் விட்டது. இதைமீறி ஒரு தொடர்பு இருக்கிறது. மௌனத்தில், கண்களில், கைகள் இணைவதில்.

ஒவ்வொரு பெண்ணும் இன்னொருத்தியின் கண் அடியின் கருவட்டங்களைத் தடவ வேண்டும். பிரசவக் கோடுகளில் உள்ளங் கைகளை வைக்கவேண்டும். புடைத்த நரம்புகளில் விரலை வைக்க வேண்டும். வெடித்த கால்களைக் கைகளில் ஏந்தவேண்டும். யோனியில் முகம் பதிக்கவேண்டும்.

(என் வருகையில் உன் பங்குபற்றி நான் அவளிடம் சொல்லவில்லை. அது பெரிய முன்னுரையாகிவிடும். உன் டெல்லி வாழ்க்கையின் ஆரம்ப வருடச் சோகங்களை இப்போது இவர்கள் கிரகிக்கும் நிலையில் இல்லை.

ஒரு கடும் வெய்யில் கால மாலையில்தான் - உன் ஆய்வுக் கட்டுரை பிரசுரமான வெய்யில்காலம் - நீ என்னை அணுகி "என்னுடன் நீங்கள் துணிக்கடைக்கு வரமுடியுமா?" என்றாய். கடையில் நீ இரு பான்ட் துணிகள் - நிறங்கள் கூட நினைவிருக்கிறது, கரும்பழுப்பும் கரு நீலமும் - மற்றும் இரண்டு ஷர்ட் துணிகள் எடுத்தாய். நான்தான் தேர்ந்தெடுப்பதில் உதவினேன்.

நாங்கள் சுட்டிக்காட்டிச் சிரித்த உன் தொள தொள பான்ட்களுக்கும், ஹிந்தி சினிமா வில்லனின் சாயம் மங்கிய மேல் உடைகள் போன்ற சட்டைகளுக்கும் அதன் பின்தான் நீ விடுதலை தந்தாய். அதுவரை குளிர்காலத்தில் மெத்தையின் ஒரு பகுதியால் உன்னை மூடிக்கொண்டு நீ தூங்கினாய். பாதிரி கோட்டுமாதிரி ஒரு கறுப்புக் கோட்டும், உன் கறுத்த நிறத்தின் பின்னணியில் பளீரென்று அடித்த ஒரு வர்ணக் கலவைக் கம்பளிச் சட்டையும். ஆனால் அவற்றில் நீ கூச்சப்படுவதுபோல் தெரியவில்லை. நீ குறுகிப்போனது நம் புரொபஸர் தன் தயாள மனப்பான்மையை வெளியிட "இதுதான் நான் சேர்த்துக்கொண்டுள்ள ஹரிஜன் ஸ்டூடன்ட் என்று உன்னை எழுந்து நிற்கச் சொன்னபோதுதான். அதைவிட, பம்பாயிலிருந்தே உனக்கு உதவி, இதுவரை உன்னை ஊக்கியிருந்த குமார் உன் தோளின்மேல் எஜமானனின் கையை வைத்ததுதான் உன்னைக் குத்தியது. தன் தெளிய மார்க்ஸிய சித்தாந்தங்களை உன்னுடன் பகிர்ந்துகொண்ட குமார், "உதாரணமாக நம் லெனினை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று அவன் உன்புறம் கையை நீட்டியபோதெல்லாம் அந்த விரலிலிருந்து உன் பக்கம் தேள்கள் பாய்ந்தன. தான் கைதூக்கிவிட்ட தோரணையை அவன் விட மறுத்தபோதுதான் நீ விலகினாய். ஒரு நாடகம் கலந்த நிகழ்ச்சியில், ஹரிஜன மாணவர்களிடம் நீ பேசி அவனுக்கு ஓட்டுப் போடச் செய்யவேண்டும் என்று அவன் விரும்பினான். "ஹரிஜன் மாணவர்கள் வாழ்க்கையில் நிறையக் கஷ்டப் பட்டிருக்கிறார்கள். எதுவும் அவர்களாக விரும்பித் தேர்ந்தெடுக்காத கஷ்டங்கள். அவர்களாகத் தேர்ந்தெடுக்கும் கஷ்டமாக இருக்கும் உன் தலைமை. இதை நான் செய்யமுடியாது. 'என் அருமை மார்க்ஸிய நண்பர்களே' என்று நீ அழைத்துப் பேசும்போது ஹரிஜனர் என்ற அர்த்தம் அதில் தொக்கி இருக்கும். அதைக் கேட்க சில குற்றமற்ற செவிகளை என்னால் அனுப்பமுடியாது." - எல்லார் முன்னாலும் நீ சொன்னாய். உன்னுடைய அந்தச் சகிக்கமுடியாத கறுப்புக் கோட்டில் நீ இருந்தாய். யாரும் உன்னைக் கவனிக்கக்கூட இல்லை. நீ பேசியவுடன் ஒரு மின்சாரம் பரவியது. நன்றி மறந்த நாய் என்றான் குமார். நீ கதவருகில் போய் திரும்பிப் பார்த்தாய்: ஒரு நாயின் கண்மூலம் உன்னைப் பார்க்கும்போது நீ ஒரு சுவையான எலும்புத் துண்டாகக்கூடத் தெரியவில்லை எனக்கு என்றாய்.

எவ்வளவு பாலைவனங்களைக் கடந்து, கால்கள் கொப்பளிக்க, குருதியும் சீழும் சேர நீ நடந்தாய் என் நண்பா! ஆனால் உன் வேர்கள் அருகே இவ்வளவு ஈரம் கசியும் மண் இருக்கும்போது அதில் உன் பாதங்களை அவ்வப்போது பதித்திருக்கலாகாதா? ஆனால் உன் அடி மனதில் இவர்களைப் பற்றி ஒரு அவமான உணர்ச்சி ஏற்பட்டுவிட்டது என்று நினைக்கிறேன். நல்ல பதவிக்கு வந்துவிட்ட அமெரிக்கக் கறுப்பன் ஹார்லெமில் உள்ள பெற்றோர்களை நினைத்து அவமானப்படுகிறான் என்று சோபனா படித்த கட்டுரை நினைவிருக்கிறதா?)

இனி விஷயத்துக்கு வருகிறேன்.

ஆரம்பச் செய்திகளில் ஒரு விட்டேற்றித்தனம் இருக்கிறது. ஒரு பெண்ணுக்கு இப்படி ஆனதுபற்றி இவர்களின் குடிசைப்பகுதியினர் நடத்திய ஊர்வலம்பற்றிய நாலெழுத்துச் செய்தி மட்டும்தான். பலாத்கார எதிர்ப்பு அணி இதில் ஈடுபட்டு அவர்கள் வக்கீல் பகிரங்க அறிக்கை விட்ட பின்புதான் மற்றப் பத்திரிகைகள் இதைப் பற்றிப் பத்திபத்தியாய் எழுதுகின்றன. இந்தச் செய்திகளையும் வக்கீலின் அறிக்கையையும் நான் ஒரு வார்த்தை விடாமல் படித்துவிட்டேன். ப.எ. அணியின் செயலாளர் மீனா அரோரா எல்லாவற்றையும் தந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இண்டியன் எக்ஸ்பிரஸ்" இதை முதல் பக்கத்தில் பெரிய அடைப்புச் செய்தியாய்ப் போட்டிருக்கிறது. இதன்பின் "இண்டியன் எக்ஸ்பிரஸ்" பின்வாங்கிய காரணம் ரோஸா போலீஸ் புகார் கொடுக்க மறுத்ததுதான். ப.எ.அணியின் வேகம் தடைப்பட்டதும் இதனால்தான். இங்குதான் அவர்களுக்கும் ரோஸாவுக்கும் இடையே பிளவு. அவர்களால் அவளைத் தாக்குப்பிடிக்க முடியவில்லை. மாற்றமுடியவில்லை. அவள் அவர்கள் காரியாலயத்தின் ஒரு கூட்டத்தில் பேசியதை அவர்கள் ரிகார்ட் செய்திருந்தார்கள். நான் கேட்டேன். அவள் ஆரம்பிப்பதே ஒரு தாக்குதல். "எனக்கும் உங்களுக்கும் இடையே நிறைய வித்தியாசம் இருக்கிறது. உங்கள் புடவையின் தரத்துக்கும் என் புடவையின் தரத்துக்கும் உள்ள வித்தியாசத்தை நான் சொல்லவில்லை. அதைவிடப் பெரிய வித்தியாசம், உங்களை யாரும் பலாத்காரம் செய்து உங்களைக் கிழிக்கவில்லை. நான் கிழிபட்டிருக்கிறேன். ரத்தம் கொட்டியிருக்கிறேன். நம்மைச் சேர்த்திருப்பதும் இதுதான். நம்மைப் பிரிப்பதும் இதுதான்.

ஷீலா குல்கர்னி "ஈவ்ஸ் வீக்லி"யில் இந்தக் கூட்டம் பற்றி எழுதுகிறாள் - "என் பூர்ஷ்வா வாழ்க்கையில் டீச்சரின் சிறு கோபம், சகத் தோழிகளின் காய்விட்ட கோபம், அம்மா அப்பாவின் கண்டிப்பான வளர்ப்புக்கான கோபம், கணவரின் சில்லறைச் சிடுசிருப்புக்கள் தவிர கோபத்தை நான் அறிந்தவளல்ல. இதனால்தான் ரோஸா என்னிடம் பயத்தை உண்டாக்குகிறாள். அதைப்போல் கோபத்தை நான் பார்த்ததில்லை. அனுபவித்ததில்லை. அவள் சொன்னதைக் கேட்டுவிட்டு எழுந்தபோது என் உடலெல்லாம் வியர்த்து உள் ஆடைகள் ஒட்டிக்கொண்டு விட்டன. அவள் கடைசியில் கேட்ட கேள்வி இன்னும் என்னில் எதிரொலிக்கிறது. யாரிடம் நீங்கள் நீதி கேட்க விரும்புகிறீர்கள்? யார் என்னைக் குலைத்தார்களோ அவர்களிடமா? யாருக்காக இருக்கிறது நீதி மன்றம்? எனக்காகவா? நான் ஒரு ஈ, எறும்பைக்கூட வேண்டுமென்றே கொன்றது கிடையாது. ஆனால் ஒரு நாள் வரும். அப்போது அந்தப் போலீஸ் ஸ்டேஷனில் உள்ள ஒவ்வொருவனின் குடலையும் நான் பிரித்து இழுத்து வெளியில் போடுவேன். அவர்கள் ரத்தத்தைப் பூசிக்கொள்வேன். இதற்கு எனக்கு எந்த நீதி மன்றத்தின் அனுமதியும் தேவையில்லை. நான் அனுமதி கேட்பவளில்லை. பறிப்பவள்.

இப்படி அவள் சொல்லித் தலையை ஆட்ட, கட்டியிருந்த நீண்ட முடி மறைத்து வைத்திருந்த பாம்பு மாதிரி பொட்டென்று கீழே விழுந்தது. அந்த பிம்பம் என் மனதில் என்றும் இருக்கும்" என்று முடிக்கிறாள் ஷீலா குல்கர்னி அவள் கட்டுரையில்.

எட்டாவது மார்ச் ஊர்வலக் கோரிக்கையில் பல கட்சிகளின் கோரிக்கைகளில் ஒன்றாகத்தான் இருக்கிறது ரோஸாவின் விவகாரம். காரணம், நீ ஆதரிக்கும் கட்சியினர் இதைத் தனித்த ஒரு நிகழ்ச்சியாக முக்கியத்துவம் கொடுக்க விரும்பவில்லை.தனி நபர் பற்றிய விவகாரம் அளவுக்கு மீறி விரிவதை அவர்கள் எதிர்த்து இருக்கிறார்கள். இதை அமைப்பின் சறுக்கல்களின் பின்னணியில் பார்க்கவேண்டும் என்கிறார்கள் அவர்கள். அனைத்துலக நிதி ஸ்தாபனத்தின் நடைமுறைக் கொள்கைகள், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் சந்தை ஆக்கிரமிப்பு, இவற்றின் மகத்தான பின்னணியில்தான் இங்குள்ள அமைப்பின் குறைபாடுகளைப் பார்க்கமுடியும் என்று கூறுகிறார்கள். முதலில் அமெரிக்கத் தூதரகம் முன்பு நின்று அதை எதிர்த்துக் கோஷமிட்டபின்தான் ஊர்வலம் என்பது அவர்கள் கட்சி. ரஷ்யாவை ஏன் விட்டுவிட்டீர்கள். அந்த ஏகாதிபத்தியம் மட்டும் குறைவா? நாங்கள் குடிசையில் உள்ள பெண்களிடம் எழுச்சியை உண்டாக்குகிறோம். அதனால் விலைவாசி உயர்வு, தண்ணீர்ப் பிரச்சினை, கெரோஸின் விலை இவற்றையும் கோரிக்கைகளில் இணைக்கவேண்டும். அப்படித் தூதரகம் முன்பு கோஷமிடவேண்டும் என்றால் நாங்கள் ரஷ்யத் தூதரகம் முன்பும் கத்துவோம். தயாரா? என்று அடுத்த கட்சி. ப.எ.அணி இந்தப் பிரச்சினையைப் பிரதானமாக வைப்பது வெறும் ஆண்-எதிர்ப்பாகப் புரிந்து கொள்ளப்படலாம்.. அதைப் பொலீஸாரின் வன்முறைக்கு எதிர்ப்பாகக் கொண்டாலும் முக்கிய பிரச்சினைகளிலிருந்தும் பார்வை திசை திரும்பி விடும்; அதனால் அதற்கு ஒரு தனி ஊர்வலம் இன்னொரு தினம் நடத்தலாம் என்று தீர்மானித்து, அடுத்த நாளே அதைச் செய்யவும் செய்திருக்கிறார்கள். பலாத்காரச் சட்டம் பற்றிக் கூட்டமும் போட்டிருக்கிறார்கள். சட்டம்பற்றிய மறுபார்வை இப்போது ஏற்றுக் கொள்ளப் பட்டு விட்டாலும் ரோஸா விஷயம் பிசுபிசுத்துப் போனதற்குக் காரணம் ரோஸாதான். அவள் ஊர்வலத்திலும் கூட்டத்திலும் கலந்து கொள்ளவில்லை.

சில ஜனநாயக உரிமைக் கழகங்கள் மூலம் பிரபாகர் ஷிண்டேயின் கட்சியினர் அவளை அணுகியபோது, "வாழவேண்டிய இளைஞர்களைக் கண்ணைப் பறித்து, எலும்புகளை உடைத்து, முட்டியைப் பெயர்த்துப் பாட்டு வைத்திருக்கிறார்கள். போய் மீளுங்கள் அவர்களை. காடுகளில் துரத்தி அடித்துக் கொல்கிறார்கள். அதைத் தடுக்க என்ன செய்தீர்கள்? எனக்கு நீங்கள் என்ன செய்யமுடியும்? போய் எழுதுங்கள் அறிக்கைகளை. ரோஸா பலாத்காரம் செய்யப் பட்டாள்; அவளுக்கு நீதி வேண்டும் என்று. கொல்லப்பட்ட பிரபாகர் ஷிண்டேயை மீட்கமுடியுமா உங்களால்? முகம், உடம்பெல்லாம் வீங்கி வீங்கிச் செத்தான். எங்கே போனீர்கள் அப்போது? விழுந்து அழ எனக்கு ஒரு ஆதரவான தோள் அப்போது கிடைக்கவில்லை. அன்பும் பாசமும் பலவீனங்கள் என்று முணுமுணுத்தீர்களாமே? இப்போது என்ன அக்கறை?" என்று கண்டபடி கோபமாகப் பேசி அனுப்பியிருக்கிறாள்.

இப்படித்தான் அந்த விவகாரம் தேங்கிவிட்டது.

* * * * * * * * * * * *

மரங்கள் அடர்ந்த, நிலா வெளிச்சம் இலை நுனியைத் தொட்டு மடங்கிவிழும் வனத்தில் கோதாவரி பாருலேகர் நடந்தாள். ஆங்கிலேயர்களால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒடுக்கப்பட்டு நசுங்கிக் கொண்டிருந்த ஆதிவாசிகளின் நேசம்பெற அவள் நடந்தாள். அவளிடம் சுமை ஏதும் அதிகம் இல்லை. ஒரேஒரு சிவப்புக் கொடிதான். அவர்கள் அவளை ஏற்கும்வரை மரத்தடியில் தூங்கும் போதும், ஏற்றுக்கொண்டபின் ஆடு, ஆட்டுப் புழுக்கையுடன் ஒரே அறையில் உறங்கியபோதும், தேநீர் வேண்டும் என்று நாவு தவித்தபோதும் அவளை உற்சாகமூட்டியது அந்தக் கொடிதான். பைபிளைக் கையில் பிடித்துக்கொண்டு ஆபிரிக்கக் காடுகளில் புகுந்து அலைந்து நடந்த கிறிஸ்துவச் சமயப் பரப்பாளர்களின் ஆர்வத்துக்கு இணையானதுதான் அவளுடையது. ஆனால் இவளிடம் கடவுள் இல்லை. இருந்ததோ ஒரு மன எழுச்சி உண்டாக்குவதற்கான பலம்தான்.

அதே காடுகளில் அவள் வழியில் நடந்தவன்தான் சுதாகர் ஷிண்டே. பின்பு வேறு வழியில் போனவன். பிரபாகரின் அண்ணு. அதே காடுகளில்தான் அவன் பலமுறை துரத்தப்பட்டதும். கடைசியில் சிறையில் அவன் தூக்குப் போட்டுக்கொண்டதாகச் சொன்னார்கள்.

ஒரு நீலம் பாரித்த கழுத்தின் மேல் தன் அரசியல் ஏறாத விரலால் பிரபாகர் ஷிண்டே நீவி விட்டிருக்கிறான். விரலில் அந்த நீலம் ஏறியது போலிருந்தது. அந்த நீலக் கழுத்து அவன் மூளையின் பாதியில் என்றும் அடைத்துக் கிடந்தது. அவனுக்கு ஆதிவாசிகளின் குடிசைகளில் தூங்க ஒரு இடம் எப்போதும் இருந்தது.

ஆதிவாசிகளின் நிலப் பிரச்சினைபற்றிய கூட்டம் ஒன்றில் பெண்கள் குழு ஒன்று தொழிலாளிப் பெண்களுடன் வந்தது. அப்போது ரோஸாவும் வந்திருந்தாள். கூட்டுப் பாடல்களுக்கு அவள்தான் முதல் குரல் கொடுத்தாள். மராட்டியில் அடி ஆழத்தில் கொஞ்சம் தமிழ்ப் பசையோடு பாடினாள். அவள் இன்னும் ஆலைத் தொழிலாளிகள் சங்கத்தில் வேலைசெய்ய ஆரம்பித்திருக்கவில்லை. தன் தோழியோடு வந்திருந்தாள். லெனினின் கருத்துப்படி மேலே படிக்கலாம் என்றிருந்தாள்.

பிரபாகர் ஷிண்டே அவள் வாழ்க்கையின் முதல் திருப்புமுனை. அவள் படிக்கவில்லை. சங்க வேலைகளில் ஈடுபட்டாள். அதைக் கனவுகளில் மிதக்கும் செய்கையாக நினைத்தான் லெனின். வந்தான். ரோஸா நேருக்குநேர் அவனைப் பார்க்கும் உயரம் வளர்ந்து விட்டிருந்தாள். பிரபாகர் ஷிண்டேக்கும் லெனினுக்கும் விரலைச் சுட்டிச் சண்டையிட்டுக்கொள்ள நிறைய விஷயங்கள் இருந்தன. "சுவரைத் தாண்ட ஏணி வேணும். சுவரையே உடைச்சிட்டா எப்படி?" என்று லெனின் பேசும் முன், "இந்த உபமானங்களை ஏதாவது கருத்தரங்கில சொல்லுங்க. அதுதான் சரியான இடம். நீங்களெல்லாம் இருக்கவேண்டிய இடம்" என்று ஷிண்டே இடைவெட்டியதும், அடிதடி வராத குறைதான்.

ஒருநாள் சாயங்காலம் பிரபா ஒரு மராட்டிக் கட்டுரை படித்துக் காட்டிக்கொண்டிருந்தான் ரோஸாவுக்கு. ஒரு ஆஸ்பத்திரியில் ஒரு சின்ன டாக்டர். அன்றைக்கு அவருக்கு இரவு ட்யூட்டி. நான்கு கிராமத்து ஆட்கள் ஒரு பதினேழு வயசு பூரண கர்ப்பிணிப் பெண்ணைக் கட்டிலில் போட்டுக்கொண்டு எடுத்துவந்தார்கள். பெண்ணைப் பரிசோதித்த சின்ன டாக்டருக்கு வியர்த்தது. ஒரு குஞ்சுக் கை அவளது தொடைகள் இடையே நீட்டிக்கொண்டிருந்தது. அதில் பச்சையும் நீலமுமாய் சீழும் விஷமும் ஏறிக் கொளகொளத்துக் கிடந்தது. அவர் ஓடிப்போய் தனக்கு மேல் இருந்த டாக்டரை அழைத்து வந்தார். அது லட்சத்தில் ஒரு கேஸ் அந்த ஆஸ்பத்திரியைப் பொறுத்தவரை. செய்யக்கூடியதெல்லாம் துண்டுதுண்டாகக் குழந்தையை வெளியே கொண்டு வருவதுதான். அதை அவர் செய்தார். மறுநாள் காலை பெரிய டாக்டர் அறையில் சண்டை. அந்தக் குறிப்பிட்ட அறுவை சிகிச்சை புத்தகத்தில் படித்தபின் செய்துபார்க்க பெரிய டாக்டருக்குச் சந்தர்ப்பம் வாய்த்ததில்லை. அவர் காலையில் வரும்வரை செய்திருக்கக் கூடாது என்பது அவர் வாதம். பெண்ணைக் காப்பாற்றச் செய்ததாக இரவு டாக்டர் கூறினார். பெரிய டாக்டர் அவர் ஸீனியாரிட்டியை அவமதித்து விட்டதாகச் சொன்னார். சின்ன டாக்டர் கிராமத்தினரிடம் வந்தார். அவர்களுக்கு உபதேசிப்பது தன் பட்டணத்துக் கடமை என்று நினைத்தார்: "முன்பே கூட்டி வரக்கூடாதா?" என்றார். அவர்களில் வயதானவர், "கூட்டிவரலாம். எங்க கிராமத்துல ரொம்ப நாளுக்கு அப்புறம் மழை கொட்டிச்சு. எல்லாரும் வயல் வேலைக்குத் தேவைப் பட்டாங்க. இவளும் வயல்லதான் இருந்தா. வேலை முடிஞ்சதும் கூட்டிட்டு வந்தோம்" என்றார். அந்தக் கொளகொளத்த கை தொங்க அவள் வயல் வேலை செய்திருப்பாள் என்பது சின்ன டாக்டரின் வயிற்றைப் பிசைந்தது. அவரே எழுதியிருந்தார் கட்டுரையை.

படித்துவிட்டு லெனின் பக்கம் திரும்பினான் பிரபா. "அறிவு ஜீவிகள் இதற்காக ஒரு சொட்டுக் கண்ணீர் சிந்தமுடியுமா? கண்ணீர் இருக்கிறதா உங்களிடம்?" என்றான். எழுந்த லெனின் தன் கையில் இருந்த கண்ணாடி டம்ளரை பிரபாகரின் மீது கோபமாக வீசிவிட்டு வெளியேறினான்.

* * * * * * * * * * *

"அண்ணி"
"உம்?"
"தூங்கிட்டீங்களா?"
"இல்லையே!"
"'நாரி' பத்திரிகைக்காக மட்டும்தானா வந்தீங்க?"
"அதுக்கும் சேர்த்து"
"ஷீலா குல்கர்னி மாதிரி நல்ல இங்கிலீஷில் எழுதவா?"
"இதுக்கு நான் என்ன பதில் சொல்ல? கொலஞ்சு நசுங்கிப் போகாத பொண்ணுங்க கிட்ட உனக்குக் கோவம் போல."
"சே..."

"பின்னே? நேத்து கார்பாடா பக்கத்துல ஒரு பதினாலு வயசுப் பொண்ணு. ரெண்டு போலீஸ், ரெண்டு வட்டாரத்து தடியன்களா சேர்ந்து பூவை மிதிக்கிற மாதிரி... அந்தப் பொண்ணு தலையைத் தடவுறபோது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது உன் கையா இருக்கணம்னுட்டு நினைச்சேன். நீ ஒரு தடவு தடவி அவளைச் சரிப்படுத்திப்புடுவே. உன்னாலே முடியும். உனக்கு அது புரியும்."

"அன்னை தெரிஸாவா ஆகச் சொல்றீங்களா?"

"அதுக்கு நிறையபேர் இருக்காங்க. நீ உன் கோவத்தை எங்களுக்கு பலமா தா."

"யோசிக்கிறேன்."

* * * * * * * * * * * *

ரோஸா எனக்கு ஒரு பேட்டி தந்தாள். அதன் முக்கிய பகுதிகளை உனக்குத் தருகிறேன்.

பிரபாகர் ஷிண்டே மிகவும் மென்மையானவன். வெறும் அடுப்பு எரியும் வெளிச்சத்தில், இரவுகளில், ஆதிவாசிக் குடிசைகளில் அவனுடன் அவள் மாவுச் சோறும், பச்சை வெங்காயமும் சாப்பிட்டிருக்கிறாள். காலையில் கையால் குத்தி உடைத்த அரிசிக் கஞ்சியுடன், பூண்டும் மிளகாயுமாய் இடித்த சட்னி சாப்பிட்டிருக்கிறாள். மில்லிலும், ஆதிவாசிகளிடையேயும் அவன் பெயர் ஃபக்கிர், சந்நியாசி. எதற்கும் நிதானத்தை இழக்காதவன். (இந்த நியதி உடைந்தது உன்னிடம் மட்டும்தான்.)

அந்தக் குறிப்பிட்ட மாலையை அப்புறம் அவள் பலமுறை நினைத்துப் பார்த்தாள். சிறுசிறு விஷயங்களும் பிரம்மாண்ட நினைவுப் பிழம்புகளாய் உள்ளன அவள் மனத்தில். அன்று மத்தியானந்தான் அவன் ஆதிவாசிகள் இருப்பிடத்திலிருந்து திரும்பியிருந்தான். அவள் சங்கத்திலிருந்து வந்தபோது அவன் வந்திருந்தான். அன்று அவள் சீக்கிரமாகவே வந்திருந்தாள். மில்லின் கிடங்கில் யாரோ நெருப்பு வைத்துவிட்டார்கள். ஒரே குழப்பம். அவனும் அம்மாவுமாகப் பெரிய விருந்துக்கான பட்டியல் போட்டிருந்தார்கள். பூரி, கடி, ஆலூரோஸ்ட், புலாவ், ராய்தா. விஷயம் என்னவென்று கேட்டால் இருவரும் சொல்லாமல் சிரித்தார்கள். விருந்துப் பட்டியலில் இருந்த விஷயங்கள் எல்லாம் அவளுக்குப் பிடித்தது.

மில் கிடங்கு பற்றி அவனிடம் சொல்லிவிட்டுக் குளித்து உடைமாற்ற அவள் உள்ளே சென்றாள். பத்து நிமிஷத்திற்குள் அவள் வெளியே வந்தபின் அது நடந்தது.

ரோஸா சொன்னாள்:

பிரபாவைப் பிடிச்சுக்கிட்டுப் போனபோது அவரு ரோஜாச்செடிக்குத் தண்ணி விட்டுக்கிட்டிருந்தார். சாதாரண அரெஸ்ட் இல்லை. பின்னால ஒரு உதை. கீலே விழுந்து பல்லு தெறிச்சிச்சு. பிடரில ஒரு அடி. அவரு வாயில ரத்தம் ஒழுகிச்சு.

"கோடவுன்ல நெருப்பு வெச்சிட்டு இங்கியா வந்தே?"ன்னாங்க.

"நான் இங்கியேதான் இருக்கேன்"னு சொன்னதுக்கு ஒரு அறை. கண்ணு முன்னாலியே ஒரு கண்ணு வீங்கி மூடிக்கிச்சு. அடுத்த நாள் நானும் இன்னும் சில பேரும் போனோம். முதல்ல அவங்கதான் போனாங்க.என்னை வேண்டாம்னாங்க. ஆனா நான் போனேன். அவரைக் கிழிச்சுப் போட்டிருந்தாங்க. ஒதடு நீலமா வீங்கியிருந்திச்சு. பேச முடியலை. மார் மயிரெல்லாம் ரத்தம். ஒரு கையி மடங்கி நீலமா கிடந்திச்சு. மொகமெல்லாம் வீக்கம். மொனகினாரு. நான் கூப்பிட்டப்போ திரும்பினபோது லுங்கி வெலகிச்சு. தொடயெல்லாம் நீலம். கொட்டை, பலூன் மாதிரி வீங்கி நாகப்பழக் கலர்ல பளபளன்னு இருந்துச்சு. இன்னிக்கும் கண்ணை மூடினா தெரியறது அந்த வீங்கின கொட்டைதான். நீலபலூன் மாதிரி உப்பிக்கிட்டு, ரத்தம் ஒலந்துபோய்... வலிச்சிருக்கும்... எவ்வளவு வலிச்சிருக்கும்... அவ்வளவு வீங்க எவ்வளவு உதை... பலமான பூட்ஸ் காலால... ஒத்தக் கண்ணால என்னப் பார்த்தாரு. கண்ணுல உசிரு இல்ல. செவசெவன்னுட்டுக் கொழம்பிக் கிடந்துச்சு. வாயை அசைச்சாரு.

அதுதான் கடைசி. மறுநா ஒடம்புதான் கெடச்சுச்சு. நானும், அம்மாவும், அவங்கம்மாவும், தங்கச்சியுமே அதைச் சொமந்துகிட்டு ஊர்கோலம் போனோம். அப்புறமா என்ன வந்து அரெஸ்ட் பண்ணிணாங்க.ஒடந்தைன்னுட்டு.

பொம்பளை போலீஸ் ஸ்டேஷன் போனா என்ன ஆகும்? அதுதான் ஆச்சு. தடிதடியா வந்து விழுந்தாங்க மேல. மயக்கம் போட்டப்ப எல்லாம் தண்ணி அடிச்சு எழுப்பினாங்க. முழிக்கிறபோதெல்லாம் ஒருத்தன் மேல இருந்தான். அவங்க பண்ணி சலிச்ச பிறகு இருக்கவே இருக்குது குச்சி, கம்பு, ஒயருன்னு. எதெது நுழையுதோ அது. அப்புறம் சிகரெட் நெருப்பால மார்ல சுட்டாங்க. கோடவுன்ல நெருப்பு வைச்சவன் கெடச்சுட்டான். உடம்புல பண்ண இன்னும் ஒன்னும் இல்ல - வெளீல அனுப்பிட்டாங்க.

வந்த ஒடனே அம்மா என்னைப் பார்த்துக் கேட்டாங்க - விபரீதமா எதுவும் நடக்கல்லியேடீ பெண்ணே - பயந்துகிட்டே கேட்டாங்க.

ரோஸா சிரித்தாள்.

**திரு.கு. குகமூர்த்தி.**

இனங்களிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தின் (MIRJE) தேசியக் குழு உறுப்பினரும் மனித உரிமைகள் வாதியுமான குகமூர்த்தி அவர்கள், வேலைத்தலமான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திலிருந்து வீடு திரும்பும் வழியில் ஆயுதபாணிகளால் கடத்தப்பட்டுள்ளார்.

உலகம் முழுவதும் இயங்கும் மனித உரிமைக் குழுக்களும், இலங்கையின் பல முற்போக்கு அமைப்புகளும் அவரை விடுதலை செய்யுமாறு அரசைக் கோரியுள்ளன!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(கைது செய்யப்பட்ட அன்று மாலை விருந்து எதற்கு என்று உனக்குத் தெரியவேண்டும். அது உன் தங்கையின் கர்ப்பத்தைக் கொண்டாட. டாக்டர் உன் அம்மாவிடம் அன்றுதான் செய்தியை உறுதிப்படுத்தியிருந்தார். ரோஸா இதை என்னிடம் கூறவில்லை. பிரபாகரின் தங்கை என்னிடம் சொன்னாள்.

ரோஸா திரும்பிவந்த அன்று மத்தியானம் உட்கார்ந்திருந்தாளாம். அடி வயிற்றில் வலி என்று அவள் கூறி முடிப்பதற்குள் அவளைச் சுற்றிலும் ரத்தக் களறியாம். அப்படித்தான் ஒரு சின்ன பிரபாகரோ, ரோஸாவோ தங்கள் முடிவுக்குத் தள்ளப்பட்டது. நான் ரோஸாவிடம் இது பற்றிக் கேட்டபோது, "ஆமா நான் சொல்லல. யார் கிட்டயும் சொல்லல. நடந்த கோரத்துல இது ஒரு கோரம். இங்க செல பொம்பளைங்களுக்குப் பத்து மாசம் முழுசும் உசிரைச் சொமக்கறதுக்கான சுதந்திரமும், உரிமையும் இன்னும் வரலபோலிருக்குது. இதை எந்தத் தூதரகம் முன்னால் போய் கத்தட்டும் நானு? எந்த ஜட்ஜுக்கு நேரம் இருக்குது இதைக் கேட்க?" என்றாள். பின் அவள் தன் இரு மார்பகங்களையும் கல்லைச் சுமப்பதுபோல் தன் இரு கைகளால் தாங்கி, பொட்டுக் கண்ணீர் இல்லாமல் ஒரு கேவல் கேவினாள். கனத்து வரும் என் மார்பகங்களை அடிக்கடி தொட்டுப் பார்த்து, அதில் நிழலாடத் தொடங்கியிருக்கும் பச்சை நரம்புகளில் நீ உன் இதழ்களை, வலிக்கக்கூடாது என்று பஞ்சுபோல் மெத்தென்று வைப்பதை நினைத்துக் கொண்டேன்).

* * * * * * * * * * *

காசிபாயி பரேலுக்கு வந்து எத்தனையோ வருடங்களாகி விட்டன. அவள் வயதையெல்லாம் கேட்பது அவளைப் பகைத்துக் கொள்வதற்கான ஆயத்தம்தான். "ஏன் மாப்பிள்ளை பார்த்திருக்கிறாயா? கூட்டிவா. ரெண்டு பெத்துக்கலாம் இன்னும்" என்பாள் பளிச்சென்று. அவளுடைய பிள்ளை குடித்துவிட்டு போலீஸ் லாக்கப்பில் கிடந்தால் கூட்டிவருவது இவள்தான். போலீஸ் அடிக்க மறந்த அடியை இவளே அவன் மண்டையில் போட்டு விடுவாள்.

பரேலே அவள் கண் முன்தான் விஸ்தாரமாயிருக்கிறது. ஏன், லஞ்சம் வாங்கிய காண்டிராக்டர்கள் அந்த மேம்பாலம் கட்டி, அது ஒரு இரவு உடைந்து கீழே படுத்திருந்த எல்லோரையும் துவம்சமாக்கிய சமீப நிகழ்ச்சிகூட அவள் முதலிலேயே யூகம் செய்ததுதான். "மும்பாயில் உடைந்து விழாமல் எது கட்டியிருக்காங்க இதுவரை?" என்று நிகழ்ச்சியைத் துடைத்து விட்டுவிடுவாள்.

பரேல் விநாயகர்கூட இவள் கண்முன் வளர்ந்தவர். விநாயக சதுர்த்திக்கு உட்காரும் சிறு பொம்மையாக இருந்தவர், ஒவ்வொரு விநாயக சதுர்த்திக்கும் வளர்ந்துகொண்டே போய், இந்த வருடம் அறுபது அடியாக நின்றதுவரை சரித்திரம் காசிபாயிக்குத் தெரியும். நின்றது மட்டுமல்லாமல், ஒரு காலை இன்னொன்றின்மேல் வளைத்து, கையில் புல்லாங்குழல் வேறு. ஏன், கிருஷ்ணனின் ஏகபோக உரிமையா என்ன? மூஷிக வாகனம் எல்லாம் அதோ மூலையில் சின்னதாக இருக்கிறது. மகாராஷ்டிரத்தின் இவ்வளவு பெரிய கடவுளுடன் எலியைச் சம்பந்தப்படுத்திப் பெரிசுபடுத்துவதை விநாயக பக்தர்கள் ஏற்கமாட்டார்கள். அதனால்தான் தாமரைமேல் குழலுடன் என்று மாற்றம். தாமரையும் குழலும் யாரிடம் இருந்தால் என்ன? விநாயகரின் முகம்கூட யானைக்களையை மீறிக் கொஞ்சம் அமிதாப் பச்சன் சாயல் அடிப்பதாகச் சிலர் சம்சயப்பட்டார்கள். இந்தப் பரேல் வாதம் எல்லாம் ஜனித்துப் பெருகியதற்கெல்லாம் சாட்சி காசிபாயி. காசிபாயை அதிர்ச்சியடைய வைக்கிற மாதிரி விஷயம் பரேலில் நடந்ததாகச் சரித்திரம் இல்லை. ஆனால் காசிபாயால் ஒரு மாலை வேளையை மறக்கமுடியவில்லை. அதைப்பற்றி அவள் பேசாத காரணம் அவள் அதனின்றும் இன்னும் மீளாததால்தான்.

காசிபாயி, ஸேட் வீட்டு வேலையை முடித்துவிட்டு, அவர்கள் வீட்டு வீடியோவில் அவர்களுடன் பாதி ஹிந்திப் படம் பார்த்துவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்தாள். அப்போதுதான் அந்தப் பிண ஊர்வலம் அவள் கண்ணில் பட்டது. பரேல் கூட்டமே சற்று வெலவெலத்து நின்றது. பாடையைத் தூக்கிச் சென்றது நான்கு பெண்கள். இரண்டு வயதானவர்களும், இரண்டு இளம் பெண்களும். ஒருத்தியின் தலைமுடி விரிந்து தொங்கியது. யார் கண்ணிலும் ஜலம் இல்லை. முடியைப் பிரித்துப் போட்டவள் பார்வை எந்தப் பக்கமும் திரும்பவில்லை. கேட்பவர்களுக்கு இன்னொரு பெண்தான் பதிலளித்தாள். சீக்கிரமே பாடையின் பின் ஒரு கூட்டம் சேர்ந்தது. "புலீஸ் அத்யாசார் நஹி சலேகி, நஹி சலேகி" என்ற கோஷம் கிளம்பத் தொடங்கியது. காசிபாயும் சேர்ந்துகொண்டாள். அவளைத் தொடர்ந்து பல பெண்கள்.

அவர்கள் வெகுதூரம் நடந்தார்கள் என்பது காசிபாயிக்கு நினைவு இருக்கிறது. எரியவைத்துவிட்டுத் திரும்பும்போது காசிபாயிக்கு என்ன தோன்றியதோ என்னவோ, மற்றவர்களை விலக்கிக் கொண்டுபோய் அந்த முடிவிரிந்த பெண்ணைப் பாய்ந்து அணைத்துத் தன்மேல் சாய்த்துக் கொண்டு, தலையைத் தடவிவிட்டுத் தன் மார்பில் அடித்துக்கொண்டு அரற்றலானாள்.

வேறு எந்தக் கட்சியோ, குழுவோ தன் அனுதாபத்தையும் உதவியையும் அளிக்கும்முன், காசிபாய் தன் மார்பில் ஓங்கி அடித்துக்கொண்ட ஒரு அறையில் தன் எதிர்ப்புக் குரலை வெளியிட்டு விட்டாள். அந்த அறையைச் சொற்களில் மொழிபெயர்ப்பது மிகவும் கஷ்டம்.

* * * * * * * * * * *

பலாத்கார எதிர்ப்பு அணியின் காரியாலயச் சுவரில் ஒரு செய்தித்தாள் அளவு வெள்ளைத்தாள் ஒட்டப்பட்டிருந்தது. தாளின் மேல் முனை தடித்த வர்ணப் பென்சிலால் நிறையக் கோடுகளும்,




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மனிதவாடையை
# நகரம்
# இழந்தது!

ஈழத்தின்
இன்றைய நிலை குறித்த
ஒரு
புகைப்படத் தொகுப்பு.

பனிமலர் (2) புரட்டாசி-ஐப்பசி 1990





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அம்புக்குறிகளும், அடைப்புக் குறிகளும், எழுத்துகளும் இருந்தன. தாளின் ஆரம்பத்தில் கறுத்த எழுத்துகளில் கொட்டையாய் எழுதப்பட்டிருந்தது: ரோஸாவின் வழக்கு.

மீனா அரோரா தரையில் அமர்ந்து தாளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தாள். சற்றி இருபது பேர் இருந்தனர். ஜோதி, சுவரொட்டிகளைத் தயாராக்கியாயிற்று. மேன்கா பதிப்பக ஸேட்ஜி இவள் போய் சுவரொட்டிகள் பற்றிய விவரங்கள் சொன்னதும் தாளை எடுத்து விலைப்பட்டியல் போட்டார். அதைக் கையில் வாங்கி நாலாய் மடித்து அவரிடமே கொடுத்தாள் ஜோதி.

"இது எனக்குத் தேவையில்லை ஸேட்ஜி. எங்களுக்கு நீங்கள் ஒரு குறைந்த விலைப்பட்டியல் போடப் போகிறீர்கள்" என்றுவிட்டுத் தன் சோடா பாட்டில் கண்ணாடி மூலம் சிரித்தாள்.
"யார், நானா?"
"நீங்களேதான்".
"மஹாலக்ஷ்மி மந்திருக்கு மட்டும்தான் நான் தானம் செய்யும் வழக்கம்."
"இந்த வருடம் எங்களுக்கும் கொஞ்சம் தானம் செய்யுங்கள்."
"எவ்வளவு?"
"உங்களால் முடிந்த அளவு" என்றுவிட்டு மடக்கென்று எழுந்து தலைப்பு முனையை ஏந்திப் பிடித்துவிட்டுச் சிரித்தாள்.

அணியின் விகடன் ஜோதிதான். தான் சுவரொட்டி அடித்த அனுபவத்தைக் காது, மூக்கு வைத்துச் சொல்லக் காத்திருந்தாள்.

ஷீலா குல்கர்னி "ஈவ்ஸ் வீக்லி"யில் நீண்ட கட்டுரையாய் வெளிவந்திருந்த அவள் இரண்டாவது கட்டுரைப் பக்கங்களைப் பிரித்து வைத்தாள். இரண்டொரு மராட்டி இதழ்களையும், குஜராத்திப் பத்திரிகைகளையும் கொண்டு வந்திருந்தாள் ஸ்ரீலதா. ஜனநாயக உரிமைக் கழக ராதா அந்த மாத இதழை பலாத்காரத்தைப் பற்றி விவாதிக்கச் செலவிட்டிருந்தாள். ரோஸா வழக்கைப் பிரதான கட்டுரையாக்கியிருந்தாள்.

மீனாட்சி, பெரிதாக்கப்பட்ட பம்பாய் வரைபடத்தில் அவர்கள் மேற்கொள்ளப்போகும் ஊர்வலத்தின் வழியைச் சிவப்புப் பென்சிலால் குறித்துக் கொண்டிருந்தாள்.

அம்ருதா ஸிங் உள்ளே நுழைந்தாள். அப்போதுதான் கோர்ட்டிலிருந்து வந்திருந்தாள். கறுப்பு அங்கியை இன்னும் களையவில்லை. நுழைந்தவாறே, "முதல்தடவை ரோஸாவைப் பரிசோதித்த டாக்டர் சாட்சி சொல்ல ஒப்புக்கொண்டாகிவிட்டது" என்றாள்.

* * * * * * * * * *

ரோஸாவைச் சம்மதிக்க வைக்க எனக்கு ஒரு வாரமாயிற்று. அவள் வாதம் தீர்மானமாக, துளி ஒட்டையில்லாமல் இருந்தது. விளம்பரம்பற்றி வெட்கமோ கூச்சமோ அவளுக்கு இருக்கவில்லை. ஆனால் நீதிமன்றங்களின் நீதிபற்றி அவளுக்கு உறுதியான அவநம்பிக்கை இருந்தது. நான் சொல்லக்கூடியதெல்லாம் எந்த அமைப்பு உன்னை ஒதுக்குகிறதோ அதன் ஸ்தாபனங்களை- உன்னை ஒடுக்கப் பயன்படுகிறதே அவற்றை- நீயும் உன்னளவுக்கு உபயோகி என்பதுதான். ஜனநாயக உரிமைக்கழக ராதாவும் இதை வந்து வற்புறுத்தினாள். ரோஸா டீ போட்டுத் தந்தாள். எங்களுடன் பல மணி நேரங்கள், இரவில்கூட, உட்கார்ந்திருந்தாள். நாங்கள் சொல்வதை எல்லாம் அவள் கவனமாகக் கேட்டாள். மாட்டேன் என்பதை அவள் வாய்விட்டுச் சொல்லாமலே அதன் அலைகளை அறையில் பரவவிட்டாள். கடைசியில் அவளைக் கனியவைத்தது உன் அம்மாதான். சண்டையிடும் பாணியும், ஆயுதமும் இப்படித்தான் என்பது சாஸ்வதமாக்கப்பட்டது இல்லை. தண்ணீரில் சண்டை போடும்போது துடுப்புத்தான் ஆயுதம். படகு கவிழ்ந்தால் கரைவரை கைதான் துணை. சொன்னது உன் அம்மா.

கடைசியில் ரோஸா சரி என்றாள். நாங்கள் சேர்க்கவேண்டிய நிதி பற்றியும் திட்டங்கள் பற்றியும் பேசியபோது தன் தலைப்பின் முடிச்சை அவிழ்த்து முதல் எட்டணாவைத் தந்தது உன் அம்மாதான். (ஆமாம். அதுதான் இன்றுவரை உன் அம்மாவின் பணப்பை. ஸ்டேடின் விடைபெறல் நினைவிருக்கிறதா?)

உன் அம்மா போன்றவர்களிடம் ஒரு பாஷை இருக்கிறது. அதற்கு, சொற்களுள்ள மொழியின் ஏற்ற இறக்கங்களும், ஒரு புலப்படாத உருவ அமைப்பும் இருக்கிறது. இருந்தும் அதில் சொற்கள் இல்லை. கை வீச்சில், கண் பார்வையில், முதுகில் அழுத்தும் கையில், சிரிப்பில்,அழுகையில்,அரற்றலில், ஓலத்தில், சொற்கள் நிராகரிக்கப்பட்ட மௌனத்தில் அழுந்திக் கொண்டிருக்கிற பாஷை இது. எங்களையும் அவர்களையும் பிரிப்பது இந்தப் பாஷைதான். ஒருவருக்கொருவர் புரிந்துகொள்ளக்கூடிய மொழியில் நாங்கள் பேசினாலும், அது ஒரு செய்தியைப் பகிர்ந்து கொள்ளும் மொழிதான். வெறும் பாலம். நாங்கள் தேடுவது வேறு பாஷை என்று தோன்றுகிறது. இந்தப்பக்கம்- அந்தப்பக்கம் என்று இல்லாத பாஷை. இரு கரைகளையும் முறுக்கிப் பிணைந்துவிடும் பாஷை. சிறு குழந்தை இரு கைகளையும் விரித்துத் தூக்கியவுடன் புரிந்துவிடும் பாஷை.

* * * * * * * * * * *

ஊர்வலம் தாதர் சிவாஜி பார்க்கிலிருந்து தொடங்கி முதன் மந்திரியின் வீடுவரை வந்தது. பின்பு காலா கோடா சதுக்கத்தில் வந்து நின்றது. 'கேட்வே ஆஃப் இண்டியா'விலிருந்து பார்த்தபோது தலைப்பால் மூடிய தலைகளாகவே அலைஅலையாய்த் தெரிந்தது. உள்ளே புகுந்த லாரியின் பின்புறம் ஏறிப்பேசியது ரோஸாதான். கடும் கத்திரிப்பூ நிறத்தில் புடவை. மாலை வெய்யில் அதன்மேல் பட்டபோது விஷத்தை விழுங்கிய சிவன் கண்டமாய்த் தெரிந்தது. அவள் வீட்டு ஓரத்தில் ஒரு தொட்டியில் இருந்த வெள்ளை ரோஜாச் செடிபற்றிப் பேசினாள் ரோஸா. அந்தச் செடி மிகவும் ஆசையாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடப்பட்டது. பரேல் பஸ் சத்தம், அடுத்தவர் மூச்சு மேலே படும் ஜன நெருக்கடி, பரேலின் கெட்ட காற்று, இயந்திரங்களையே பார்க்கும் அலுப்பு; இவற்றுக்கு மாற்றாக இருக்க நடப்பட்ட வெள்ளை ரோஜாச் செடி. அது வெறும் செடி அல்ல. அது ஒரு கனவு. இருவர் நெய்த கனவு. ஒரு நாள் பரேல் கூட்டத்தில் ஒரு வெள்ளை ரோஜா தலைகாட்டி சில மாயங்களைச் செய்திருக்கும். இத்தகைய கனவுகள் அந்த வட்டாரத்துக்கு உரியவை இல்லை போலும். வெள்ளை ரோஜாக்கள் வேறு தோட்டங்களுக் உரியவை. இந்த வெள்ளை ரோஜாவின் கதை என்ன என்று சொல்கிறேன் என்று ஆரம்பித்தாள் ரோஸா. ஒரு மணிநேரம் பேசினாள். முடித்துவிட்டு அவள் தன் முஷ்டியை உயர்த்தியபோது காலா கோடா சதுக்கத்தை முஷ்டிகள் ஆக்ரமித்தன. ஒரு சிறு கோஷமும் எழும்பாமல் அதீத மௌனத்தில் சில நிமிஷங்கள் கடந்த பிறகு "நாரீ ஷரீர் பே அத்யாசார் நஹி ஸஹேங்கே, நஹி ஸஹேங்கே" (பெண்கள் உடம்பை ஒடுக்குவதைப் பொறுக்கமாட்டோம், பொறுக்கமாட்டோம்) என்று ஹிந்திப்பாட்டு வெடித்துக்கொண்டு கிளம்பியது.

* * * * * * * * * * *

ப.எ.அணியின் ஓரறைக் காரியாலயத்தில் ஒரு சிறு கொண்டாட்டம் நடந்து கொண்டிருந்தது, ஊர்வலத்தின் வெற்றியை ஒட்டி. அது கொண்டாடப்படவேண்டிய விஷயந்தான். இதுவரை அவர்கள் திட்டமிட்ட வேறு எந்த ஊர்வலமும் இவ்வளவு வெற்றி அடையவில்லை. கடந்த ஊர்வலங்களில் யாரைச் சேர்த்துக் கொள்வது, யாரை விடுவது போன்ற குழப்பங்கள் இருந்தன. ஒரு வயதான மாது, "நல்ல கிறிஸ்துவர்களே, பெண்களை உதாசீனம் செய்வது ஏசுவுக்குத் துரோகம் இழைப்பது. ஏசுவின் பக்கம் வாருங்கள். பெண்களைக்கருணையுடன் நடத்துங்கள்" என்ற வாசகங்கள் எழுதிய அட்டையுடனும், விநியோகிக்கத் துண்டுப் பிரசுரங்களுடனும் ஒரு ஊர்வலத்துக்கு வந்தபோது மீனா அரோராவுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. அவள் விளக்கியதும், அந்த வயதான மாது, "நீ கிறிஸ்துவின் எதிரியா?" என்று அன்புடன் கேட்க, அதில் ஒரு மணி நாழிகை செலவாகியது. கடைசியில் அந்த மாது மீனாவின் பின்னாலேயே பிடிவாதமாகத் தன் அட்டையைப் பிடித்து நடந்தாள் அந்த ஊர்வலத்தில். அது ஒரு நிருபர் கண்ணில் பட்டு "ப.எ.அணி எந்தக் குறிப்பிட்ட கட்சியின் கிளையும் இல்லை; அது அகன்ற ரூபம் கொண்டது என்பது உண்மைதான். அவர்கள் ஏசு கிறிஸ்துவைக்கூட விட்டுவைக்கவில்லை" என்று எழுதினார்.

"பெண்களைத் தெய்வமாகப் போற்றுங்கள்" என்று மேற்கோள்களுடன் ஒரு குழு வந்தபோது- அந்த ஊர்வலத்தில் வந்ததே அந்த ஒரு குழுதான்- மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. உரத்த சம்பாஷணைக்குப் பிறகு, வந்தவர்கள் மீனாவின் ஷர்ட்டைப் பிடித்து உலுக்கி, "பான்ட்-ஷர்ட் போட்டுக்கொண்டு பெண்களுக்கு ஆதரவு தேடாதே. புடவை கட்டு" என்று தனிப்பட்ட முறையில் ஏசுவதில் முடிந்தது. அவர்கள் அணியில் எவ்வளவு பேர் புடவை அணிகிறார்கள் என்றும், உடை என்பது எவ்வளவு மேம்போக்கான விஷயம் என்றும் மீனா விளக்கும் முன் அவள் ஷர்ட் கலர் கிழிந்து விட்டிருந்தது. வந்தவர்கள் புடவை கட்டியிருந்தாலும் அவர்களுக்கும் தெய்வத் தன்மைக்கும் இடையே மீனாவின் கிழிந்த காலர் தூரம் இருந்தது. நடந்த ஒரேயொரு பெரிய ஊர்வலத்திலும் வேறுவேறு வழியாய், வேறுவேறு தூரங்கள்முன் போய்விட்டுத்தான் அவர்கள் ஓரிடத்தில் சேர்ந்திருந்தார்கள். அவற்றோடு ஒப்பிடும்போது ரோஸா ஊர்வலம் ஒரு வெற்றிதான்.

அந்த ஊர்வலத்தின் தாக்கத்திலிருந்து இன்னும் விடுபடமுடியவில்லை இவர்களால்.

பரேலின் அத்தனை பெண் தொழிலாளிகளையும், வீட்டுவேலை செய்யும் பெண்களையும், தெருக்கூட்டும் பெண்களையும் அவர்கள் எதிர்பார்க்கவில்லை. எண்பது கிலோமீட்டர் தூரத்திலிருந்து பெண்கள், காலையில் எழுந்து, சமையலை முடித்துவிட்டு, இடுப்பில் குழந்தைகளோடு, சொந்தப் பணத்தில் மின்சார ரயில் டிக்கட் எடுத்து வருவார்கள் காலை எட்டு மணிக்கே என்றும் அவர்கள் எதிர்பார்க்கவில்லை. யாரும் எதையும் எதிர்பார்த்து வரவில்லை. பித்தளைத் தூக்குகளிலும், காகிதச் சுருளிலும், ரொட்டியும் உருளைக்கிழங்கும் அவர்களே கொண்டு வந்திருந்தார்கள். சிறு குழந்தைகள் வாயில் முலைக்காம்புகளும், கட்டைவிரல்களும், அமுதவாயில் பெப்பர்மின்ட் குச்சியும், தலைப்பை விசிறித் தலையில் போட்டுக்கொண்டபின் மழை வெய்யில் அவர்களை ஒன்றும் செய்யாது போலிருந்தது. குழந்தைகளும் முலைப்பாலோடு இந்த உணர்வையும் சேர்த்துப் பருகியவைபோல் சிணுங்காமல் இடுப்பில் இருந்தன. முஷ்டிகள் உயர்ந்தபோது சில கொழுக்குமொழுக்கு குட்டி முஷ்டிகளும், பெப்பர்மின்ட் ஒழுகிய முஷ்டிகளும், விரல் சப்பியதால் கட்டைவிரலில் வடு ஏறிய முஷ்டிகளும் அதில் இருந்தன.

பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளைச் சுவரில் இருந்த அறிவிப்புப் பலகையில் குத்திக்கொண்டிருந்தாள் ஸ்ரீலதா. ஒரு தமிழ்ப் பத்திரிகையும் அதுபற்றி எழுதியிருந்தது. ஊர்வலம்பற்றி எழுதிவிட்டு முடிவில், "ஒரு சந்தேகம்; ஊர்வலத்தில் இருந்த சில பெண்களைப் பார்க்கும்போது அவர்கள் ஆண்களா பெண்களா என்று தெரியவில்லை. இதுவும் பெண்கள் கோரும் சுதந்திரமா? பலாத்கார எதிர்ப்புபற்றி ஊர்வலம் நடத்தத் தகுந்த உடைதானா இது?" என்று கேட்டுத் தன் தமிழ் ஆண்பிள்ளைத்தனத்தை வெளியிட்டு, தமிழ்க் கலாசாரத்தைக் காப்பாற்றியிருந்தார் நிருபர். அதிலும் சொந்தக் காலில் நிற்க முடியாமல் ஒரு எழுத்தாளரை அணுகி, "இது மாதிரிப் பெண்கள் ஊர்வலம்போய் கோஷமிடுவதுபற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?" என்று கேட்டிருந்தார். எழுத்தாளரும், "இது பற்றித் தெரிந்து கொள்வதோ அபிப்பிராயம் தருவதோ அவசியம் என்று படவில்லை எனக்கு" என்று பதில் அருளியிருந்தார். அபிலாஷா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதையெல்லாம் மொழிபெயர்த்தாள் மற்றவர்களுக்கு. பளீரென்று ஆரஞ்சு வண்ணத்தில், பத்திரிகையில் வெளிவருவதை எல்லாம் ஆசீர்வதிப்பதுபோல் புன்னகைத்த சங்கராச்சாரியார் படத்தை மேலிருப்பதுபோல் மடித்துப் பலகையில் செருகினாள் ஸ்ரீலதா. பலகையின் கறுப்புத் துணிக்கும் புகைப்பட ஆரஞ்சு வண்ணத்துக்கும் பொருந்தும் என்றாள்.

ஊர்வல முடிவில் ஒரு ஓய்வுபெற்ற நீதிபதி தன்னை அணுகி, வெற்றி பெறப்போவது தொண்ணூறு சதவிகிதம் உறுதி என்று சொன்னதைச் சொன்னாள் அம்ருதா ஸிங்.

எதிர்காலம்பற்றி அந்த மகிழ்ச்சி மிதமிஞ்சிய வேளையில் சந்தேகங்கள் இருக்கவில்லை.

* * * * * * * * * * *

அதைப்பற்றி நான் எழுதாவிட்டால் இந்த அறிக்கை பூரணமாகாது. ரோஸாவின் ஊர்வலப் பேச்சும் அதன் பாதிப்பும். மார்க் அன்டனி மாதிரி எல்லோர் உணர்ச்சி மையத்தையும் தன்னிடம் ஈர்த்து வைக்க முடிகிறது அவளால். அதன் தினத்தாள் செய்திகளை இத்துடன் இணைத்திருக்கிறேன். லாக் சத்தாவில் வந்துள்ள புகைப்படத்தில் வலது மூலையில் இருப்பவள் யமுனா பாயி ஸாவந்த். பார்த்தால் சாது மாதிரி இருக்கிறாள் இல்லையா? அவள் கணவனைப் போலீஸ் பிடித்தபோது, நீண்ட முறுக்கிய மீசை வைத்துள்ள போலீஸ்காரரின் மீசையை எட்டிப்பிடித்து இவள் தொங்கினாளாம். மீசை கையில்! "நாரீ" பத்திரிகையில் நான் அனுப்பிய கூட்டத்தின் புகைப்படங்கள் வந்துள்ளன. அதில் பதினாறாம் பக்கத்து மூன்றாவது புகைப்படத்தில், இரண்டாம் வரிசையில் காமிராவை நேர்எதிரே பார்த்து நிற்கும் மூவர் க்ராண்ட் ரோடுல் 'தொழில்' செய்பவர்கள். மீனா அரோராவிடம் தாங்களும் பலாத்காரத்தை எதிர்க்கும் ஊர்வலத்தில் வர விரும்புவதாகக் கூறினார்கள். அவர்கள் போலீஸ் அநுபவங்கள்பற்றி நிறையச் சொன்னார்கள். போலீஸ் ஸ்டேஷன் போவதானால் ஒரு குழந்தையை இடுப்பில் கொண்டுபோய் விடுவார்களாம். குழந்தை அழஅழ, தொல்லை பொறுக்கமுடியாமல் தண்டம் சீக்கிரம் கட்டச்சொல்லி அனுப்பிவிடுவார்களாம். நைலான் புடவை கட்டித்தான் போவார்களாம். கையில் நெருப்புப்பெட்டி இல்லாமல் போகமாட்டார்களாம். "எவனாவது பக்கத்தில் வந்தால், நான் நெருப்பு வைத்துக்கொண்டு விடுவேன்" என்று ஒரு பயமுறுத்தல் போட்டு விடுவார்களாம். எந்தக் கிராமத்திலும் பணமும் சக்தியும் வாய்த்தவர்கள் சக்தியற்றவர்களைத் தண்டிக்கும் போது அதில் இலக்கு ஆகிறவர்கள் பெண்கள்தாம்; முதலில் புகுந்து இழுப்பது அவர்களைத்தான்; குலைப்பது அவர்களைத்தான் என்று கங்கா என்பவள் என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தாள்.)

மீண்டும் ரோஸாவிடம் வருகிறேன். அன்றையப் பேச்சுக்கு ரோஸா எந்த ஆயத்தமும் செய்யவில்லை. காலால் மிதித்து நசுக்கப்பட்டவர்களின் நாபியினுள் ஒரு மொழி ஊற்று இருக்கிறது. அது உன் எழுத்தில் இருக்கிறதென்று நான் எண்ணியதுண்டு. எவ்வளவு தவறு அது. உன்னிடமோ என்னிடமோ அது வர அதன் தாபம் நமக்குள் நுழையவேண்டும். அதன் நாக்குகள் நம்மைத் தீண்டி நம் சருமத்தைக் கரகரவென்று நக்கவேண்டும். வெகு எளிதான மராட்டியில், ஜரிகை அலங்காரம் செய்யாமல் அவள் பேசினாள். அவள் பேச்சுக்குக் கிடைத்த பெரிய பாராட்டு மீனா அரோரா அடுத்துச் செய்ததுதான். அவளுக்குப் பிறகு பேசவந்த மீனா எதிரேயுள்ள கூட்டத்தைக் கூர்ந்து பார்த்துவிட்டுப் பெருத்த விம்மல்களோடு அழத்தொடங்கினாள். அதைவிட நன்றாக அவள் பேசியிருக்க முடியாது. நாங்கள் ஊர்வலச் செய்தியைக் காட்ட டி.வி.யை அணுகியபோது, அந்த கோபால் ஷர்மா, "நாங்கள் காட்டுகிறோம். ஆனால் மௌனப்படம்தான் எங்கள் கமென்டரியோடு. நீங்கள் என்ன பேசப் போகிறீர்களோ யாருக்குத் தெரியும்" என்றான். மீனா அரோரா அழுது அவனைத் தோற்கடித்து விட்டாள் என்று நினைக்கிறேன். அவனஅ டி.வி. கமராவைத் திருப்பிய பக்கமெல்லாம் கண்ணீர். அவன் செய்ததெல்லாம் படக்கென்று வெட்டிவிட்டதுதான். இவனை எல்லாம்தான் கீழே உதை விடலாம் என்று வருகிறது. உட்காரு என்றால் தவழ்பவர்கள்.

ஊர்வலம் பல வகையில் வித்தியாசப் பட்டவர்களை ஒரே இடத்தில் பிணைத்துப்போட்டது. பலரும் கலந்தது, ஒரு உருவாக்கப்பட்ட நிலைமையில், அசாதரண உற்சாகத்துடனும், ஆழமறியா ஆர்வத்துடனும், ஒரு அதீத சந்தோஷப் பீறிடலுடனும் நடந்தது. அதன் தாக்கம் இன்னும் இருக்கிறது. சமநிலைக்கு வந்ததும் சில முட்கள் தைக்கும். ஆனால் அவை முட்கள்தாம். இரும்புக் கதவுகள் இல்லை. ரோஸா ஒரு பெரிய போராட்டத்துக்கான நிமித்தத்தை மட்டுமில்லை, வேலிகளையும் கதவுகளையும் மூடப்பட்ட ஜன்னல்களையும் ஒரே வீச்சில் திறப்பதற்கான மூச்சையும் உள்ளே ஓட விட்டிருக்கிறாள். அந்த மூச்சில் கலந்திருக்கும் சக்திபற்றிச் சொல்லமுடியவில்லை. இது வெறும் சொற்களால் மூட்டை கட்டப்பட்ட அறிக்கை. அந்தச் சொற்களினூடே ஒரு உயிர்இழை தென்பட்டால் அதைப் பற்றிக்கொள். இருக்கும், எங்காவது முழு உயிருடன் படபடத்தவாறு. அது எங்கள் புது மொழியின் முதல் குரல். அதில் ரோஸாவின் உஷ்ண மூச்சு கலந்திருக்கும்.

* * * * * * * * * * *

ப.எ.அணியின் அறைச் சுவர்களில் பல சுவரொட்டிகள் ஏறியிருந்தன. ஒன்றில் வெறும் வரைபடங்கள். முழங்கால் மேல் முகம் பதித்து ஒரு பெண்: கை கால்கள் விலங்கிடப்பட்ட முகம் தெரியாத பெண். அஞ்சு ஒரு பெரிய கேலிச்சித்திரம் தீட்டியிருந்தாள். ஒரு நீதிபதி. எதிரிக்கூண்டில் ஒரு பெண்.

"நீ கன்னியா?"

"இல்லை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்படியானால் நீ பலாத்காரம் செய்யப்படவில்லை"
"பலாத்காரம் நடந்தபோது நீ கத்தினாயா?"
"இல்லை. என் வாயைக் கட்டிவிட்டார்கள்."
"கத்த முயற்சியாவது செய்தாயா?"
"இல்லை நான் மயங்கிவிட்டேன்"
"அப்படியானால் இது பலாத்காரம் இலலை. நீ உடன்பட்டு நடந்ததுதான்."

கேலிச் சித்திரத்தை ஒரு மிகத் தடித்த சிவப்புக்கோடு பெருக்கல் குறியால் அடித்து இருந்தது. எதிரே அம்புக்குறியிட்டு அஞ்சு எழுதியிருந்தாள், "இது கடந்த சரித்திரம்" என்று.

* * * * * * * * * * * *

அம்மா வீட்டில் இல்லை.

அபிலாஷா விடைபெறக் காத்திருந்தாள். வழக்கு ஆரம்பமானபின் மீண்டும் வருவாள்.

ரோஸா உடை மாற்றப் போயிருந்தாள். தடுப்புக்குப் பின்னால். சொல்ல மறந்தது ஏதோ நினைவுக்கு வர அபிலாஷா எழுந்து தடுப்பருகில் போனாள். ரோஸா உடைகளைக் களைந்திருந்தாள். அவை காலருகே குவிந்து கிடந்தன. அவள் மார்பின்மேல் தோல் கருகிய தழும்புகள் தெரிந்தன. உடைகள் இல்லாமல் பார்த்தபோது நாணில் ஏற்றாத அம்பு மாதிரி தோற்றம் அளித்தாள்.

பறப்பவள்போல் வந்து அபிலாஷா ரோஸாவைத் தழுவிக் கொண்டாள். தன் முகத்தை அவள் அடி வயிற்றில் பதித்தாள். தரையில் சரிந்து அமர்ந்து ரோஸாவைத் தன் மார்பில் சாய்த்துக் கொண்டாள். ரோஸாவின் மூடிய விழிகளுள் ஈரம் கசிய ஆரம்பித்தது.

## மாதொருபாகன்

மாதொருபாகனுக்கு தலையையெதிலாவது மோதலாமென்றிருந்தது. மூன்று, நான்கு வாரங்களுக்கு முன்னர் வீரகேசரி வார இதழைப் படிக்கக் கிடைத்த பாக்கியமே இவ்வாறொரு நிர்க்கதியை எனக்கு அருளிற்று. விசயம் இதுதான்: மாதொருபாகன் என்ற பெயரில் அங்கும் ஒருவர் பாராளுமன்ற அரசியல்வா(ந்)திகளைப் பேட்டிகண்டு எழுதி வருகிறார். எனவே எனக்கு, 'மாதொருபாகன்-லண்டன்' எனப் பெயரைப் பெருப்பிக்கலாம் என்ற யோசனை எழுந்தது. 'துப்பறியும் சாம்பு' எழுதிய இந்திய–தேவன், தேவன்–யாழ்ப்பாணம் என்ற பெயர்ப் பிரச்சனை நினைவுக்கு உடனடியாக வந்தது. நேரடியாக உங்களுக்கு பிரச்சனையைப் புரியவைப்பது (மூன்றாம் உலக யுத்தத்தையே கொண்டுவந்துவிடும் பிரச்சனையல்லவோ!) புத்திசாலித்தனமாகப் பட்டது.

யாழ்ப்பாணத்தில் 'குழந்தை மாஸ்ரர்' என அறியப்பட்ட 'மண்சுமந்தமேனியர்' புகழ் சண்முகலிங்கம் எழுதிய ஒரு நாடகத்தின் பெயர் 'மாதொருபாகன்'. சுமார் ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்னால் இந் நாடகத்தைப் பற்றிப் படிக்க நேர்ந்ததில் இருந்து 'மாதொருபாகன்' என்ற பெயரில் எனக்கு ஒரு காதல்.

O

மனிதனை அறிவு ஜீவி என அழைப்பதுபோல தமிழனை 'சினிமா மனிதன்' என்கலாம் என தமிழவன் என்பவர் ஒருமுறை எழுதியிருந்தார். நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னால் இது இந்தியத் தமிழர்களுக்குத்தான் அதிகம் பொருந்தக்கூடியது என்ற கருத்து மாதொருபாகனுக்கு இருந்தது உண்மை. இன்று லண்டனிலும் ஐரோப்பிய நாடுகளிலும் நிலைபெற்றுவரும் தமிழ் மக்களை இவ்வரையறைக்குள் அடக்க முடியும் என கண்களை மூடாமலே நம்பலாம். இதற்கான சமூக, பண்பாட்டுக் காரணங்கள் பற்றி இப் பக்கங்களில் ஆராய்வது மாதொருபாகனுக்கு அவசியமானதாகப் படவில்லை. (அடுத்த இதழில் தொடரும்)

மாதொருபாகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெற்கிலிருந்து அனல் வீசுகிறது........



ஸ்ரீலங்கா அரச கொலைப்படைக் குழுவால் (Death squad) கொலை செய்யப்பட்ட ஜே.வி.பி. ஆதரவாளர். (ஹக்மன-1989)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லண்டன் குறிப்புகள்

### நீதியின் பாரபட்சம்

பங்குச் சந்தையில் கின்னர்ஸ் எனப்படும் பிரபல மதுபானத் தயாரிப்பு நிறுவனத்தின் பங்குகளை அதிக பெறுமானமுள்ளதாக கள்ளக்கணக்கு காட்டி ஏமாற்றிய குற்றத்திற்காக கின்னர்ஸ் நிறுவனத்தின் தலைவர் ஏர்னஸ் சோன்டர்ஸ், 'ஹெரன்' பெற்றோலிய வினியோக நிறுவனத் தலைவர் றொன்சன் உட்பட நால்வர் பிரித்தானிய நீதிமன்றத்தால் 'பொய்யர்' 'திருடர்' என வருணிக்கப்பட்டு மொத்தம் ஒன்பது ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப் பட்டுள்ளனர். 80 லட்சம் பவுண்டுகள் இவ்வாறு கள்ளக் கணக்குக் காட்டி இவர்களால் சுருட்டப் பட்டுள்ளது.

கடுமையான வேலையும், கறாரான சம்பளமும் வழங்கும் 'ஹெரன்' நிறுவனத்தில் இலங்கைத் தமிழர் பலர் வேலைசெய்து வருகிறார்கள். 'ஹெரன்' நிறுவனத்தின் தலைவரான றொன்சன் 50 லட்சம் பவுண்டுகள் அபராதமும், ஒன்பது மாதச் சிறைத் தண்டனையும் விதிக்கப் பட்டுள்ளார். இதுவே பிரித்தானிய வரலாற்றில் ஆகக்கூடிய அபராதத் தொகையாகும். தற்போது சிறையில் மணித்தியாலத்திற்கு 4.10 சம்பளத்தில் மேசை துடைக்கும் தண்டனைகால துப்புரவுத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் றொன்சன், இதற்கும் குறைவான தொகையையே தனது ஊழியர்களுக்கு சம்பளமாக வழங்கி வருகிறார்.

பிரித்தானிய பங்குச் சந்தை நடவடிக்கைகளின் தில்லுமுல்லுகளையும், பெரிய மனிதர் எனப்படுவோர் சமுதாயத்தை எவ்வளவு இலகுவாக கொள்ளை அடிக்கின்றார்கள் என்பதையும், இக் கொள்ளையர்கள் சட்டத்தின் கரங்களில் சிக்கியதும் சாதாரண தண்டனைகளுடன் எவ்வாறு தப்பிக் கொள்கிறார்கள் என்பதையும் இவ் வழக்கு வெளிச்சத்திற்குக் கொண்டுவந்தது.

### பொலீஸின் உண்மை முகம்.

பிரித்தானியப் பொலீஸார் மிகுந்த அநுபவசாலிகள் - பொய் வழக்குகளைப் போடுவதில், பொய்ச் சாட்சிகளைத் தயாரிப்பதில், பொய்ப் பத்திரங்களைத் தயாரிப்பதில். பொலீஸின் இந்த உண்மை முகம் இவ்வாண்டு பல தடவை பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலி ஆகியவற்றில் முக்கியத்துவம் பெற்றது.

குறிப்பாக தன்னாட்சி கோரிப் போராடும் வடக்கு அயர்லாந்து மக்கள்மீதும், போராளிகள் மீதும் இவர்களின் இவ்வாறான நடவடிக்கைகள் அம்பலத்துக்கு வந்தது. ஐ.ஆர்.ஏ. எனப்படும் ஐரிஸ் தேசிய ராணுவம் இங்கிலாந்தில் பல தாக்குதல்களைச் செய்துள்ளது, செய்து வருகிறது. இங்கிலாந்தில் வசித்துவரும் சாதாரண அயர்லாந்து மக்களை இச் சம்பவங்களைச் செய்தார்கள் எனக் குற்றம்சாட்டி, பொய்ச் சாட்சிகளையும், ஆவணங்களையும் தயாரித்து சிறைக்கு அனுப்பிய இரண்டு சம்பவங்களில் நீதிமன்றம் பொலீஸாரைக் குற்றம் சாட்டியுள்ளது. ஒரு சம்பவத்தில் சிறைத் தண்டனையை கடந்த பதினான்கு ஆண்டுகள் அநுபவித்த நான்கு அப்பாவி அயர்லாந்து மக்கள் நீதிமன்றத்தால் விடுவிக்கப் பட்டுள்ளனர்.

### நிறவெறித் தாக்குதல் - பொலீஸ்; ஆசியர்.

லண்டனில் நிறவெறித் தாக்குதலுக்கு ஆசியர்கள் உள்ளாவது புதிய விஷயமல்ல. கடந்த வருடம் ஒகஸ்ட் மாதம் 7ந் திகதி மொஹமட் அல்தாவ் என்ற 36 வயதான ஆசியர் கண்மூடித் தனமாக ஆங்கில இளைஞர்களால் தாக்கப்பட்டார். கிழக்கு லண்டனில் உள்ள வெஸ்ற்ஹாம் (Westham) என்னும் பகுதியில் வசித்துவந்த அவரது சகோதரிக்கும் கணவருக்கும் பக்கத்து வீட்டில் வசித்துவந்த ஆங்கிலக் குடும்பத்துடன் ஏற்பட்ட தகராறு கைகலப்பாக மாறியது. இச் சம்பவத்தின் பின்னர் தனது தங்கையைச் சந்திப்பதற்காக வந்த மொஹமட் அல்தாவ் தனது காரை விட்டு இறங்கும் போதே இத்தாக்குதல் இடம் பெற்றது.

பொலீஸார் வந்தபோது அல்தாவின் சகோதரியின் வீட்டுக் கதவு உடைக்கப் பட்டிருந்தது. வீட்டிற்குள்ளே இரத்த வெள்ளமாக இருந்தது. மறுநாள் வைத்திய அதிகாரி ஒருவர் தலையில் பலத்த அடி, முகத்தில் இரத்தக் காயங்கள், முதுகுப் புறத்தில் கத்திக் குத்துக் காயங்கள் இரண்டு என அல்தாவின் காயங்களை வரிசைப் படுத்தியிருந்தார். பக்கத்து வீட்டுக்காரருக்கு எதுவித காயமுமிருக்கவில்லை.

ஆனால் பொலீஸார் மொஹமட் அல்தாவுக்கு எதிராகவே வழக்குப் போட்டனர். 6.10.90 இல் வழக்கைத் தள்ளிய நீதிபதி அல்தாவ் எவ்வித தாக்குதலிலும் ஈடுபடவில்லை எனத் தெரிவித்தார்.

இது பற்றி அல்தாவ் தெரிவிக்கையில் "நான் சொன்ன எதையும் பொலீஸார் கேட்கவே இல்லை. அவர்களிடம் என்னைத் தாக்கியவர்கள் அங்கே இருக்கிறார்கள். அவர்கள் என்னைச் சூழ்ந்து கொண்டு அடித்தார்கள் என்று சொன்னேன். பொலீஸார் ஒரு தலைப் பட்சமாகவே நடந்து கொண்டார்கள். நான் இப்போது பொலீஸுக்கு எதிராக சிவில் நடவடிக்கை எடுப்பது பற்றி ஆலோசித்து வருகிறேன்" என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இங்கிலாந்தில் சுகாதார சேவை

## ஓர் அறிமுகம்

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பர். இவ் வாக்கு எவ்வளவுக்கு உண்மையானது என்பதற்கு நாங்கள் ஆதாரம் எதுவும் தேடத் தேவையில்லை. ஒரு நாள் கடுமையான காய்ச்சலை அனுபவித்தாலே போதும் அவ் வாக்கை நிரூபிப்பதற்கு. இவ்வாறு நோயற்ற வாழ்வு வாழ்ந்து வாழ்வில் வெற்றி கண்டவர்கள் யாராவது இருக்கிறார்களா என்பது ஐயமே. ஆதலினால்தான் எந்தவொரு சமுதாயத்திலும் 'சுகாதார ஸ்தாபனங்கள்' அச் சமுதாயத்தின் முக்கிய அம்சமாகக் கருதப்படுகின்றன.

இலங்கையின் சுகாதார அமைப்புக்கும் இங்கு பிரித்தானியாவின் சுகாதார அமைப்புக்கும் சில வேற்றுமைப் பாடுகள் உள்ளதை நாங்கள் கணக்கிலெடுக்க வேண்டியது அவசியமாகும். இந்த சில அமைப்பு வித்தியாசங்களை அறியாததால் எமது மக்கள் இங்கு உள்ளாகும் பல அனாவசியமான அவஸ்தைகளை கண்டும் கேட்டும் உணர்ந்ததன் காரணத்தாலேயே இக் கட்டுரையை எழுதுவது அவசியமென்று எமக்குப் படுகிறது.

இலங்கைக்கும் பிரிட்டனுக்கும் இடையிலுள்ள எல்லா சுகாதார அமைப்பு வேறுபாடுகளையும் ஆராய்வது எமது நோக்கமுமல்ல - தற்போதைய தேவையுமன்று. பிரிட்டனில், இலங்கையைப் போலவே அரசாங்க சுகாதார ஸ்தாபனமே - (National Health Service - N.H.S.) ஏறத்தாள முழு சுகாதார வசதிகளையும் அளிக்கின்றது. தனியார் மருத்துவ நிலையங்களை (Private Health Service) சிறு பகுதியினரே உபயோகிக்க இயலுமாக இருக்கின்றது.

### General Practitioner - G.P.(ஜி.பி.)

ஜி.பி. என்ற நிலையில் இலங்கையில் ஒரு மருத்துவ அமைப்பு இல்லாதது எமக்கு ஆரம்பத்தில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்தலாம். இந்த ஜி.பி. அனேகமாக ஒரு உயர் பட்டம் பெற்றவராக இருப்பார். இவர்களது பயிற்சிக் காலத்தில் இவர்கள் மருத்துவத்தின் முக்கிய எல்லாப் பகுதிகளிலும் சில காலங்கள் பயிற்சி பெறுவதால், இவர்களுக்கு மருத்துவத்தின் முக்கிய பகுதிகளில் ஒரு பரந்துபட்ட அறிவு இருக்க இயல்பாகின்றது. இவர்களது கடமை இதுவென வரையறுத்தல் கடினம். முக்கியமாக தற்போதைய அரசாங்கத்தில் இவர்களது கடமைகள் மாற்றப் பட்டுக்கொண்டு வருகின்றன. ஆனால் மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்போது, இவர்களிடத்து நோயாளிகள் செல்லும்போது, அவர்களைப் பரிசோதித்துவிட்டு மூன்று விதமான நடவடிக்கைகளை எடுக்கலாம்.

1. நோயாளியின் வியாதியைத் தன்னால் குணப்படுத்த முடியுமெனக் கருதுமிடத்து, தானாகவே, வேறு சோதனைகள் (Investigation) செய்தல், மருந்து கொடுத்தல், அறிவுரை கொடுத்தல் என்பவற்றைச் செய்து நோயைக் குணப்படுத்தலாம்.

2. நோயின் தன்மை சரியாகத் தெரியாவிட்டால் அல்லது ஒரு மருத்துவ நிபுணர் (Specialist) நோயாளியைப் பார்க்க வேண்டுமென்று கருதினால் அந்த மருத்துவ நிபுணருக்கு இந் நோயாளியைப் பார்க்கும்படி கடிதம் எழுதலாம்.

3. நோயாளிக்கு உடனடியாக சிகிச்சை கிடைக்க வேண்டுமென்று கருதினால் அண்மையிலுள்ள மருத்துவ மனையின் அவசர சிகிச்சைப் பகுதிக்கு (Accident and Emergency) அனுப்பலாம்.

இந்த ஜி.பி முறை சரியாக இயங்குமாயின், இது ஒரு சிறந்த முறை என்றுதான் படுகின்றது. மக்களைப் பொறுத்தவரை, தமது நேர வசதிக்கேற்றபடி சந்திக்கும் நேரத்தை ஒழுங்கு செய்து கொண்டு வைத்தியரை அந்த நேரத்தில் போய்ச் சந்திக்கக் கூடியதாகவிருக்கும். அவ் வைத்தியநிலையம் மருத்துவமனையை விட அருகாமையில் இருப்பதால் வசதியாகவுமிருக்கும். ஒரு ஜி.பி.யின் கீழ் ஒரு குறிப்பிட்ட அளவு குடும்பங்களே இருப்பதால் நோயாளியையும் அவருடைய குடும்பச் சூழ்நிலையையும், அவர்களின் வாழ்க்கை நிலையையும் காலப் போக்கில் அறியக்கூடியதாக இருப்பதுடன் அந்த நோயாளியின் ஆரோக்கிய நிலையைக் கணிப்பதும் (Assesment), குணப்படுத்துவதும் இலகுவாக இருக்கும். ஜி.பி. கொடுக்கும் அறிவுரைகளை இவர் எடுத்துக் கொள்வாரா அல்லது அக் குடும்பத்தில் வேறு எவருடனாவது பேச வேண்டுமா என்பதை அவர் தீர்மானிக்கக் கூடியதாகவும் இருக்கும்.

ஆனால் எல்லா ஜி.பி.க்களும் மேற்கூறிய குணாதிசயங்களுடன் பணிபுரிவார்களா - புரிகிறார்களா என்பது சந்தேகமே. உண்மையில் அநேகமான ஜி.பி.க்கள் தமது நோயாளிகளை முறையாகக் கவனித்தாலும், சில ஜி.பி.க்களின் தவறுகளினால் இந்த ஜி.பி. முறையில் சில தழும்புகள் ஏற்பட்டிருப்பது மருத்துவ உலகில் ஓரளவுக்கு அறிந்த விசயமே. இந்தக் கட்டுரை இதை வாசிப்பவர்கள் மனதில், ஜி.பி.க்களின் தகுதியில் ஒரு அதிருப்தியை ஏற்படுத்தி விடக்கூடாது. எமக்குத் தெரிந்தவரை இந்த ஜி.பி. முறை மக்களின் சுக நலன்களைக் கவனிப்பதற்கு ஒரு வெகு சிறந்த முறையாகும். ஆனால், எந்த முறையிலும் தவிர்க்க இயலாமல் சில குறைபாடுகள் வந்து விடுவதுபோல் இங்கும் இருக்கின்றன. அப்படி துரதிஷ்டவசமாக ஏற்பட்டு விடும்போது என்ன செய்வது என்பதை விளக்குவதும் இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

ஒரு ஜி.பி.க்கும் நோயாளிக்கும் இடையில் கருத்து வேறுபாடுகள் பல காரணங்களுக்காக ஏற்படலாம். அப்படி ஏற்படுமாயின் அது நோயாளி ஜி.பி.யின் தகுதியில் ஐயம் அல்லது அதிருப்தி கொள்வதே பொதுவான காரணம். நோயின் தன்மையில் பல வார-மாத கால சிகிச்சையின் பின்பும் எந்தவித மாற்றமும் ஏற்படாத பட்சத்தில், ஜி.பி. ஒரேவிதமான மருத்துவத்தையே கொடுத்துக் கொண்டிருந்தால் நோயாளி அதிருப்தி அடைவது இயல்பு. ஆனால் நோயின் தன்மையை அறியாது எவரும் எந்தவித கருத்துக்களும் தெரிவிப்பது முடியாது. இருப்பினும் ஒரு மருத்துவர் அந்த நோயின் தன்மையையும், அது எவ்வாறு குணப்படுத்தப்படும்; எவ்வளவு நாட்கள் - வாரங்கள் எடுக்கும்; அப்படிக் குணப்படுத்தப் படாவிடின் அடுத்த படியாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தான் என்ன செய்யவுள்ளார் என்பதை நோயாளிக்கு தெளிவாக முதல் சந்திப்பிலேயே சொல்லி விடுவாராயின் இது ஜி.பி.க்கும் நோயாளிக்குமிடையில் ஒரு நல்ல பரிந்துணர்வை ஏற்படுத்தி அதிருப்தி ஏற்படுவதைக் குறைக்கும்.

இதைவிட சில ஜி.பி.க்கள் நோயாளிகளைக் கௌரவமாக நடத்துவதில்லை, மொழிப் பிரச்சனையால் சரியான விளக்கம் கொடுப்பதில்லை, சந்திப்பதற்கு நேரம் பெறுவது கடினம் என்பது போன்ற இன்னோரன்ன குறைபாடுகளும் ஏற்படலாம்.

எப்படியான குறைபாடுகள் ஏற்பட்டாலும் அவற்றைப் பேசித்தீர்த்துக் கொள்வதே நலம். அந்த ஜி.பி.யுடனேயே தங்களது கருத்துக்களைச் சொல்வது விரும்பத் தக்கது. அப்படி முடியாத நிலையிருக்குமாயின் அந்த ஜி.பி.யை விட்டு வேறு ஜி.பி.க்கு மாறுவதே அறிவுரையாகும்.

## விபத்தும் அவசர சிகிச்சையும் (Accident & Emergency).

இது இலங்கையிலுள்ள வெளி நோயாளர் பகுதியைப் போன்றது. ஆனால் இங்கே, இதன் பெயர் குறிப்பிடுவது போல் விபத்தினால் காயமடைந்தவர்களோ அல்லது அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாளிகளோ மாத்திரமே சிகிச்சை பெறலாம். மற்றையோர் முன்பு குறிப்பிட்டது போல் ஜி.பி.யால் சிகிச்சை அளிக்கப் படுவர்.

அதிகமான நோயாளிகள் அவசர சிகிச்சைப் பகுதிக்கு வருவதால் ஒரு நோயாளியை வைத்தியர் பார்ப்பதற்கு அதிக தாமதம் ஏற்படலாம். ஆதலால் அவசர சிகிச்சை தேவையில்லாத விடத்து ஜி.பி.யை முதலில் பார்ப்பது பலன்தரும்.

இந்த அவசர சிகிச்சைப் பகுதிகள் இடத்துக்கு இடம் வித்தியாசமாகச் செயல்படும். சில பெரிய வைத்தியசாலைகளில், பெரிய விபத்துக்களையும் கடுமையான நோயாளிகளையும் பார்ப்பதற்கென ஒரு பகுதியும், மற்றைய நோயாளிகளைப் பார்ப்பதற்கென வேறொரு பகுதியும் இருக்கின்றன. இதனால் மிகவும் நெருக்கடியாக இருந்தாலும் கடுமையான நோயாளிகள் சீக்கிரத்தில் சிகிச்சை பெறக் கூடியதாக இருக்கும். ஜி.பி. தன்னிடம் வந்த நோயாளியை இந்தப் பகுதிக்கு அனுப்பும் பட்சத்தில், அநேகமாக ஏற்கனவே இப் பகுதியிலுள்ள வைத்தியர் ஒருவருடன் இந் நோயாளிபற்றி அறிவித்திருப்பாராதலின் இந்த நோயாளிகள் சீக்கிரத்தில் சிகிச்சை பெறக்கூடும். இதனால் முடிந்தவரை ஜி.பி.யை முதலில் சந்திப்பது நல்லது. அவசர சிகிச்சைப் பகுதிக்கு வரும்போது அங்கிருக்கும் வரவேற்பாளரிடம் (Receptionist) விபரமாக நோயைப் பற்றிச் சொல்வது சீக்கிரத்தில் நோயாளி சிகிச்சை பெற ஏதுவாகலாம்.

ஆரம்பத்தில் அவசர சிகிச்சைப் பகுதியில் வேலை செய்யும் வைத்தியர் நோயாளியைப் பரிசோதிப்பார். பின்பு நோயின் தன்மையைப் பொறுத்து இவரும் மூன்று விதமான நடவடிக்கையை எடுக்கலாம்.

1. நோயின் தன்மை அவ்வளவு ஆபத்தானதாக இல்லாதவிடத்து, நோய்க்குரிய சிகிச்சையைக் கொடுத்து, தகுந்த அறிவுரையுடன் வீட்டுக்கு அனுப்பலாம். அல்லது தொடர்கணிப்புக்காக ஜி.பி.யிடம் அனுப்பலாம்.

2. நோயின் தன்மை ஆபத்தானதாக இல்லாவிட்டாலும், தன்னால் முற்றாக அறியமுடியாமலிருந்தால், அன்று கடமையிலிருக்கும் வைத்திய நிபுணருடன் (Specialist) அல்லது அவரது சக வைத்தியருடன் கலந்தாலோசிக்கலாம்.

3. உடனடியாக சிகிச்சை தேவைப்படின் வைத்தியசாலையில் உள் நோயாளியாக அனுமதிக்கலாம்.

## உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டபின்....

நோயைக் குணப்படுத்த வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டபின் என்ன சுகயீனத்திற்காக அனுமதிக்கப் பட்டிருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்தே அடுத்த நடவடிக்கைகள் இருக்கும்.

சத்திர சிகிச்சை தேவைப்படின், சத்திர சிகிச்சை செய்வதற்கு கிட்டத்தட்ட 6 மணித்தியாலங்கள் முன்பிருந்து நீர் அல்லது ஆகாரங்கள் உட்கொள்வது தவிர்க்கப்படும். இது மயக்க மருந்து கொடுக்கும் போது வாந்தி எடுப்பதில் உண்டாகும் சிக்கல்களைத் தடுக்கும் முன்னெச்சரிக்கையாகும். ஆதலால் சத்திர சிகிச்சை செய்யவேண்டி நேரிடலாம் என சந்தேகித்தால் வெறு வயிற்றில் வைத்தியசாலைக்கு வருவது நல்லது.

எந்தவொரு சத்திர சிகிச்சையின் முன்பும் நோயாளியிடம் எழுத்தில் அனுமதி எடுக்கப்படல் வேண்டும். செய்யவிருக்கும் சத்திர சிகிச்சை பற்றிய விவரங்களையும், அதனால் ஏற்படக்கூடிய விளைவுகளைப் பற்றியும் நோயாளிக்கு வைத்தியர் விவரமாகச் சொல்வார். சத்திர சிகிச்சைக்கு மறுப்பதும் சம்மதிப்பதும் நோயாளியின் விருப்பத்தைப் பொறுத்தது. நோயைப் பற்றியும் சிகிச்சையின் விவரங்கள் பற்றியும் விரிவாகக் கேட்பதற்கு நோயாளிக்கு உரிமை உண்டு. ஆனால், ஒரு சட்ட வல்லுனர்போல் வைத்தியரை அணுகுதல் எந்த வகையிலும் நல்லதல்ல. நேரமின்மையும் சிகிச்சையின் நுணுக்கங்களை விளங்கப் படுத்துவதில் உள்ள சிரமங்களும், சில வேளைகளில் சில வைத்தியர்கள் இவற்றைப் பூரணமாகச் செய்யாமல் விடுவதற்குக் காரணமாக இருக்கக் கூடும். ஆனால் அநேகமான வைத்தியர்கள் தங்களால் இயன்றளவு இவற்றை விளங்கப்படுத்த முயற்சி எடுக்கின்றார்கள் என்பதே உண்மை.

சத்திர சிகிச்சைக்காக அல்லாது வேறு சிகிச்சைக்காக அனுமதிக்கப் பட்டிருந்தாலும், நோயைப் பற்றியும், அதைக் குணப்படுத்தும் முறைபற்றியும் வைத்தியருடன் தீரக் கலந்துரையாடலாம். உங்களுக்கும் வைத்தியருக்கும் பரஸ்பரம் வசதியான நேரத்தை ஒழுங்கு செய்து அவருடன் பேசலாம். இதை 'வார்ட்டில்' உள்ள தாதிமார் மூலம் ஏற்பாடு செய்யலாம். மொழிப் பிரச்சினை இருப்பின் உங்களுக்குத் தெரிந்த ஒருவரையோ அல்லது (சில வைத்தியசாலைகளில்) மொழி பெயர்ப்பாளர்களின் உதவியையோ கேட்கலாம்.

## மருந்துச்சாலை - (Pharmacy).

அநேகமான மருந்துச் சாலைகள் இரவு 7 மணிவரை திறந்திருக்கும். இதன்பிறகு அவசரமாக மருந்து வேண்டியிருப்பின் சிலசமயங்களில் உங்கள் ஜி.பி.யிடமோ அல்லது அண்மையிலுள்ள வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பகுதியிலோ பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும். உங்கள் இருப்பிடத்திற்கு ஜி.பி.யை அழைத்து அவர் மருந்துச்சீட்டு ஒன்றைக் கொடுக்குமிடத்து, அந்தப் பகுதியில் அகால வேளையில் திறந்திருக்கும் மருந்துச்சாலையின் விவரத்தை அப் பகுதிப் பொலீஸிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். பொது விடுமுறை, வங்கி விடுமுறை, ஞாயிற்றுக்கிழமை ஆகிய விடுமுறை நாட்களில் திறந்திருக்கும் மருந்துச் சாலையின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பட்டியலை உள்ளூர் பத்திரிகைகளிலிருந்தோ அல்லது உள்ளூர் பொலீஸாரிடமிருந்தோ அறிந்து கொள்ளலாம்.

பிற்குறிப்பு

நாங்கள் தொடர்ச்சியாக 'பனிமலரில்' மருத்துவப் பகுதி ஒன்றை நடத்த விருக்கின்றோம். பற்சிகிச்சை, இங்கு வாழும் தமிழ் ஜி.பி.க்களின் பட்டியல் இவற்றை அடுத்த இதழில் தர முயற்சிப்போம்.

இதைவிட பொதுவான சில நோய்களை எவ்வாறு ஆங்கிலத்தில் விளக்குவது, அவற்றுக்குரிய ஆங்கிலப் பதங்கள் இவற்றை எழுதுவதும் தேவை எனப் படுகிறது. இவைபற்றி வாசகர்கள் கருத்தை எதிர் பார்க்கிறோம்.

அண்மையில் தென்னிலங்கையில் ராணுவத்திற்கும் ஜே.வி.பி. க்குமிடையில் சுவரொட்டி மோதல் இடம் பெற்றுள்ளது. இவைதான் அச் சுவரொட்டி வாசகங்கள்:

"மலர்கள் எப்போதும் மலர்ந்து கொண்டுதான் இருக்கும்" - J.V.P.

"எங்களிடம் இன்னமும் பழைய ரயர்கள் மிஞ்சியுள்ளன"
- ஸ்ரீலங்கா ராணுவம்.

## நிறமற்றுப்போன கனவுகள்.

இளவாலை விஜயேந்திரன்

*மாலை,*
*நெடுநேரம்*
*நடந்து திரிந்தலுத்துக்*
*கட்டிலில் வீழ்கையில்*
*நடு நிசி.*

*நாசமாய்ப் போன கனவுகள்.*

*புத்தரின் பாதங்களில்*
*யாரோ*
*செவ்விரத்தம் பூ வைக்கிறார்கள்.*

*பள்ளி நாட்களில்*
*எனக்குச் சினேகமான*
*அழகிய வஜிராவின் முகத்தில்*
*கண்ணீர் வடிகிறது குருதியாய்.*

*அவளிடமிருந்து வெள்அலரியை*
*யாரோ பறிக்கிறார்கள்.*
*ஓலமிட்டுக் கிளர்ந்தெழவும்*
*அவளது வாயை மூடுகின்றன,*
*முரட்டுத் துப்பாக்கிகள்.*

*இறந்துபோன மனிதர்கள்*
*துப்பாக்கிகளோடு திரிகிறார்கள்.*

*மாவலியில் மூங்கில்*
*குருதி நீரை முத்தமிட்டு*
*முகம் களிக்கிறது.*

*செத்துப் போன எல்லோரும்*
*'இயற்கை மரணம்'*
*எய்தியதாகச்*
*சான்றிதழில்*
*ஒப்பமிடுகிறார்கள்.*

*அழுது கொண்டிருந்த வஜிரா*
*திடீரெனச் சிரிக்கிறாள்.*

*கனவு அறுபடச்*
*சற்று முன்பாய்*
*தெளிவாய்த் தெரிகிறது*

*அவளது கையிலும்*
*துப்பாக்கி.*

*20.09.90*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண்ணெய்யும் ஏகாதிபத்தியமும்

சதாம் ஹுஸேனை வெறுப்பது நம்முட் பெரும்பாலானவர்கட்குக் கஷ்டமான காரியமல்ல. ஜனநாயக, மனித உரிமைகளை மீறியதிலும் சிறுபான்மைத் தேசிய இனங்கட்கு எதிரான அடக்குமுறையைக் கட்டவிழ்த்து விட்டதோடல்லாமல் குரூரமான இனக்கொலையை நடத்தியும் நியாயப் படுத்த முடியாதவாறு அயல்நாடுகள் மீது போர் தொடுத்தும் சதாம் ஹுஸேன் உலகின் சகல மனிதாபிமான, முற்போக்கு, ஜனநாயக உள்ளங்களிலும் மிகுந்த அருவருப்பைக் கிளறிவிட்டுள்ளார். எனவே சதாம் ஹுஸேனுடைய ஆக்கிரமிற்பிற்கு எதிராக முழு உலகும் இன்று தெரிவிக்கும் கண்டனம் நமக்கு மனத்திருப்தி தரக்கூடியதே. ஆயினும் குவெய்த் மீது ஈராக்கின் ஆக்கிரமிப்பு நடவடிக்கை எவரும் எதிர்பாராதவாறு புதிய அரசியற் பிரச்சனைகளை உருவாக்கியுள்ளதோடு பல அரசியல் முகமூடிகளைக் கிழித்தெறிந்துள்ளது. குவெய்த் மீது ஈராக்கின் ஆக்கிரமிப்பின் வரலாற்றுப் பின்னணியைப் பல கோணங்களினின்றும் பார்க்கவேண்டும். இவற்றுள் அரபு தேசியம், அரபு ஐக்கியம், ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம், ஸியோனிஸமும் பலஸ்தினியப் பிரச்சனையும், மத்திய கிழக்கின் மேலாதிக்க அரசியல் போன்றவை மிக முக்கியமானவை. சதாம் ஹுஸேனின் நடவடிக்கை தவறு என்பதால் அதை நியாயப் படுத்த அவரால் முன்வைக்கப்பட்டுள்ள நியாயங்களும் நிபந்தனைகளும் முற்றாகவே நிராகரிக்கப் படக்கூடியனவல்ல. இப் பிரச்சனை ஈராக் குவெய்த்தினின்று வெளியேறுவதுடன் மட்டும் தீராது என்பதை இன்றைய நெருக்கடி உணர்த்துகிறது.

இந்தியாவில் பல வேறு மொழிகளைப் பேசும் தேசிய இனங்கள் உள்ளன. அவற்றிடையே உள்ள மொழிவாரி, இனவாரி வேறுபாடுகளையும் கலாச்சார வேற்றுமையையும் மீறி இந்திய துணைக்கண்டம் ஒரு முழுநாடாக உள்ளது. இந்தியாவின் முக்கிய தேசிய இனத்தின் தொகையைவிட மிகக் குறைவான எண்ணிக்கையையே கொண்ட அராபியர்கள் ஒரே மொழியையும், பொதுவான கலாச்சாரத்தையும், தொடர்ச்சியான ஒரு பூ பிரதேசத்தையுங் கொண்டவர்களாகவும் அதற்கும் மேலாகப் பெரும்பாலும் ஒரே மதத்தவர்களாகவும் உள்ளபோதும் இருபத்தொரு நாடுகளாகப் பிரிவு பட்டுள்ளார்கள். இவற்றுட் சில வரலாற்று அடிப்படையில் நியாயப் படுத்தக்கூடிய பிரிவுகளாக இருந்த போதும், இவை இவ்வாறு பிரிந்து பிளவுண்டு இருப்பதற்குக் கொலனித்துவ, ஏகாதிபத்திய வல்லரசுகளே முக்கிய காரணமாகும். இஸ்லாமிய மதத்தின் எழுச்சியுடன் விருத்திபெற்ற அராபிய தேசியம் ஒரு காலத்தில் ஒரு முக்கிய அரசியற் சக்தியாக விளங்கியது. இஸ்லாமிய மதத்தினுள் ஏற்பட்ட பிரிவுகளும் பிளவுகளும் தம் அரசியற் தன்மை காரணமாகப் பாரிய அரசியற் பிளவுகளாகி இஸ்லாமிய ஐக்கியத்தையும் அரபு ஐக்கியத்தையும் பலவீனப்படுத்தின. இதன் விளைவாகவும் துருக்கி ஒட்டோமன் சாம்ராஜ்யத்தின் எழுச்சியினாலும் அதையடுத்து ஐரோப்பிய சாம்ராஜ்யங்களின் ஆதிக்கத்தாலும் அராபியரின் செல்வாக்கும் பெருமிதமும் பங்கப்படுத்தப்பட்டன. ஆயினும் இஸ்லாம், கிறிஸ்துவத்துடன் ஒப்பிடத்தக்களவு உலகு பரந்துள்ள மதமாக இருந்து வருகின்றமையாலும் அதன் தோற்றுவாய் அராபிய தேசமானமையாலும் அராபியரது செல்வாக்கு முற்றாகவே அழியவில்லை. அரபு நாடுகளின் மீது நேரடியாகவும் மறைமுகமாகவும் செல்வாக்கு செலுத்திய கொலனித்துவம் தன் பொருளாதார, தொழில் விருத்திக்கும் ஆதிக்கத்தின் விஸ்தரிப்புக்கும் அவசியமான பெற்றோலியம் அரபுநாடுகளில் இருப்பதனால் அதனை நிரந்தரமாகவே தன் கைக்குள் வைத்திருக்கும் தேவை கருதி அராபிய மண்ணைக் கூறுபோட்டும் சிற்றரசுகளைத் தனிநாடுகளாக உருவாக்கித் தன் ஆதிக்கத்திற் குட்படுத்தியது. உலக ஆதிக்கத்திற்கு வசதியாக வெட்டப்பட்ட சுவெஸ் கால்வாய் பிரித்தானிய-பிரெஞ்சு நாடுகளின் உடைமையாக இருந்தது. கேந்திர முக்கியத்துவமுடைய பல துறைமுகங்களை பிரித்தானியர் தம் கைக்குள் வைத்திருந்தனர். யாழ் குடாநாட்டுடன் ஒப்பிடத் தக்களவு சிறிய நிலப்பரப்புடைய நாடுகள் முதலாக இந்தியாவுடன் ஒப்பிடத்தக்க பெரிய பிரதேசங்கள் வரையிலான பல அரபு நாடுகள் மீதும் ஐரோப்பிய வல்லரசுகளின் ஆதிக்கத்திற்கான போட்டி முதலாம் உலக யுத்தத்தின் காலத்திற்கு முன்னமே தொடங்கி விட்டது. கூறு போடப்பட்ட பிரதேசங்களையும் மக்களையும் பிரித்து ஆண்டுவந்த பிரித்தானிய ஏகாதிபத்தியம் இரண்டாம் உலக யுத்தத்தின் பின்பு பலவீனமடைந்தது. 1917 ஒக்டோபர் ரஷ்யப் புரட்சியை அடுத்துப் புதிய வேகமடைந்த கொலனித்துவ விரோதப் போராட்டம் அரபு நாடுகளில் அரபு தேசிய வாதத்துக்கு ஒரு புதிய அரசியல் முக்கியத்துவத்தை வழங்கியது.

அரபுநாடுகளில் தமக்குச் சாதகமான பொம்மை அரச பரம்பரைகளை ஆட்சியாளர்களாக நிறுவித் தம் செல்வாக்கை நிலைநிறுத்த முயன்ற பிரித்தானியரது நோக்கங்களுக்குச் சவாலாக எழுந்த அரபு மக்களது எழுச்சியால் ஒரு அராபிய சோஷலிசப் புரட்சியாக விருத்தியடைய முடியாமைக்கு அரபு நாடுகளின் பின்தங்கிய சமுதாய விருத்தி ஒரு முக்கிய காரணமாகும். ஆயினும் அரபு எழுச்சி, அதன் தேசியவாத வடிவிலேயே, கொலனித்துவ ஏகாதிபத்திய அதிகாரங்கட்குப் பலமான ஒரு எதிரடியாக அமைந்தது. இவற்றுள் எகிப்திய அரச பரம்பரையைத் தூக்கியெறிந்து அதிகாரத்துக்கு வந்த அரபு தேசியவாத இராணுவ ஆட்சி 1956இல் நாஸர் தலைமையின் கீழ் சுவெஸ் கால்வாயைத் தேசிய மயமாக்கியதும் 1962இல் அல்ஜீரிய விடுதலைப் போராட்டம் பிரெஞ்சுக் கொலனித்துவத்திற்குக் கொடுத்த மரண அடியும் மிக முக்கியமானவை. மறுபுறம் ஐரோப்பிய இனவாதத்தின் பிரச்சனையான யூதஇன ஒடுக்கற் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு வழிதேடிய பிரித்தானிய அரசு முதலில் யூதர்களின் சியோனிஸ இயக்கத்திற்கு ஆதரவு கொடுத்த போதும், தன் கொலனியான பலஸ்தீனத்தில் யூதர்களைக் குடியேற்றும் முயற்சியின் போக்கில் சியோனிச வாதிகள் ஏற்படுத்திய பிரச்சனைகளும் அவர்களது பயங்கரவாதமும் பாரிய குற்றச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்களும் பிரித்தானிய அரசின் பலஸ்தீனிய நிர்வாகத்திற்குத் தலையிடியை ஏற்படுத்தியதால் பிரித்தானிய அரசு தயக்கங் காட்டியது. ஆயினும் ஹிற்லரின் கீழ் யூதர்கள் அனுபவித்த கொடுமைகளும் இனக்கொலையும் 1947இல் ஐக்கிய நாடுகள் சபை பலஸ்தீனத்தின் ஒரு பகுதியை இஸ்ரேலாகப் பிரகடனம் செய்யக் காரணமாயின. அமெரிக்காவும் சோவியத் யூனியனும் இதிற் காட்டிய அக்கறையை பிரித்தானிய அரசு காட்டாமைக்கு மத்திய கிழக்கில் அதன் நலன்களைப் பிறருக்கு விட்டுக் கொடுக்க வேண்டும் என்ற நிலைமையும் காரணமாகும். எவ்வாறாயினும் இஸ்ரேல் என்ற யூதஅரசுபலவந்தமாகத் திணிக்கப்பட்டதை அரபு நாடுகளின் சகல மக்களும் எதிர்த்தனர். சியோனிஸ்டுகள் பலவகையிலும் பலஸ்தீன அரபு மக்களை அவர்களினது நிலங்களினின்று விரட்டும் செயலில் இறங்கியதோடு 1947-48இல் அரபுநாடுகளுடன் ஏற்பட்ட மோதலில் தமக்கு ஐ.நா.சபையால் அனுமதிக்கப்பட்டதைவிட அதிகமான பிரதேசத்தைக் கைப்பற்றினர்.

இதன் பின்னர் இஸ்ரேல் மேற்குநாடுகளின் மத்திய கிழக்குப் பிரதேச நலன்களைப் பேணும் முக்கிய சக்தியாக உருவெடுத்தது. 1956இல் பிரெஞ்சு, பிரித்தானிய அரசாங்கட்கு உடந்தையாக எகிப்தின்மீது போர் தொடுத்த இஸ்ரேல், பின்பு 1967இலும் போரில் இறங்கி மேலும் அரபுப் பிரதேசங்களைக் கைப்பற்றியது. 1973இல் ஏற்பட்ட மோதலில் இஸ்ரேலிய ஆக்கிரமிப்புக் கொள்கைக்குப் பலமான அடி கிடைத்த போதும், அது அமெரிக்க ஆதரவின் துணையால் தான் கைப்பற்றிய எகிப்திய பிரதேசங்களையும், சிரிய, பலஸ்தீனிய பிரதேசங்களையும் கைவிடாமல் பிடித்துக் கொண்டிருந்தது. 1978இல் அமெரிக்க சார்பான அரசாங்கம் ஒன்று எகிப்தில் இருந்ததனால் அமெரிக்கா இஸ்ரேலுக்கும் எகிப்துக்கும் இடையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் பறிக்கப்பட்ட எகிப்திய பிரதேசத்தின் பெரும்பகுதியைத் திருப்பிக் கொடுக்க ஏற்பாடு செய்யப் பட்டது.

பலஸ்தீன அரபு மக்களது மண்ணையும் மனித உரிமைகளையும் பறித்ததோடு மட்டுமன்றி அரபு மக்களை அவமானப் படுத்தவும் அடிபணியச் செய்யவுமே இஸ்ரேலிய அரசும் சகல சியோனிஸ வாதிகளும் அவர்களது ஏகாதிபத்திய ஆதரவாளர்களும் மிகுந்த ஆர்வத்துடன் செயற்பட்டனர். பலஸ்தீனப் பிரச்சனை பற்றிய ஐ.நா.சபையின் தீர்மானங்களை நிறைவேற்றுவதில் ஏகாதிபத்திய வல்லரசுகள் எதுவித அக்கறையுங் காட்டாததோடு பலஸ்தீனிய மக்களின் ஏகப் பிரதிநிதியான பலஸ்தீன விடுதலை இயக்கத்தையும் பயங்கரவாதிகள் என்று முத்திரைகுத்தித் தனிமைப் படுத்தின. பலஸ்தீன மக்களின் பெரும்பகுதியினர் தமது மண்ணிலும் அயல்நாடுகளிலும் அகதிகளாக அவதிப்படும் நிலையும் அவர்கள் மீதான உலக அனுதாபமும் அரபு மக்களது நியாயமான நிலைப்பாடும் ஒரு நடைமுறைச் சாத்தியமான தீர்வுக்கு வழிவகுக்க இயலாதவாறு தடையாக நிற்பவை ஏகாதிபத்தியமும் சியோனிஸமுமே. அதேவேளை அரபு நாடுகளில் தன் செல்வாக்கை விருத்திசெய்ய விரும்பிய சோவியத் யூனியன் அமெரிக்காவுக்கு எதிரான தன் வல்லரசு அரசியலில் பலஸ்தீனப் பிரச்சனையைப் பயன்படுத்திய அளவுக்கு இஸ்ரேலுக்கு எதிராக அரபு நாடுகளைப் பலப்படுத்துவதில் அக்கறை காட்டவில்லை. ஒருபுறம் சியோனிஸ விரோத நிலைப்பாட்டைப் பிரகடனம் செய்த சோவியத் யூனியன் மறுபுறம் ரஷ்ய யூதர்களை இஸ்ரேலுக்கு குடியேற அனுப்பி வந்தது. அமெரிக்கா இஸ்ரேலை ஆயுத பாணியாக்கிய போது சோவியத் யூனியன் தன் செல்வாக்குக்குக் கட்டுப்படும் அளவுக்கே அயல் அரபு நாடுகளான எகிப்துக்கும், சிரியாவுக்கும் ஈராக்கிற்கும் ஆயுதங்களை வழங்கியது. இஸ்ரேலிய ஆயுத பலத்திற்கு ஈடு கொடுக்கப் போதியளவு ஆயுத உதவி அந்த நாடுகட்குக் கிடைக்கவில்லை.

அரபு அரசுகள் மத்தியில் இருந்த முரண்பாடுகள் அரபு ஐக்கியத்தைக் கட்டி எழுப்பத் தடையாகின. ஒருபுறம் முடியாட்சிகளான சவூதி, குவெய்த், ஓமான் போன்ற அரசுகளும் மறுபுறம் நாஸர் தொடக்கி வைத்த அரபு தேசியவாதமும் இன்னொருபுறம் மக்கள் மத்தியில் எழுச்சி பெற்ற மாக்ஸிய சக்திகளும் அரபு மக்களை வேறுபடுத்திய போதும், அரபு ஐக்கியத்திற்கான தேவை மக்கள் மத்தியில் வலுவாகவே உணரப்பட்டது. 1960களின் பிற்பகுதியில் மாக்ஸிய இடதுசாரிகளின் கை ஓங்கும் நிலையைத் தடுப்பதற்காக அமெரிக்க உளவு நிறுவனமான சீ.ஐ.ஏ. 'பாஅத்' இயக்கமெனப்படும் இடதுசாரி அரபு தேசிய வாதத்தை ஊக்குவித்தது. 'பாஅத்' கட்சிகள் சிரியாவிலும் ஈராக்கிலும் அதிகாரத்திற்கு வந்தன. அங்கும் 'கம்யூனிஸ அனுதாபம்' எற்படும் அபாயம் காணப்பட்ட போது அமெரிக்கா தலையிடத் தயங்கவில்லை. சீ.ஐ.ஏயின் உதவியுடனேயே 1970களின் பிற்பகுதியில் சதாம் ஹுசேன் ஈராக்கில் இராணுவப் புரட்சிமூலம் அதிகாரத்திற்கு வந்தார்.

அமெரிக்காவின் இஸ்ரேலிய சார்புக் கொள்கை அரபு மக்களை அமெரிக்க விரோதத் திசையில் உந்தியது. இதன் விளைவாக, முடியாட்சி இல்லாத அரபு நாடுகளில் சோவியத் யூனியனுக்கு அனுதாபமான நிலைப்பாட்டுக்கும் சோவியத் யூனியனுடன் நெருங்கிய தொடர்புக்கும் வழி ஏற்பட்டது. சோவியத் யூனியனோ இந்த நாடுகளைத் தன் வல்லரசு அரசியலில் பகடைக் காய்களாகப் பயன்படுத்த முற்பட்டது. இதன் விளைவாக இந்த நாடுகளில் சோவியத் செல்வாக்கு சரியத் தொடங்கிற்று. நாஸரின் மரணத்தை அடுத்து, 1970களின் முற்பகுதியிலேயே எகிப்து, சோவியத் செல்வாக்கினின்று விடுபட ஆரம்பித்து, 1973 யுத்தத்தின் பின் அமெரிக்கச் சார்புநிலைக்குச் செல்லலாயிற்று. அல்ஜீரியா, லிபியா போன்ற நாடுகளிலும் சோவியத் செல்வாக்கு மங்கியது. தம்முட் கடுமையான விரோதமுடைய சிரிய-ஈராக் அரசுகள் மட்டும் தமது ஆயுத தேவைகட்காகவும் தமது நாடுகளிலிருந்த கடும் சியோனிஸ, அமெரிக்க விரோத உணர்வு காரணமாகவும் சோவியத் யூனியனை அண்டி நின்றன. வலதுசாரி முடியாட்சிகளோ சகட்டுமேனிக்கு அரபு ஐக்கியம் பற்றிப் பேசிய போதும் அமெரிக்காவிற்குச் சார்பாகவே செயற்பட்டன.

1973இல் உலகின் பெற்றோலிய உற்பத்தி செய்யும் நாடுகள் அதன் உண்மையான பெறுமதியையும் அதற்கு நியாயவிலை பெறும் அவசியத்தையும் உணர்ந்து ஒன்றுபட்டுச் செயற்படும் நிலை எற்பட்டது. பெற்றோலிய ஏற்றுமதி செய்யும் நாடுகளின் ஸ்தாபமான ஒபெக் (OPEC) எண்ணெய் உற்பத்தியைக் கட்டுப்படுத்தி அதன் மூலமாக எண்ணெய்க்கு நியாயவிலை பெறும் முடிவுக்கு வந்தன. இதுவே முதற் தடவையாக மூன்றாமுலக நாடுகள் ஏகாதிபத்தியத்தின் மீது தமது பொருளாதார வலிமையைப் பிரயோகிக்கக் கிடைத்த வாய்ப்பாகும். அது மட்டுமன்றி அரபு மக்களின் உணர்வுகளை மேலை நாடுகள் மதிக்கவேண்டிய தேவையை நிர்ப்பந்தித்த சூழ்நிலையும் இதுவேயாகும். எனினும் ஒபெக் நாடுகள் மத்தியிலுள்ள வேறுபாடுகளும் பலவீனங்களும் ஒபெக்கைப் பலவீனப்படுத்தின.. அது மட்டுமன்றி எண்ணெய் வளம் மிகுந்த நாடுகளில் அதி முக்கியமான நாடுகள் அமெரிக்க சார்பு நாடுகளாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தமையால் அமெரிக்காவால் அதி விரைவிலேயே தன் நலன்களைப் பேணக்கூடியதாயிற்று. 1970களின் முடிவில் எண்ணெய் விலையைக் கட்டுப்படுத்தும் பலத்தை ஒபெக் நாடுகள் பெருமளவும் இழந்து விட்டன. இன்றும் அவற்றிடையே உள்ள கருத்து வேறுபாடுகளும் தேவைகளும் தேசிய நிர்ப்பந்தங்களும் அவற்றின் வலிமையை மிகவும் குறைத்துள்ளன.

அமெரிக்க ஏகாதிபத்தியம் 1950களில் ஈரானில் மக்கள் புரட்சியைக் கவிழ்த்து முடியாட்சியைக் கொண்டு வந்தது. அதன் செல்லப் பிள்ளையான ஷா ரேஸா பலவியின் அடக்குமுறை ஆட்சிக்கு எதிராக 1978–80இல் ஈரானிய மக்கள் கிளர்ந்து எழுந்தபோதும் அமெரிக்கா அந்தக் கொடுங்கோலாட்சியையே ஆதரித்தது. அங்கு மக்கள் எழுச்சியின் விளைவாக முடியாட்சி விழுந்தபோதும் சரியான மக்கள் ஜனநாயகத் தலைமை இல்லாததால் அப் புரட்சி மத குருக்களின் ஆதிக்கத்தின் கீழான ஒரு ஆட்சிக்கு வழி கோலியது. அமெரிக்காவின் பிடிவாதமான போக்கு அந்த ஆட்சியையும் பகைத்துக் கொண்டது. இதன் விளைவாக ஒரு பிற்போக்கான மதவாத எதேச்சாதிகாரம் ஈரானில் நிலைபெற்றது. அது ஒரு புறம் தன் மக்களை ஒடுக்கியபோதும் மறுபுறம் அமெரிக்காவுக்கும் சியோனிஸத்துக்கும் எதிரான ஒரு பலமான சக்தியாகத் தன்னைக் காட்டிக்கொண்டது. அந்த மதவாத அரசு இஸ்லாமியரிடையே இரண்டாவது முக்கிய பிரிவினரான ஷியா முஸ்லிம் மக்களை ஒரு இஸ்லாமிய முதனிலைவாத தீவிரப் போக்கில் உந்தியது. பிற இஸ்லாமிய நாடுகளிலுங்கூட, அரசியல் பொருளாதார நெருக்கடிகளும் விரக்தியும் இஸ்லாமிய முதனிலைவாத எழுச்சிக்கு வழி கோலின. இஸ்லாமிய தீவிரவாதம் அமெரிக்க சார்பு அரசுகள் இருந்த பல நாடுகளில் ஆட்சியாளர்களுக்கு எதிரான முக்கிய அரசியற் சக்தியாக வளர்வதைக் கண்ட அமெரிக்க ஏகாதிபத்தியம் ஈரானை அடக்கிவைக்க வழி தேடியது. நேரடியாக ஈரானுடன் போர் தொடுத்து வெல்லும் வாய்ப்பு இல்லாத அமெரிக்கா, ஈரானுக்கும் ஈராக்குக்கும் இருந்துவந்த பகைமையைப் பயன்படுத்தி ஈரான்மீது போர் தொடுக்குமாறு சதாம் ஹுசேனுக்கு உற்சாகமூட்டியது. தன் தீவிரமான நிலைப்பாட்டின் மூலம் உலக நாடுகளினின்றும், முக்கியமாக இரு பெரும் வல்லரசுகளினின்றும், தனிமைப் படுத்தப்பட்ட ஈரான் அரசு உள்நாட்டில் மக்கள் கிளர்ச்சிக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்த ஒரு சூழ்நிலையைப் பயன்படுத்தி 1981ம் ஆண்டில் ஈராக் நியாயமான ஒரு காரணமுமின்றிப் போர்ப் பிரகடனம் செய்தது. எல்லைப் பிரச்சனையைக் காரணமாகக் காட்டி எழுந்த போரில் முதலில் ஈரான் வீழ்ச்சி கண்டாலும், விரைவிலேயே அதன் பெரிய சனத் தொகையும் வலிய ராணுவமும் அதை ஒரு பலமான நிலைக்குக் கொண்டுவந்தன. இந்த நிலையில் அமெரிக்காவும் அதற்குச் சார்பான அரபு நாடுகளான சவூதி அரேபியா, குவெய்த் போன்ற நாடுகளும் அரபு ஐக்கியம், சுணி–ஷியா முஸ்லிம் மோதல் என்று காரணங் காட்டி ஈராக்கிற்கு உதவின. மறுபுறம், ஈராக்கிய அரசுடனான பகைமை காரணமாக, சிரியா ஈரானுக்கு ஆதரவு காட்டியது.

அமெரிக்காவின் தயவுடன் போரில் வெற்றிகண்ட ஈராக் அமெரிக்காவுக்குத் தெரியாமலே தன் இராணுவ பலத்தை இவ்வளவு தூரம் விருத்தி செய்திருக்க முடியாது. ஈராக்கின் இராணுவ பலம் அதிகரிப்பதை அமெரிக்காவின் மிக நெருங்கிய நண்பனான இஸ்ரேலால் சகிக்க முடியவில்லை. 1985இல் இஸ்ரேல் ஈராக்கின் அணுசக்தி நிலையமொன்றைக் குண்டுவீசி அழித்தது. அண்மையில் ஈராக்கின் ராட்சசப் பீரங்கி உற்பத்தித் திட்டத்தை உளவறிந்து தடுத்து நிறுத்துவதில் வெற்றிபெற்றது. இஸ்ரேலைப் பலவீனப் படுத்தாத, பயமுறுத்தாத எந்த ஈராக்கிய நடவடிக்கையையும் பற்றி அக்கறையில்லாது அமெரிக்கா நடந்து கொண்டது. ஈரான்–ஈராக் யுத்தத்தின்போது 1988இல் குர்த் (Kurds) இனத்தவர்களது விடுதலைப் போராட்டத்தை முறியடிக்கும் நோக்கில் குர்த் மக்கள் வாழும் கிராமங்கள் மீது நச்சவாயுக் குண்டு வீசி இனக்கொலையை நடத்தியதை அமெரிக்காவோ மேலைநாடுகளோ கண்டுங் காணாதவாறே நடந்து கொண்டன. இவ்வாறே ஈரானிய படையினர் மீதும் நச்சுவாயுக் குண்டுகள் வீசப்பட்டதை இவர்கள் அலட்சியம் செய்தனர்.

அமெரிக்காவும் அதன் ஐரோப்பிய நேச சக்திகளும் ஈராக்கின் ராணுவ விஸ்தரிப்பையும் ஆயுதப் பெருக்கத்தையும் நேரடியாகவும் மறைமுகமாகவும் ஊக்குவித்த நோக்கம், ஒரு புறம் ஈரானுக்குப் பாடம் புகட்டுவதும் மறுபுறம் சோவியத் செல்வாக்கினின்று ஈராக்கைத் தம் பக்கம் திருப்பி யெடுப்பதுமாகும்.

ஈரான்–ஈராக் யுத்தத்தில் விளைவான சேதத்தின் பயனாக இரு நாடுகட்கும் கணிசமான புனர் நிர்மாண வேலைகளும் நிதி நெருக்கடியும் இருந்தன. இவற்றையும் தமக்குச் சாதகமாய்ப் பயன்படுத்தி லாபம் சம்பாதிக்க மேலை முதலாளித்துவ நாடுகள் ஆயத்தமாயின. ஆயினும் ஈராக் தன் பொருளாதாரப் பிரச்சனைக்கு முகங்கொடுக்க வேறு வழிகளை நாடியது.

ஒபெக் மூலம் உலக எண்ணெய் உற்பத்தியைக் கட்டுப்படுத்தி விலையை உயர்த்தித் தன் கடந்த கால இழப்புகளை ஈடுசெய்ய ஈராக் விரும்பியது. சவூதி அரேபியா இதற்கு ஆயத்தமாக இருக்கவில்லை. இது சாத்தியமாயினுங்கூட ஈராக்கின் நிதி நெருக்கடிக்கு முகங்கொடுக்க இவ்விலை ஏற்றம் முற்றிலும் போதியதல்ல. குவெய்த்தும் சவூதி அரேபியாவும் ஈரான் ஈராக் யுத்தத்தின் போது வழங்கிய பல பில்லியன் டொலர் கணக்கிலான கடனுதவியை திருப்பிக் கொடுக்கும் வசதியும் ஈராக்கிற்கு இல்லை. எனவே முதலாம் உலக யுத்தத்தினை அடுத்த காலத்திலிருந்தே குவெய்த்தின் மீதான தன் பிரதேச உரிமைக் கோரிக்கையை அடிப்படையாக வைத்தும் குவெய்த் தன் எண்ணெய் வளத்தில் ஒரு பகுதியைக் கடந்த சில ஆண்டுகளில் அபகரித்துக் கொண்டது என்று குற்றஞ்சாட்டியும் நட்ட ஈடாகத் தனக்கு வழங்கிய யுத்தக் கடனை ரத்து செய்து குவெய்த்தின் ஒரு பகுதியை ஈராக்குடன் இணைக்க வேண்டும் எனவும் ஈராக் வலியுறுத்தியது. இதையொட்டி ஈராக் துருப்புகள் குவெய்த் எல்லையில் குவிக்கப்பட்டன. அரபு நாடுகள் பேச்சு வார்த்தை மூலம் இப் பிரச்சனையைத் தீர்க்க முயன்றன. குவெய்த் தன் பிரதேச சுயாதிபத்தியத்தை விட்டுக் கொடுக்க மறுத்தது. முறிந்த பேச்சு வார்த்தைகளை மீண்டும் தொடரலாம் என்ற எதிர் பார்ப்பின் மத்தியில் திடீரென 1990 ஒகஸ்ட் 2ம் திகதி ஈராக் துருப்புகள் குவெய்த்துள் நுழைந்து நாட்டைக் கைப்பற்றின. இதையடுத்து ஈராக் முதலில் சதாம் ஹுசேனின் மருமகனைத் தலைவராகக் கொண்ட புதிய குவெய்த் அரசாங்கத்தையும் பின்பு குவெய்த்தை ஈராக்கின் ஒரு மாகாணமாக்கும் பிரகடனத்தையும் அறிவித்தது.

எண்ணெய் வளத்தை ஆதாரமாகக் கொண்டு 5இலட்சம் குவெய்த்தியர் 10இலட்சத்திற்கும் அதிகமான அயல் நாட்டவர்களைத் தொழிலில் அமர்த்தி மிக வசதியாக வாழ்ந்து வந்தனர். ஈராக்குடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தம் செல்வத்தைப் பகிர்வது அவர்கட்கும் அவர்களது அரச பரம்பரைக்கும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றல்ல. அவர்களைப் பொறுத்தவரை தமது செல்வத்துக்கு உத்தரவாதமாக இருக்கக்கூடிய தேசிய அமைப்பே விரும்பத்தக்கது. இதன் நியாய அநியாயங்களை அரபு மண்ணின் வரலாற்றின் அடிப்படையில் விவாதிப்பது ஒரு விஷயம், சர்வதேச அரசியலில் நாடுகட்கிடையிலான உறவின் அடிப்படையில் நோக்குவது இன்னொரு விஷயம். ஈராக்கின் ஆக்கிரமிப்பின் நோக்கம் அரபு ஐக்கியமென்பது வெறுங் கற்பனை. அது செய்த காரியம் முற்றிலும் முறை கேடானது என்பது பற்றியும் நமக்கு ஐயமில்லை. ஆயினும் இப் பிரச்சனையின் பிராந்தியத் தன்மையைப் புறக்கணித்து அதற்கப்பாற்பட்ட ஒரு சர்வதேசத் தீர்வை நாடுவது அபாயகரமானது.

இந்த இடத்தில்தான் ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானமும் அமெரிக்க நடவடிக்கையும் மிகவும் கவனமாக ஆராயப்பட வேண்டும். பாதுகாப்புச் சபையின் தீர்மானம் ஈராக்கின் ஆக்கிரமிப்பைக் கண்டித்து ஈராக் குவெய்த்தினின்று உடனடியாக வெளியேறாத பட்சத்தில் ஈராக்குடன் பண்டப் பரிவர்த்தனைக்குத் தடை விதித்து அதை நடைமுறைப் படுத்துவதற்கு ஐ.நா.சபைக்கு அதிகாரமளித்தது. ஆயினும் மனிதாபிமான அடப்படையில் உணவு, மருந்துப் பொருட்களை ஈராக்கிற்குள் அனுப்ப அனுமதித்தது. அத்துடன் தடையை நடைமுறைப் படுத்த வன்முறையைப் பிரயோகிப்பதை அனுமதிக்கவில்லை. ஐ.நா.சபையின் 465ம் தீர்மானத்தை அலட்சியம் செய்து கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் யூதர் குடியேற்றத்தைத் தொடர்ந்தும் நடத்திவரும் இஸ்ரேலுக்கு எதிராகவும் இரண்டாம் உலகயுத்த முடிவு முதல் 1988வரை தென்மேற்கு ஆபிரிக்காவை (நமீபியா) ஐ.நா. சபையின் தீர்மானங்கட்கு எதிராகத் தன்வசம் வைத்துக் கொள்ளையடித்த தென்னாபிரிக்க நிறவெறி அரசுக் கெதிராகவும் எந்த விதமான தடையையும் விதிக்க மிகுந்த தயக்கங்காட்டி அரை மனதுடன் செயற்பட்ட அமெரிக்காவும் பிரித்தானியாவும் ஈராக் விஷயத்தில் அதிவேகமாகக் காரியத்திலிறங்கின. அது மட்டுமன்றி, அமெரிக்கா சவூதி அரேபியாவின் பாதுகாப்புக்காக தன் படைகளை வெகு வேகமாக அனுப்பியது. சவுதி அரேபியா தன் பாதுகாப்புக்கு இன்னொரு நாட்டையோ வேறு நாடுகளையோ உதவிக்கு அழைப்பது நியாயமான காரியமேயெனினும் அமெரிக்க நோக்கம் சவூதி நலனையோ குவெய்த்தின் விடுதலையையோ பற்றியதல்ல என்பது அரபு மக்களுக்கு நன்கு தெரிந்ததே. எனவே தன் நோக்கத்தைப் பூசி மெழுக அமெரிக்கா சகட்டு மேனிக்குப் பிற அரபு நாடுகளும் படைகளை அனுப்புமாறு வேண்டியது.

ஈராக்குடனான பகைமை காரணமாக, அமெரிக்க சார்பு எகிப்தும், மொறாக்கோவும் இதைத் தருணமாகப் பாவித்து ஈராக்கைப் பழிவாங்கி அமெரிக்காவைத் திருப்திசெய்து மேற்கு நாடுகளுடன் தன் உறவைச் சீர்படுத்தும் நோக்கில், சிரியாவும் சகட்டு மேனிக்குப் படைகளை அனுப்பியபோதும், முக்கியமான ராணுவ சக்தியாக சவூதி மண்ணிலும் ஈராக்கைச் சூழவுள்ள கடற் பகுதிகளிலும் அமெரிக்காவே நிற்கிறது. அமெரிக்காவுக்குச் சரணாகதியடையாத குறையாகவுள்ள கொர்பச்சொவ் தலைமையிலான சோவியத் யூனியன் ஈராக்கைப் பின்வாங்கச் செய்ய இயலாமலும் மத்திய கிழக்கில் தன் செல்வாக்கை நிலைநிறுத்த இயலாமலும் மிகுந்த தயக்கத்துடனும் தடுமாறலுடனும் ஈராக்கிற்கு எதிரான தடையை நடைமுறைப்படுத்த தன் கப்பற் படையில் ஒரு பகுதியை அனுமதித்துள்ளது. சீனா இதுவரை ஈராக்கின் செயலைக் கண்டித்து ஐ.நா.தீர்மானத்தை ஆதரித்து நிற்கிற போதிலும் இராணுவ முறையில் செயற்பட மறுத்துள்ளது. அமெரிக்க நோக்கங்களைச் சரிவர அடையாளங் கண்டுள்ள நாடுகளில் கியூபா மிகவும் தெளிவான ஒரு நிலைப்பாட்டை எடுத்துள்ளது. ஃபீடல் காஸ்ட்ரோ பாதுகாப்புச் சபையின் தீர்மானத்தைப் பற்றிப் பேசும்போது "ஈராக்குக்கு எதிரான கண்டனம் மிக நியாயமானதே. ஈராக்குக்கு எதிரான தடை விதிப்புகளைப் பற்றிப் பேசுமுன்பு நாம் பனாமா மீது படையெடுத்து ஒரு வருஷமாகத் தன் படைகளை அங்கு வைத்திருக்கும் ஒரு நாட்டைப் பற்றியும் கவனிக்க வேண்டும்" என்று குறிப்பிட்டது மிகவும் ஆழமான ஒரு அரசியல் அவதானம். இதை எதிரொலிப்பது போலவே, அமெரிக்காவின் வேஷத்தை அம்பலமாக்கும் முறையில், சதாம் ஹுசேன், தன் படைகள் குவெய்த்திலிருந்து வெளியேற முன் நிபந்தனையாக, இஸ்ரேல் தான் கைப்பற்றிய பிரதேசங்களினின்றும், சிரியா லெபனானின்றும் வெளியேற வேண்டும் என்று கூறியதன்மூலம் அரபு வெகுஜன அபிப்பிராயத்தை அமெரிக்காவுக்கு எதிராகத் திருப்புவதில் ஓரளவு வெற்றி பெற்றார்.

ஈராக்கின் படையெடுப்பை அடுத்துக் குவெய்த்தில் இருந்த லட்சக்கணக்கான தென் ஆசிய ஊழியர்கள் நிர்க்கதியானார்கள். குவெய்த்தினின்று வெளியேறும் வசதிகளின்றி அங்கு அகப்பட்டோரையும் ஜோர்டான் வரை வந்து அங்கு அகதிகளாக உணவுக்கும் தண்ணீருக்கும் தவிக்கும் லட்சக்கணக்கான மக்களையும் பற்றி எதுவித அக்கறையும் காட்டாத மேலை முதலாளித்துவ வல்லரசுகள், தங்கள் நாடுகளைச் சேர்ந்த சில ஆயிரம் பேரைப்பற்றி மிகுந்த கவலை காட்டின. இந்தப் பாரபட்சத்தின் எதிரொலியாகவே இந்தியா, ஈராக்கினுள் உணவுப் பண்டங்களை அனுப்பப் போவதாக அறிவித்தது. மேலை நாடுகளின் இந்தப் பலவீனத்தைப் பயன்படுத்தி ஈராக் அங்குள்ள ஐரோப்பியர்களைப் பணயக் கைதிகளாகப் பயன் படுத்துகிறது. இது மனிதாபிமானமற்ற செயல் என்பது உண்மை. ஆயினும் ஆயிரக்கணக்கான பலஸ்தீன மக்கள் இஸ்ரேலியப் படைகளால் கொல்லப்படுவதைக் கண்டும் எதுவும் செய்யாத மேலைநாடுகள் தன் குடிமக்களில் ஒருவர் பணயக் கைதியாகும் போது காட்டும் துடிப்பை நோக்கும் போது சதாம் ஹுசேன் எதிரியின் பலவீனத்தைத் தனக்குச் சாதகமாகப் பயன் படுத்துகிறார் என்றே கூறலாம். ஈராக்கிய மக்களைப் பட்டினி போட்டாவது சதாமைப் பணிய வைக்கும் அமெரிக்க-பிரித்தானிய நோக்கத்தை யாரும் நியாயப் படுத்த முடியுமாயின் சதாம் ஹுசேனின் செயலையும் நியாயப் படுத்துவது சிரமமல்ல.

அமெரிக்கா எதிர்பார்த்ததைவிட அதிகமான ராஜதந்திரம் சதாம் ஹுசேனிடம் உள்ளதற்கு ஈரானுடன் அவர் நிபந்தனையின்றிச் செய்துகொண்ட சமாதானமும் எல்லைத் தகராற்றில் ஈரானுக்கு விட்டுக் கொடுத்தமையும் நல்ல உதாரணங்கள். அமெரிக்காவுக்கு எதிராக ஐக்கியப்படுத்தக் கூடிய சகல மத்திய கிழக்குச் சக்திகளையும் ஐக்கியப் படுத்தும் முயற்சியில் சதாம் ஹுசேனுக்குக் கிடைத்துள்ள வெற்றி அமெரிக்காவின் கணிப்பீட்டில் மண்ணைத் தூவி விட்டது. அமெரிக்கா எதிர்பார்த்த துரிதமான வெற்றியோ, எதிர்ப்பார் இல்லாத அமெரிக்க ஆதிக்கமோ இலகுவில் சாத்தியப் படாது என்ற நிலை உருவாகியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தம் இல்லாத நிலையில் சதாம் ஹுசேனைக் கவிழ்க்கும் சதி ஒன்று சாத்தியப்படலாம். ஆயினும் அதற்கான உடனடியான வாய்ப்புக்கள் குறைவு. சதாம் ஹுசேனுக்கு ஈராக்கில் மட்டுமன்றி, இதுவரை அமெரிக்க அனுதாபமான நாடான ஜோர்தானிலும் பிற அரபு நாடுகளிலும் ஆதரவு ஓங்கியுள்ளது. இந்த நெருக்கடி நீடிக்கும் வரை அந்தப் போக்கும் வளர்ந்து வரும். அமெரிக்க விரோதம் அமெரிக்கச் சார்பு நிலைப்பாடுள்ள அரபு நாடுகளில் அரசியல் நெருக்கடிக்கு வழி கோலுவன.
அமெரிக்கா கொஞ்சம் ஒதுங்கிநின்று சவூதி அரேபியா மற்றும் தனக்கு அனுதாபமான அரபு நாடுகளது ஆயுத பலத்தை அதிகரிப்பதானால் அது இஸ்ரேலுக்கு உடன்பாடாகாது. யுத்தம் தொடங்கினால் அது ஈற்றில் அமெரிக்காவின் வெற்றிக்கு வழி கோலினாலும் மத்திய கிழக்கின் எண்ணெய்க் கிணறுகளும் அங்கு வாழும் அமெரிக்கர்களும் அழிவுக்கு ஆளாகலாம். அதுமட்டுமல்லாமல் அமெரிக்காவே யுத்தத்தைத் தொடங்கினால் அது அமெரிக்காவுக்கு விரோதமான உலக அபிப்பிராயத்தை வலுவூட்டும். இன்றைய நிச்சயமின்மை ஒருபுறம் எண்ணெய் விலை அதிகரிப்புக்கும் உலகப் பொருளாதார நெருக்கடிக்கும் வழி கோலுகிறது என்றால் யுத்தம் அதைவிட மோசமான நெருக்கடிக்கே வழிகோலும்.

சதாம் ஹுசேன் பலஸ்தீன மக்களின் நம்பகமான நண்பனுமல்ல, அரபு மக்களின் அபிலாசையின் பிரதிநிதியுமல்ல. ஆயினும் திரும்பத் திரும்ப ஏகாதிபத்தியமும் சியோனிஸமும் ஏய்த்தும், அவமானப் படுத்தியும், இம்சைக்குட் படுத்தியும் வரும் ஒரு பெருமிதமிக்க தேசிய இனமான அரபு மக்கள் மத்தியில் இதுவரை இருந்த ஒரு சோர்வை நீக்கி அமெரிக்காவுக்கும் இஸ்ரேலுக்கும் எதிராகத் துணிந்து போராட நிற்கும் ஒரு தலைவனாகத் தன்னைக் காட்டிக் கொள்ளும் சதாமைச் சாதாரணமான அராபியர்களும் முக்கியமாக பலஸ்தீனியர்களும் ஆதரிப்பது அதிசயமில்லை. சதாம் ஹுசேன் எவ்வாறு வீழ்ந்தாலும் அவர் உருவாக்கிய நெருக்கடியின் பின் விளைவுகள் எளிதாகத் தவிர்க்கக் கூடியனவல்ல.

மத்திய கிழக்கின் இப் புதிய நெருக்கடிக்கு நல்ல தீர்வு என்ன என்ற கேள்வி எழுகிறது. சதாம் ஹுசேன் குவெய்த் மீதான ஆக்கிரமிப்பைக் கைவிடவேண்டும் என்பது நியாயமான தீர்வு ஆயினும் அமெரிக்கப் படைகள் அந்தப் பிரதேசத்தில் பெருந்தொகையாக உள்ளவரை அது சாத்தியமானதுமல்ல நியாயமானதுமல்ல. யார் முதலில் பின் வாங்குவது என்பது இரண்டு அயோக்கியர்களில் யார் யாரை நம்புவது என்ற பிரச்சனை. ஏகாதிபத்தியம் உருவாக்கி ஏகாதிபத்திய நலன்களைப் பேணும் நோக்கில் வளர்த்த பிரச்சனைக்கு ஏகாதிபத்தியம் காட்டும் வழியில் நல்ல தீர்வு கிடைக்காது. இப் பிரச்சனையின் அடிப்படை அரபு தேசியம் பற்றியது. எனவே அரபு மக்களது பிரச்சனையாகவே இது அணுகப்பட வேண்டும். முழு மத்திய கிழக்கினதும் பிரச்சனைகளை மனதிற் கொண்டு தீர்வுகள் தேடப்பட வேண்டும். பலஸ்தீனப் பிரச்சனைக்கு ஒரு நியாயமான தீர்வைப் புறக்கணித்துத் தேடப்படும் எந்தத் தீர்வும் நிலையானதாக இராது. அமெரிக்காவும் அதன் நேச சக்திகளும் மத்திய கிழக்கின் எண்ணெய் உற்பத்திமீது தமது ஆதிக்கத்தை நிலைநிறுத்தும் தீர்வுகளையே நாடுகின்றனர். இஸ்ரேலிய ராணுவ மேன்மையும் ஸ்திரமான வலதுசாரி அரபு அரசுகளும் அவர்கட்கு அவசியமான முன் நிபந்தனைகள். குறுகிய காலத்தில் இவை சாத்தியமே எனினும் நீண்ட காலத்தில் அரபு வெகுஜனங்களின் எழுச்சி தவிர்க்க இயலாதது.

இந்த நெருக்கடி பிற்போக்கு ஆட்சிகள் அதிகாரத்திலுள்ள தென்னாசிய நாடுகளிலும் பொருளாதாரப் பிரச்சனைகளை உக்கிரப் படுத்தியுள்ளது. மூன்றாமுலகிற்கு இதன் பாதிப்புகள் கடுமையானவை. அதே சமயம் மேலை முதலாளித்துவ நாடுகட்கும் முதலாளித்துவத்தை நாடி ஓடும் கிழக்கு ஐரோப்பிய நாடுகட்கும் இந்த நெருக்கடி பாரிய பொருளாதாரப் பிரச்சனைகளை உருவாக்கியுள்ளது. மூன்றாம் உலகின் ஒடுக்கப்பட்ட மக்கள் இந்த நெருக்கடியைத் தமக்குச் சாதகமான திசையில் அரசியல் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கும் பயன் படுத்துவார்களா என்பதே நம் முன்னுள்ள முக்கியமான கேள்வி. அவ்வாறு பயன் படுத்துவதற்கு அவசியமான முன் நிபந்தனைகளுள் ஒன்று; அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் நோக்கத்தை அடையாளங் காண்பதும் அதன் ஆக்கிரமிப்பு நோக்கத்தையும் யுத்த முயற்சியையும் எதிர்ப்பதில் ஐக்கியப் படுவதுமாகும்.

– ஜெ –


**இலங்கை - இந்திய உணவுப் பொருட்கள், விமான ரிக்கற்றுகள், ஆங்கில-தமிழ் வீடியோ கசெற்றுகள்**

**அனைத்துக்கும் நாடுங்கள்**

**சீலன்ஸ்**
332, HIGH STREET NORTH,
MANOR PARK,
LONDON E12 6PH
Tel: 081 472 6390
Fax: 081 471 9821




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஈழத்துக்
## கவிஞர்
## அறிமுகம்

# எம்.ஏ.நுஃமான்

இம்மா நிலத்தினில் எளியனாயும்
எழுந்து திருந்திப் பொருள்நயமும்
எடுத்துத் தொடுத்தே நேரடையாக
இதோ என்றெமக்குத் தருதற்கு

பெம்மா ஞர்கள், புலவர்கள்,
பெரியோர், அறிஞர், கற்றோர்கள்
பெரிதும் முயன்று பார்த்தாலும்
அரிதே பிறக்கும் தமிழ்ப்பாட்டை

சும்மா இரண்டு சொல்லெடுத்துச்
சொல்லிக் காட்டும் சீராளா
சுடரும் கவியைப் பிரளயம்போல்
சூழ எழுப்பும் பேராளா,

எம். ஏ. நுஃமான். தமிழ்செய்யும்
இனிய நண்பா எழுகவே
எழுந்திவ் எமது சபையோருக்கு
இசை உன் கவியை வருகவே

மஹாகவி
1968,

இன்று ஏராளமானவர்கள் தமிழிலே கவிதை எழுதுகிறார்கள். இவர்களில் பலரிடம் கவிதையைக் காணமுடியாதிருப்பதே, இன்றைய யதார்த்தம். எப்போதாவது சிலரிடமிருந்துதான் நல்ல கவிதையை அனுபவிக்க முடிகிறது. அவ்வாறான கவிஞர்களில் ஒருவர் எம்.ஏ.நுஃமான்.

1944ம் ஆண்டு கிழக்கிலங்கையின் கல்முனையில் பிறந்த நுஃமான், மொழியியலில் கலாநிதிப் பட்டம் பெற்று, இப்போது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழியியல் துறையில் விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார். 1960முதல் கவிதை எழுதிவரும் நுஃமான், முக்கியமானதொரு விமர்சகரும் ஆவார். ஈழத்தின் சிறு சஞ்சிகைகளிலும், பெரும் பத்திரிகைகளிலும் தொடர்ச்சியாக கட்டுரைகளும் விமர்சனங்களும் எழுதும் இவர், சில சிறுகதைகளையும் படைத்துள்ளார். 'கவிஞன்' என்ற காலாண்டுக் கவிதை இதழை சிலகாலம் (1969-70) நடாத்திய நுஃமான், பயனுள்ள பல நூல்களை வாசகர் சங்க வெளியீடாக வெளியிட்டுள்ளார். தமிழில் பாரதிக்குப் பிந்திய பெரும் கவியாற்றல்களுள் ஒருவரான 'மஹாகவி'யின் படைப்புகள் பல நுஃமானால் வெளியிடப் பட்டவையே. பிறமொழிக் கவிதைகளை ஆங்கிலம் மூலம் தமிழில் மொழி பெயர்த்தும் வரும் நுஃமான் 'மஹாகவி'யையும் 'நீலாவணனை'யும் தன்னுடைய வளர்ச்சிப் பாதையில் சுவடுகள் பதித்தவர்களாகச் சொல்லுகிறார்.

'ஒவ்வொரு மனிதனும் அவன் வாழும் காலம் வரை வளர்ந்துகொண்டே போகிறான்; அல்லது மாற்றமடைகிறான். நானும் இதற்கு விதிவிலக்கல்ல. கடந்த இரண்டு தசாப்தங்களில் என்னுள்ளும், எனக்கு வெளியிலும் ஏற்பட்ட மாற்றங்கள், வளர்ச்சிகள் எனது கவிதைகளிலும் காணப்படுகின்றன. ஆரம்பகாலத்தில் நான் வெறுமையாக இருந்தேன். இளமையில் எழுதத்தொடங்கும் எல்லோரையும் போல எதையாவது எழுதவேண்டும் என்ற எண்ணம் மட்டுமே என்னுள் இருந்தது. மனப்போக்குக்கு ஏற்ப அப்போதைக் கப்போது எதை எதைப்பற்றியோ எழுதினேன். இடைக்காலத்தில் சமயச் சார்பான ஆன்மீக சிந்தனைகள் என்னைக் கவர்ந்தன. சமயத் தத்துவங்களை சரியாகக் கடைப்பிடிப்பதன் மூலமே வாழ்வின் தீமைகளை களையமுடியும் என்ற ஒரு எண்ணம் இருந்தது. பாரசீக சூபிக் கவிஞர் றுமியின் 'மஸ்னவி'யால் நான் ஈர்க்கப் பட்டேன். இக்பாலின் சித்தாந்தமும் என்னைக் கவர்ந்தது. 1965-67ம் ஆண்டுகளில் நான் எழுதிய கவிதைகள் பலவற்றில் இதன் பாதிப்பைக் காணலாம். 67ன் பின் ஆன்மீகச் சிந்தனைப் போக்கில் இருந்து நான் மெல்ல மெல்ல விடுபடத் தொடங்கினேன். மார்க்சீயத் தத்துவார்த்த நூல்கள் என்னைப் பெரிதும் வளப்படுத்தின. வாழ்க்கைப் போக்குகளை நிர்ணயிக்கும் புறநிலை விதிகளை அவை எனக்குக் கற்பித்தன. வாழ்க்கையின் இயக்கப் போக்கைப் புரிந்து கொள்ள உதவின. இலக்கியத்துக்கும் அரசியலுக்கும் இடையே உள்ள தொடர்பை உணர்த்தின. இவ்வகையில் எனது பெரும்பாலான பிற்காலக் கவிதைகள் சமூக அரசியற் பிரச்சனைகளை அடிப்படையாகக் கொண்டுள்ளன.' என்று கூறும் நுஃமானின் கவிதைகளைப் படிப்பவர்கள் யாப்பு இல்லாத கவிதைகளாகவே அவற்றை நினைப்பர். அவை அச்சிடப்படும் முறை அவ்வாறான உணர்வை தருகிறது. ஆனால், அகவலும் வெண்பாவும் கலிப்பாட்டுமாய்த்தான் அவரது கவிதைகள் உள்ளன. கடந்த முப்பதாண்டுகளில் ஏராளமாக எழுதிக் குவிக்காது, சொற்பமான அளவில் குறிப்பிடத்தக்க கவிதைகள் பலவற்றை நுஃமான் தந்துள்ளார்.

இதுவரை 'தாத்தாமாரும் பேரர்களும்' (1977), 'பலஸ்தீனக் கவிதைகள்' (தமிழாக்கம்) (1981), 'அழியா நிழல்கள்' (1982), 'மழைநாட்கள் வரும்' (1983) ஆகிய கவிதை நூல்களும், 'இருபதாம் நூற்றாண்டு ஈழத்து தமிழிலக்கியம் (கூட்டாசிரியர்), 'பாரதி: ஒரு மொழியியல் நோக்கு', 'திறனாய்வுக் கட்டுரைகள்' ஆகிய விமர்சன நூல்களும் வெளிவந்துள்ளன.

நுஃமானின் மிகவும் புகழ்வாய்ந்த கவிதையான 'தாத்தாமாரும் பேரர்களும்' கவிதையை இங்கு தருகிறோம். நுஃமானின் படைப்பாற்றலையும் கவித்துவத்தையும் இக் கவிதையூடே நாம் தெளிவாக இனங்காண முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாத்தாமாரும் பேரர்களும்

இருந்தது;
எங்கள் தாத்தாவுக்கோர்
யானை இருந்தது
கொம்பன் யானை...

தெரியுமா?
இந்தச் செய்தி உமக்குத்
தெரியுமா காணும்?
தெரியாதாயின்
இன்று தெரிந்து கொள்.
எங்கள் தாத்தா
அன்றே பெரிய கொம்பன் யானை
வைத்திருந்ததை இவ்வையகம் அறியும்

அத்திலாந்திக் கரைவரை எங்கள்
தாத்தா யானையில் சவாரி செய்தார்.
அந்தலூசின் சமவெளியூடே
எங்கள் தாத்தா யானையில் சென்றார்.
இந்தியாவில் எண்ணூறு ஆண்டுகள்
எங்கள் தாத்தா யானையில் இருந்தார்.
சீனா வரையும் சென்று வந்ததாம்
அவரது யானை;
கொம்பன் யானை...

யானைவைத் தாண்ட பரம்பரை நாங்கள்
உலகின் பாதியை ஆண்டவர் நாங்கள்
உலகம் எங்கும் அறிவொளி பரப்பி
வைத்தவர் நாங்கள்;
பல்கலை ஞான
எழுச்சி எங்கள் பின்னால் வந்தது.

அந்தலூசின் சமவெளி இடையே
இன்றும் நீங்கள் இதனைக் காணலாம்
பாக்தாத் நகரில் படிக்க வந்த
ஐரோப்பியரிடம் அதனைக் கேட்கலாம்.

தெரியுமா?
இந்தச் செய்தி உமக்குத்
தெரியுமா காணும்?
தெரியாதாயின்
இன்று தெரிந்து கொள்!
எங்கள் தாத்தா
அன்றே பெரிய கொம்பன் யானை
வைத்திருந்ததை இவ்வையகம் அறியும்

இருந்தது;
எங்கள் தாத்தாவுக் கோர்
யானை இருந்தது;
கொம்பன் யானை...

2

இருந்ததா?
உங்கள் தாத்தாவுக் கோர்
யானை இருந்ததா?
கொம்பன் யானையா?

எங்கே அந்த யானை இப்போது?
எங்கே அந்தக் கொம்பன் யானை?
யானைக் காரரின் பேரப் பிள்ளாய்
எங்கே உங்கள் கொம்பன் யானை?

கால்நடையாக வந்து நிற்கிறாய்
அழுக்குத் துணியை அணிந்து நிற்கிறாய்
உன்னைப் பார்த்தால் அப்படி ஒன்றும்
யானைக் காரரின் பேரப் பிள்ளையாய்த்
தெரிய வில்லையே,
தெரியவே இல்லையே!

இருந்ததா?
உங்கள் தாத்தாவுக் கோர்
யானை இருந்ததா?
கொம்பன் யானையா?

எங்கே அந்த யானை இப்போது?
எங்கே அந்தக் கொம்பன் யானை?
யானைக் காரரின் பேரப் பிள்ளாய்?
எங்கே உங்கள் கொம்பன் யானை?

3

எங்கே எங்கள் கொம்பன் யானை?
எங்கே அந்தக் கொம்பன் யானை?

எம்மை படைத்த இறைவனுக் காக
எம்மைப் படைத்த இறைவனின் ஆட்சியை
நிறுவுதற் காகக்
குருதியும் சொரிந்த
நாங்கள்,

அந்த நன்னெறி விட்டும்
நீங்கி விட்டதால்....
நீங்கியே விட்டதால்....
எங்கள் இறைவன் எமக்கு வகுத்த
வீதியை விட்டும் விலகி விட்டதால்....

உருகி உருகி ஒவ்வொரு பொழுதும்
தொழுது நிற்பதைத் துறந்து விட்டதால்....
வாய்மை நெறியை மறந்து விட்டதால்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆன்மை வலிமையை அகற்றி விட்டதால்....
நாங்கள் எங்கள் யானையை இழந்தோம்
என்றே இன்று கேள்விப் படுகிறோம்.

இருந்தது;
எங்கள் தாத்தாவுக் கோர்
யானை இருந்தது
கொம்பன் யானை

4

இளைய தலைமுறையின்
ஏழ்மைக் குரலே
பழைய செய்தியைத் திருப்பிச் சொல்கிறாய்.
இக்பால் என்ற கவிஞனிடத்துக்
கடனாய்ப் பெற்ற பழைய சொற்களைத்
திரும்பவும் வந்து என்னிடம் சொல்கிறாய்.....

ஆனால் சற்றே ஆழ்ந்து கவனி
யானைக் காரரின் பேரப் பிள்ளாய்
சற்றே கவனி, சற்றே கவனி!

உமையாக்களின் உருவிய வாளில்
இரத்த வாடை இருக்குதா என்று
சற்றே கவனி சற்றே கவனி...

அப்பாசியர்களின் அரண்மனை எங்கும்
இரத்த வாடை இருக்குதா என்று
சற்றே கவனி சற்றே கவனி...

சுல்தான் அணிந்த தொப்பியின் உள்ளே
இரத்தவாடை இருக்குதா என்று
சற்றே கவனி சற்றே கவனி...

இரத்த வாடையை இனங்கண்டனையா?
அந்த வாடை யாருக் குரியது?
செங்கடலாகத் திரண்டு கிடப்பதில்
பாதி இரத்தம் யாருக் குரியது?

ஓ! அது உங்கள் தாத்தாவுடையதா?
ஆமாம், உங்கள் தாத்தா மார்கள்
அதிகாரத்துக் காகத் தமக்குள்
பொருதிக் கொண்ட போது வடிந்த
இரத்த மணம்தான் இங்கு மணப்பது.

அதிகா ரத்துக்காக அவர்கள்
பொருதிக் கொண்ட போதெலாம்
நீங்கள்
யானையின் கீழே நசிந்து மடிந்தீர்
யானையின் பின்னால் நடந்து திரிந்தீர்
அம்பாரி மீதில் அவர்கள் இருக்கப்
பார்த்து மகிழும் பாக்கியம் பெற்றீர்.

இரத்தினக் கற்கள் இழைத்துப் பண்ணிய
சிம்மாசனத்தில் அவர்கள் இருக்க
கொம்பன் யானையை எண்ணிக் கொண்டே
பழம்பாய் மீதில் படுத்துக் கிடந்தீர்.
அவர்கள் வசித்த அரண்மனை யுள்ளே
தொங்கிய பட்டுத் துணிகளுக்காக
நீண்ட நேரம் நீங்கள் உழைத்தீர்.

அவர்கள் வசித்த அரண்மனை உள்ளே
அந்தப் புரத்தில்,
அரிவையர் துயின்ற
மெத்தையை மேலும் மென்மைப் படுத்த
நித்திரையின்றி நீங்கள் உழைத்தீர்.

அவர்கள் தங்கள் அந்தப் புரத்து
அரிவையர்க் காக அமைத்துத் தந்த
தாஜ்மஹாலின் சலவைக் கற்களை
வியர்வைத் துளிகளால் மினுக்கித் துடைத்தீர்.
தங்கக் குவளையில் தாத்தா பருகினார்
உங்கள் அடுப்பில் பூனை துயின்றது.

5

தெரிந்ததா?
இந்தச் செய்தி தெரிந்ததா?
நீங்களும் உங்கள் தாத்தாமாரும்
எந்த உறவில் இணைப்புண் டுள்ளீர்
என்ற செய்தி இன்று புரிந்ததா?

தாத்தா மார்கள் ஆட்சியாளர்
பேரப் பிள்ளைகள் ஆளப்பட்டோர்.

நீங்கள் எதையும் இழக்கவும் இல்லை
இழக்க எதுவும் இருக்கவும் இல்லை.

ஆட்சியாளரே யானையை இழந்தார்
அவர்களே தங்கள் அரண்மனை இழந்தார்
ஐரோப்பாவில் அரும்பி வளர்ந்த
புயலில் அவர்கள் புரண்டு போயினர்.

அன்று வீசிய அந்தப் புயலில்
அவர்கள் தங்கள் அரண்மனை இழந்தார்
இரத்தினக் கற்கள் இழைத்துப் பண்ணிய
சிம்மா சனத்தைத் திடீரென் றிழந்தார்
தாத்தாமார் தம் சிம்மா சனத்தில்
ஐரோப்பியர்கள் அமரக் கண்டார்.

அவர்கள் வளர்த்த கொம்பன் யானை
ஆடி அடங்கிக் கிடக்கக் கண்டார்.
நீங்கள் எதையும் இழக்கவும் இல்லை
இழக்க எதுவும் இருக்கவும் இல்லை.

6

இழந்ததை மீண்டும்
எப்படிப் பெறலாம்?
தாத்தா மாரின் தத்துவ ஞானிகள்
எழுத்தாளர்கள், கவிஞர்கள் எல்லாம்
எழுந்து வந்தனர்,
இழக்க எதுவும் இல்லா திருந்த
பேரப் பிள்ளையின் பிடரி பற்றினர்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுந்திரு பிள்ளாய் எழுந்திரு...
உங்கள்
விழுமிய செல்வம் விழுங்கப் பட்டது.
யானையைத் தாண்ட பரம்பரை நீங்கள்
உலகின் பாதியை ஆண்டவர் நீங்கள்
உலகை உய்விக்க வந்தவர் நீங்கள்
இன்று நீங்களேன் எல்லாம் இழந்து
ஒன்று மற்றவர் ஆகி யுள்ளீர்...?
எழுந்திரு பிள்ளாய் எழுந்திரு.

விழிக்க வேண்டிய வேளையும் வந்தது
தாத்தா மாரின் தத்துவ ஞானிகள்
எழுத்தாளர்கள் கவிஞர்கள் எல்லாம்
எழுந்து வந்துமை எழுப்பி விட்டனர்.

ஆட்சி யாளர் தாத்தா வாகினர்
ஆளப் பட்டோர் பேரர் ஆகினர்.
ஆடி அடங்கிக் கிடந்த அந்தக்
கொம்பன் யானை உணர்ச்சி கொண்டது.

7

ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும்
தேசிய எழுச்சிகள் திரண்டு கிளர்ந்தன
இரத்த வாடை எங்கும் நிறைந்தது.

ஐரோப் பாவின் ஆட்சி யாளர்
திருப்பி அளித்த சிம்மாசனத்தில்
மீண்டும் உங்கள் தாத்தா அமர்ந்தார்.
ஆமாம்,
நீங்கள் மீண்டும் அந்த
அம்பாரி மீதில் அவர்கள் இருக்கப்
பார்த்து மகிழும் பாக்கியம் பெற்றீர்.

தெரியுமா?
இந்தச் செய்தி தெரியுமா?
நீங்கள் எதையும் இழக்கவும் இல்லை
இழக்க எதுவும் இருக்கவும் இல்லை.

8

பிறைக் கொடி பறக்கும்
இடங்கள் எல்லாம்
நேற்று நடந்த நிகழ்ச்சிகள் என்ன?

யானைக் காரரின் பேரப் பிள்ளாய்
சற்றே கவனி, சற்றே கவனி
இந்தோனேசிய மண்ணிலே சிதறிச்
சிந்திய குருதியைச் சற்றே கவனி
பெருகி ஓடிய குருதியைக் கவனி.
வங்க தேசக் கங்கைக் கரையின்
இரத்தச் சகதியை இன்னும் கவனி.

இந்தக் குருதியைச்
சிந்தியோர் யாவர்?
இந்தக் குருதியைச் சிந்திய மக்களின்
நெஞ்சைப் பிளந்த
தோட்டா யாரது?

உனக்கும் அவர்க்கும் ஆண்டவன் ஒன்றே
உனக்கும் அவர்க்கும் வேதமும் ஒன்றே
நீங்கள் உங்கள் வாழ்க்கையை மீண்டும்
கேட்கும் வரைக்கும்
கேட்கும் வரைக்குமே
பள்ளி வாயிலில் ஒன்றாய்த் தொழலாம்
சகோத ரத்துவச் சரடு திரிக்கலாம்...

யானைக் காரரின் பேரப் பிள்ளாய்
கண்விழித் தெழுக
கண்விழித் தெழுக!
அவர்கள் உனது தாத்தா அல்லர்
அவர்கள் உனது உறவினர் அல்லர்
அவர்கள் உன்னைச் சுரண்டிக் கொழுத்தோர்

மீண்டும் மீண்டும்
சுரண்டுதற் காகச்
சகோத ரத்துவச் சரடு திரிப்போர்...

பிறைக் கொடி பறக்கும்
இடங்கள் தோறும்
உலகில் உள்ள மூலைகள் தோறும்
மஞ்சத் தோடும்
மாளிகை யோடும்
ஆட்சி யோடும்
ஆணவத் தோடும்
வாழ்வோ ரெல்லாம் மற்றொரு சாரார்...

பஞ்சத் தோடும்
பட்டினி யோடும்
வெஞ்சத் தோடும்
வேதனை யோடும்
வாழ்வோ ரெல்லாம் மற்றொரு சாரார்...

யானைக் காரரின் பேரப் பிள்ளாய்
கண்விழித் தெழுக
கண்விழித் தெழுக

சகோதரத்துவச் சாம்பலில் இருந்து
வர்க்க உணர்வுடன் நீவிழித் தெழுக!

பனிமலரின் வருகை தாமதித்து விட்டது.விசயங்கள் கிடைப்பதில் ஏற்பட்ட தாமதமே காரணம்.
இனிமேலும் இத் தாமதத்தைத் தொடரவிடாது இருப்பதற்கு உங்களின் ஒத்துழைப்பைக் கோருகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பனிமலர்**
புதியதொரு தமிழ்ச்சஞ்சிகை.
BCM POLARIS
LONDON WC1N 3XX

ஆறு இதழ்களுக்கான சந்தா விபரம்:

| | ஐக்கிய ராச்சியம் இலங்கை, இந்தியா. | ஏனைய நாடுகள். |
|---|---|---|
| தனி நபர்: | £10.00 | £12.00 |
| நிறுவனங்கள் | £15.00 | £15.00 |
| ஆதரவாளர்கள்: | £20.00 | £20.00 |

சந்தாப் பணம் காசோலை (U.K.மட்டும்), காசுக் கட்டளை, தபாற் கட்டளை மூலமாக அனுப்பப்படலாம்.

பணம் பெறுபவர் PANIMALAR என எழுதப்படல் வேண்டும்.

அனுப்பவேண்டிய முகவரி:

PANIMALAR
BCM POLARIS
LONDON WC1N 3XX
U.K.

**பனிமலர்**
புதியதொரு தமிழ்ச் சஞ்சிகையின்
ஆறு இதழ்களுக்கான

சந்தாப் படிவம்
(தயவு செய்து ஆங்கிலத்தில் எழுதவும்)

பெயர்:..................................................

முகவரி:..................................................
..................................................
..................................................
..................................................

தொலைபேசி இலக்கம்:..................................................
(விரும்பினால்)

******************************************************************************

பனிமலரின் பாவனைக்கு மாத்திரம்.


சந்தா இலக்கம்:..................................................

முடிவடையும் இதழ்:..................................................

அஞ்சல் கட்டெண்:..................................................

பெற்றுக் கொண்டவர்:..................................................

திகதி:..................................................



குருதியில் தோயும் நிகழ்வுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய ஜனநாயகம்
எஸ். மதியழகன்
ஆசிரியர்
21, பாலாஜிசிங் தெரு,
சைதாப்பேட்டை
சென்னை - 600 015

கேடயம்
த.பெ.எண் 2480,
32, தெற்கு கசரத்தோட்டம்,
அமைந்தகரை,
சென்னை, 600 029.

மனஓசை
த.பெ.எண் 2484
24, சாரங்க பாணி தெரு,
மேத்தா நகர்,
சென்னை 29.

நட்புறவு பாலம்
12, முதல் பிரதான சாலை,
நேரு நகர்,
அடையாறு,
சென்னை 600 020.

புதுமை
MAINZER LANDSTR 147
6000 FRANKFURT
WEST GERMANY.

ஓசை (இருமாத இதழ்)
R.Rajagobal
5 RUE HERMEL
75018 PARIS
FRANCE.

அக்னி
Alleenstra Be 17
7144 Asperg
West Germany.

நமது குரல்
Frauenkreis
IZDW
Overweg Str.31
4690 Herne
West Germany.

மனிதம்
Manitham,
POST FACH 12,
3000 BERN-11,
SWITZERLAND.

சவடுகள்
HERSLEBS GT.43
0578 OSLO 5
NORWAY.

தூண்டில்
SUDASIEN BURU
Grosse Heimstr 58,
4600 Dortmond 1,
West Germany.

அஆஇ
POSTBUS 8523
8905 K M LEEUWARDEN
NEDERLAND.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Pathmanaba Iyer
27-B, High Street,
Plaistow
London E13 0AD

**With The Best Compliments from**

A.SRIHARAN
R.S.SRIHARAN (MRS)

# SRIHARANS SOLICITORS

AUTHORISED TO ADMINISTER OATHS
INCORPORATING CHATWANI & CO

223, THE BROADWAY
SOUTHALL
MIDDLESEX
UB1 1ND

TEL: 081 843 9974 (3 Lines)
FAX: 081 574 1766

அட்டை அச்சுப்பதிப்பு செல்வம் அச்சகம் (London) 081- 478 6766

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org